
ராணி முத்து

காஞ்சனா ஜெயதிலகர்

# நெஞ்சத்தில் நீ



# ராணி முத்து

மாதம் இருமுறை இலக்கிய இதழ்

முத்து: 512 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 16 (ஜூலை 1, 2004)


# நெஞ்சத்தில் நீ


காஞ்சனா ஜெயதிலகர்


## 1

குனிந்து, ரெயிலோடு கூடவே ஓடிவந்த அப்பாவைப் பார்த்தாள், தேனுகா. அதுவரை ஒளிந்திருந்த பந்து, திடீரென எம்பி அவளது தொண்டையை அடைத்தது.

"வரேம்ப்பா... நீங்க ஓடாதீங்க..." ரெயிலின், ஜன்னல் கம்பிகள் ஊடே கைநீட்டி ஆட்டியபடி கத்தினாள்.

அப்பாவின் கண்களில் மெல்லிய நீர்த்திரை. முகமெல்லாம் வியர்வை. கசங்கிய கதர்ச்சட்டை.. ஆனாலும் கசங்காத புன்னகை.

புன்னகைக் கலைந்த அவர் முகத்தை அவள் பார்க்க நேர்ந்ததில்லை. பெரிதாய் அவர் சிரிக்கமாட்டார்.

இளம் வயதிலேயே மனைவியை இழந்து ஒரு பெண்

குழந்தையுடன் விடப்பட்ட நடுதரத்துக்கும் சற்று கீழுள்ள தகப்பனுக்கு வாய்விட்டு சிரிக்க சந்தர்ப்பம் எங்கே?

தனியார் நிறுவனம் ஒன்றில் கணக்கராய் வேலைப் பார்த்தவரால் மகளுக்கு படிப்பு தர முடிந்ததே தவிர, பவுசான வாழ்க்கையைக் காட்ட முடியவில்லை.

தேனுகா, புத்திசாலி குழந்தை மட்டுமல்ல... குணசாலியும்கூட.

வானத்து நட்சத்திரங்களை அவள் கேட்டதில்லை. வண்ண பென்சில், ஒரு முழம் பூ, கண்ணாடி வளையல், பள்ளியின் புது வகுப்பில் பழைய புத்தகங்கள்தான் என்றாலும் புது நோட்டுகள், அப்பாவோடு கடற்கரைக் காற்றில் சாப்பிடும் சுண்டல் இவற்றிலேயே திருப்தி கண்டவள்.

ஆனால், எளியவளான அவளுக்குள் நுண்ணிய கலைஉணர்வு ததும்பிக் கிடந்ததைப் பள்ளி ஆசிரியைகள் கண்டு, அதற்கான மேடை சந்தர்ப்பங்களை அளித்தார்கள்.

சகுந்தலை, கண்ணகி, காரைக்கால் அம்மை, நவீன நாடக நாயகியர் என்று பல பாத்திரங்களை ஏற்றவள் தன் திறமை யையும் பட்டைத் தீட்டிக் கொண்டாள்.

மாலை சிற்றுண்டிக்கு அப்பாவுக்கு பிடித்த ரவை தோசை ஊற்றி, பரிமாறியபடியே கேட்டாள்.

'அப்பா, நான் நடிப்புப் பழகணும்.'

'அதான் உனக்குள்ளே ஊறி இருக்கேம்மா.'

'அதில்லை... தரமணியில் அதற்கான கல்லூரி இருக்காம்.'

'அதெல்லாம் நமக்கு எதுக்கும்மா?'

'ஆசையாய் இருக்குப்பா' என்று சொல்ல முடியாமல் தலை கவிழ்ந்தாள்.

'ஆகக்கூடிய கதையாய் பாரும்மா. உனக்குக் கணக்கு அருமையாய் வருது. மேலே படி... நம்ப கம்பெனியில் கணக்கு பிரிவிலேயே உனக்கும் வேலை வாங்கிடலாம்.'

'சரிப்பா...' முனங்கினாள்.

பி.காம். படிக்கும்போதே கம்பெனியில் பகுதி நேர வேலை



அமைய, சம்பளமாக வந்த எண்ணூறு, உதவியாகவே இருந்தது. படிப்பின் அருமை புரிந்து முழுமூச்சாய்ப் படித்தாள். அதே நேரம் கல்லூரி மேடையிலும் இவள் திறமை பளிச்சிட... அந்த வாய்ப்பு வந்தது.

'நீதான் தேனுகாவாம்மா...? இயல்பாய், அழுத்தமாய் நடிக்கிறேம்மா' மேடையில் பாராட்டிய பெரியவரை வணங்கினாள்.

'என் பேர் மணிமாறன். நாடகக் குழு நடத்துறேன். வெளி நாடுகளுக்கும் போயிருக்கோம். வீதி நாடகமும் நடத்துவோம்.'

'நல்லதுய்யா.'

'எங்கக் குழுவில் சேர்ந்திடேன்மா.'

'எங்க அப்பா சம்மதிக்கமாட்டாங்க.'

'அப்ப... உனக்குச் சம்மதம். அப்படித்தானே?'

'எனக்கு நடிப்பு பிடிக்கும். இது, நான் ரசித்துச் செய்யக்கூடிய விஷயம்னு வையுங்களேன். நடிப்பு பயிற்சி கல்லூரியில் சேரணும்னு ஆசை. ஆனா, அப்பா அனுமதிக்கலை.'

ஒரு புது நபரிடம் இத்தனை பேசியது பற்றி அவளுக்கே ஆச்சரியம்தான்.

'அதுவும் நல்லதுக்குத்தாம்மா. அங்கே மூணு ஆண்டு படிச்ச பிறகு அதற்கு பொருத்தமில் இடுப்பை வளைச்சு ஆடணும். ரெண்டே காட்சியில் அரைகுறையாய் வந்து நின்னுட்டு போக பயிற்சி எதுக்கு? எங்கக் குழுவில் சேரு. முதலில் சின்னதாய் வேடங்கள் செய். வெளிச்சம் மேடையில் எந்தப் பகுதியில் விழுது, நாம எந்தக் கோணத்தில் நிற்கணும், எங்கே பார்த்து எவ்வளவு உரக்கப் பேசணும், உடல் அசைவு, உடை உடுத்தும் முறை எல்லாம் பழகிக்கலாம்.'

'நல்லதுய்யா... ஆனா, அப்பாகிட்ட...'

'நான் வந்து பேசுறேன்.'

மணிமாறன், அவள் அப்பாவிடம் வந்து பேசி மசித்தும் விட்டார்!

முதன்முறை 'மணிமாறன் நாடகமன்றத்'துக்குள் போன வளுக்கு புல்லரித்துப்போனது!

ஒருபுறம் இருவர் வசனம் பேசியபடி இருக்க, மறுபுறம் போர்க்களத்துக்கான ஒத்திகை உக்கிரமாய்!

'கல்கியின் சரித்திர நாவல்ம்மா. அதன் ஒரு பகுதியை மட்டும் அனுமதி பெற்று நாடகமாக்கி இருக்கோம். இன்னும் 15 நாளில் பெரிய மைதானத்தில் நாலு வித அரங்கம் போட்டு அரங்கேறும். ஒரு அரைவட்டம் மேடையாகவும் மற்ற பாதி பார்வையாளர் அரங்கமாகவும் இருக்கும். காட்சிக்கு ஏற்ப அந்தந்த பகுதி மட்டும் ஒளியேற்றப்படும்.'

'அருமையாய் இருக்கும்' –ஆர்வமானாள்.

'தினம் வந்து இங்கு நடக்கும் ஒத்திகையைக் கவனி. மறுவாரத்திலிருந்து அந்த அரங்கிலேயே ஓரளவு ஒப்பனையோடு ஒத்திகை நடக்கும். இவங்க ஒப்பனை போடுறப்ப, உடுத்துறப்ப ஒத்தாசையாய் நில்லு. சரித்திர நாடகத்தில் கங்கணம், வங்கி, பில்லாக்கு, குழல் எல்லாம் உண்டு. கவனி. பிறகு...'

அவர் கோடு போட, இவள் கோலம் இழுத்துவிட்டாள்!

அவளது ஆர்வம் அப்படி!

அலுவலக பகுதி நேர வேலையோடு, படிப்பு, நாடக ஒத்திகை என்று கடுமையாய் உழைக்க வேண்டியதிருந்தது.

அதற்கு அவள் தயங்கவில்லை.

சில மாதங்களில் ஓரளவு முக்கிய பாத்திரங்களில் நடித்தாள். பஞ்சகச்சத்திலிருந்து கண்டாங்கி கட்டுவரை அத்துப்படியானது. மணிமாறன் இதைக் கவனிக்கத் தவறவில்லை.

'ஒரு நடிகைக்கு நடன அடிப்படை இருக்கணும்மா. இங்கே வரும் சுதாவிடம் சொல்லி இருக்கேன். ஞாயிறு காலையில் போய் அடிப்படையாச்சும் தெரிஞ்சுக்கோ.'

வாரத்தில் அன்று ஒருநாள்தான் தேனுகா, வீட்டு வேலைக்கென ஒதுக்கியது. சற்று அசந்து உறங்குவதும் அன்று தான். அதையெல்லாம் பொருட்படுத்தாது சுதாவிடம் ஓடினாள்.



சேலையை கணுக்காலுக்கு மேல் சற்று உயர்த்திக் கட்டியதும் அவள் தயங்கிக் கேட்ட முதல் கேள்வி–

'சுதாக்கா, உங்க பீஸ்?'

'சிரமங்களோடு கத்துக்க வர்றே, தேனு. ஆர்வமுள்ள உனக்குக் கற்றுத் தர்றதில் எனக்கும் திருப்தி. அது போதும். ஆரம்பிப்போமா? தைய்யா தை.'

வீட்டிலும் வந்து 'தித் தித் தை' போட்டுப் பார்ப்பாள்.

கையும் காலும் ஒருங்கிணைய அசைவது சிரமமான சமாசாரம்தான். ஆனால், அதுவே சவாலாகவும் இருந்தது. முதலில் உடற்பயிற்சி போல பழகி பின் சற்று நளினம் சேர்க்க, நடனம் போலானது. போகப் போக பாதம், இடுப்பு, கைவிரல், கழுத்து, கண், ஏன் பருவம்கூட இசைவாக இணைய... குதூகலித்தாள்.

தன் நடை சற்று மாறியது புரிந்தது– அழகான அழுத்தம் கொண்ட நடை.

ஒப்பனை பற்றிய அடிப்படை அறிந்தபின் அதிலும் சற்று முன்னேற்றம். தோற்றத்தில் எளிய– ஆனால், பளிச் மாறுதல்கள்.

குரல் தெளிவாகி, கண்களில் தன்னம்பிக்கையின் சுடர். உதட்டில் தனக்குப் பிடித்தத் துறையில் தான் ஈடுபட்டிருப்பது குறித்த திருப்தி வளைவு.

ஏறக்குறைய ஒரு ஆண்டு ஓடிவிட, திடும்மென ஒருநாள் மணிமாறன் இவள் வீட்டுக்கே வந்தார்.

'வாங்க சார்... இருங்க. என்ன குடிக்கிறீங்க?' உற்சாகமாய் உபசரித்தாள்.

'காப்பி கொடும்மா. உன் அப்பாகிட்ட பேசணும்' என்றவர் சாவகாசமாய் அமர்ந்து பேசலானர்ர்.

காலில் சக்கரம் கட்டியவராய் சுழலும் மனிதர் இப்படி காலாட்டியபடி பேசியது அவளைக் குழப்பினாலும் அவர்கள் தனித்துப் பேசவே விரும்பியது புரிந்து ஒதுங்கினாள்... மனமெங்கும் பரபரப்பு.

கடாசியாய் மணிமாறன் அழைத்து, விஷயத்தை உடைத்தார்.

'சினிமா திருவிழா டெல்லியில் நடக்குதும்மா.'

'தெரியும். இம்முறை சீக்கிரம் நடக்குதே?.'

'ம்... நம்ப குழுவிலேருந்து பத்து பேர் போகிறோம். அதில் நீயும் உண்டு.'

இவளுக்கு ஆனந்தத்தில் மூச்சடைத்தது. அப்பாவின் முகத்தைப் பார்த்தாள்.

மகளின் முகத்திலிருந்த ஏக்கத்தை உணர்ந்தவர், 'படிப்பு முடிஞ்சாச்சு. வேணும்ம்னா போயிட்டு வாம்மா' அனுமதி தந்தார்.

ஆனந்த மிகுதியில் கண்ணைக் கரித்தது... மென்று மென்று விழுங்கினாள்.

'சுந்தரம் சார்... உங்க பொண்ணு திறமைசாலி. அது ஒரு பக்கம் இருக்கட்டும். நல்ல பொண்ணு. நாடகக்காரங்க பல பேர் மத்தியில் தனி அழகு நிறைந்தவள். ஆனால், யார்கிட்டேயும் அநாவசியமாய் நின்னு பேசமாட்டாள். ஆர்வமாய் பலதும் கத்துகிட்டாள். இதுமாதிரியான பிள்ளைங்க வந்து உலகத் தரமான படைப்புகளைப் பார்க்கணும்... புரிஞ்சுக்கணும். அது மாதிரி தீனிதான் அவர்களை வளர்க்கும். இத்தனை சீக்கிரமாய் நான் யாரையும் அழைச்சிட்டுப் போறதில்லை... ஆனா, தேனுகா தனி.'

ஆசி கூறுவதாய் அவள் தலையில் கை வைத்தார்.

தழுதழுத்த குரலை சமாளித்து, 'சார், டிக்கெட் செலவு,




**காது வலிக்கிறதா?**

கிம்மல், மூக்குத்தி போட்ட துவாரங்களில் புண் ஏற்படுகிறதா? கவலை வேண்டாம்! பெருங்காயத்தைத் தண்ணீரில் கரைத்து, அந்தத் தண்ணீரால் புண் இருக்கும் இடத்தைக் கழுவினால், விரைவில் குணமாகும்.




அங்கே போய்த் தங்கும் செலவெல்லாம்? பெரும் தொகை என்றால் அப்பா மறுக்கக்கூடும்' என்று ஆதங்கத்துடன் கேட்டாள்.

'அதெல்லாம் நம் குழுவின் செலவு. வருகிற 28-ம்தேதி தமிழ்நாடு எக்ஸ்பிரசில் கிளம்புகிறோம். சரியா?'

கிளம்பும் பரபரப்பில், பரவசத்தில் இருந்தவளுக்கு, இப்போதுதான்... ரெயிலின் கூடவே தகப்பன் ஓடிவரும்போது தான் உயிரான அவரைவிட்டு, தமிழ் மணக்கும் நம்மூரைவிட்டு, சோறு, பொரியல், காப்பி துறந்து— பரிச்சய முகங்களற்ற தொலைவுக்குப் போகப்போவது உறைத்தது.

முழங்காலில் முகம் புதைத்து விம்மி விம்மி அழுதாள்.

## 2

"அடடே... தேனுவை கெட்டின்னு நினைச்சது தப்பு போல" முதல்வகுப்புப் பெட்டியிலிருந்து வந்த மணிமாறன் கிண்டலடித்தார்.

"அப்பாவைவிட்டுப் பிரிஞ்சதே இல்லை, சார்."

"நாங்கள் மாசம், ஆண்டாகப் போகிறோம்? ரெண்டே வாரம்மா."

ஈர முகத்தை அழுந்தத் துடைத்தாள்.

"விழாவில் திரையிடப்போகும் படங்களின் அறிமுகப் புத்தகம் பார்த்தேன். அதில் ஒரு சீனப்படம், நம்மூர் '12-பி' சாயலில் இருக்குது. அதாவது தண்டவாளமாய்ப் போகும் இரட்டைக் கதை. நமக்குப் பிடிச்ச போக்கை நாம் எடுத்துக்கலாம்."

தேனுகாவின் விழிகளில் நீர் வற்றி, ஆர்வம் நிரம்பியது.

"ஒரு இத்தாலிய சினிமாகூட பிரமாதமாய் இருக்குதாம் சார். தன் தாயை மாபியா கொலை செய்ததைக் கண்ட ஒரு சிறுவனின்

மனச்சிதைவு, பிசைவு பற்றி" என்றாள்.

"அடடே... நீயும் அந்தப் புத்தகத்தைப் பார்த்தாச்சா?"

"உங்க மேசையில் இருந்தது. புரட்டினேன்."

பேச்சு, உலக சினிமாவைக் கடைந்தது.

அம்மாவைத் தேடும் குழந்தைக்கு கிலுகிலுப்பையைக் குலுக்கிறது போல சினிமா பற்றிப் பேச, தேனுகாவுக்கு அழுகை மறந்தாச்சு.

பக்கத்திலிருந்த லதா கேலி செய்ய, சிரிப்பு பரவியது.

பேச்சும் சிரிப்புமாய், நேரம் கரைந்தது. ரெயிலை போலவே கடிகார முட்களும் பறந்தன.

வேளாவேளைக்கு உணவு, உறக்கம் என்றிருந்து 36 மணி நேர பயணத்தின் பிறகு அவர்கள் இந்திய தலைநகரில் இறங்கியபோது உடல், உள்ளம் முழுக்க புத்துணர்ச்சி!

தமிழ்நாட்டு தொழில் அதிபரின் விருந்தினர் மாளிகையில் தங்கிய அவர்களின் குழுவுக்கு அடையாள அட்டையும், போக வர வாகனமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குளித்து, தொடக்க விழாவுக்கு தயாராகிப் போனவளுக்கு அங்கு திரண்ட கதம்ப கூட்ட மக்களைக் கண்டு ஆச்சரியம்தான். அவர்களின் மொழி மட்டுமல்ல, நாகரீகமும் கதம்பம்தான்.

நவீன நாகரீகத்தை உருவாக்கவும் காக்கவுமே பிறவி எடுத்தது போன்ற பகட்டான கூட்டத்தோடு, கசங்கிய குர்தா, ஜோல்னா பை சகிதம் அறிவு ஜீவிகளும் கலந்திருந்தார்கள்.

மூளை மழுங்கும்வரை ஒரு நாளைக்கு மூன்று, நான்கு எனப் படங்களைப் பார்ப்பதும்,பின் அவற்றை அலசி விவாதிப்பதுமாய் ஐந்து நாள் கழிந்த பிறகுதான் அவளுக்கு உறைத்தது.

"எங்கே, மணிமாறன் சாரை காணோம்?"

"அவர் சிநேகிதரைப் பார்க்க போயிருக்கார்."

"எங்கே?"

"சிம்லா!"



"அது இமாச்சல்பிரதேசத்திலேல்ல இருக்கு?"

"அதுக்காக கூப்பிட்டா இங்கே வருமா என்ன? நாம்தான் போகணும்" நக்கலடித்தான் விசுவாஸ்.

"எப்போ திரும்புவாராம்?"

"நாளை மறுநாள் வந்திடுவார் போல— விமானம் இருக்குதே..."

"ஒரு வார்த்தை சொல்லலியே?" குறைபட்டாள்.

"பால்ய சிநேகிதமாம்... அதான்..."

"ஒருவேளை சிநேகிதியோ... இல்லைன்னா ஏனிந்த இரகசியம்?"

லதா இழுத்தாள்.

"சந்தேகப் பிசாசே... யோகினைப் பார்க்கப் போயிருக்கார்— எழுத்தாளர் யோக தேவனை."

"அடடே... இம்முறை சாகித்ய அகாடமி விருதுக்குக்கூட அவர் பேர் அடிபட்டுதே?"

"ரெண்டு, மூணு படைப்புகள்தான்— ஆனால் பிரமாதமான எழுத்து..."

"நம்மையும் கூட்டிட்டுப் போயிருக்கலாம்."

"ஆங்... இதுக்குத்தான் ஆசான் நழுவிட்டார். தவிர, இடம் கொள்ளை அழகாய் இருக்குமாமேன்னு ஆளாளுக்கு சுற்றுலா கிளம்பிவிட்டால்?"

"நாம வந்த வேலையைப் பார்ப்போம்ப்பா... உலக சினிமாக்களை இப்படி பார்க்கிற சந்தர்ப்பம் கிடைக்காதான்னு ஏங்குகிற வாய்ப்பு— இருக்கிறதை விட்டுட்டுப் பறக்கிறதுக்கு ஆசை ஏன்?"

"இதெல்லாம் வேறு!"

"கிளுகிளுப்பைவிட வன்முறைதான் அதிகம். மனம் பதைக்குது..."

ஆனால் அடுத்த ஒரு மணி நேரத்தில் வந்த தொலைபேசி அழைப்பு மறுபடி சலசலப்பை உருவாக்கியது.

'என்ன தேனுகா, சிம்லாவுக்குப் போகணுமா?'

'எதுக்காம்— மணிமாறன் சார் எதுவும் சொன்னாரா?'

'தெரியலை... அவள் சினிமா சுருளில் சுருண்டுகிடக்கிறாள்... விட்டுட்டுக் கிளம்புவாளா?'

'முக்கியமான படங்களெல்லாம் பார்த்தாச்சே... தவிர யோகதேவன் பெரிய எழுத்தாளர்... சிம்லா போய் அவரைச் சந்திக்கிறது சாதாரண வாய்ப்பா?'

விவரத்தைக் கேட்ட தேனுகாவுக்கு முதலில் திகைப்புதான். ஆனால், ஆளாளுக்கு விவரங்கள் சொல்லி ஊக்கப்படுத்த, அவளுக்கே ஆர்வம் கிளர்ந்தது.

யோகதேவன் என்ற பெயர் பரிச்சயமாய் இருந்தாலும் அவர் எழுத்தை அனுபவித்ததில்லை.

ஆனால்,'ஏன் தனக்கு மட்டும் இந்த அழைப்பு?' யோசித்தாலும் கிளம்பத்தான் செய்தாள். மணிமாறனின் அழைப்பை மறுக்க மனமில்லை.

இரவு பத்து மணிக்கு டெல்லியில் ரெயில் ஏற்றிவிட்டார்கள்.

'இது காலை ஐந்தரைக்கெல்லாம் 'கால்கா' போகும். அங்கிருந்து ஒரு பொம்மை போலான சின்ன ரெயிலில் ஏறினால் மூணு மணி நேரப் பயணத்தில் சிம்லா' என விவரம் சொன்னார்கள்.

அதிகாலை 'கால்கா'வில் சூடான சாயா பருகி, அழகான குட்டி ரெயிலில் ஏறியவளுக்குள் இனம்புரியாத மகிழ்வு. ஒரு பெட்டிக்கு 12 நபர்களே— அதிலும் பெரும்பாலானோர் தேனிலவு ஜோடிகள்.

உற்சாகமாய் மலையேறிய ரெயிலில் அமர்ந்தவள், கவனத்தை வெளியேயே வைத்தாள். உள்ளே இருந்தவர்களில் கிசுகிசுப்பும், கிளுகிளுவென்ற நகைப்பும், சின்ன உரசல்களும், இசகுபிசகான முத்தங்களும் அவளுக்கு மகா கூச்சமாக இருந்தது. ரெயிலின் அசைவுக்கு ஏற்ப தன் இதயமும் தடதடத்தது போலிருந்தது. இனம்புரியாத இனிய பரபரப்பு ஒன்று உள்ளே பரவியது.



ஏன் அது?

தன் வாழ்வில் ஒரு முக்கிய திருப்பம் ஏற்படப்போகிறது என்பது போல ஒரு உள்ளுணர்வு!

ஆனால், மணிமாறனோ, ஏதோ மாதம் ஒருமுறை இவளை இதுபோல புது மண்ணில் வரவேற்பவர் போல வெகு இயல்பாகவே சிம்லா ரெயில் நிலையத்தில் நின்றார்.

"வாம்மா... எப்படி இருந்தது குட்டி ரெயில் பயணம்?"

"சுவாரஸ்யம்தான் சார்... புது அனுபவம்."

பிசின் போட்டு ஒட்டியது போல தேனிலவு தம்பதிகள் ஜோடிகட்டிப் போவதை ஓரக்கண்ணால் பார்த்து புன்னகைத்தவர் சொன்னார்— "நான் இங்கே வந்து எட்டு, பத்து ஆண்டு இருக்கும்... ஊர் மாறிடுச்சும்மா... முன்னே சரிவெல்லாம் வரிசையாய் பைன் மரங்கள் நிற்கும். இப்ப 'கான்கிரீட்' வீடுங்க."

அவர் சொன்னது உண்மைதான். நெருங்க அடுக்கிய தீப்பட்டிகளைப் போல மலைச்சரிவு எங்கிலும் வீடுகள். புகைபடிந்த தகரக் கூரைகள், காயப்போட்ட கம்பளி உடைகள்... ஜன நெரிசல்....

"ரொம்ப அழகும் அமைதியுமான ஊராய் இருக்கும்னு எதிர்பார்த்தேன் சார்."

ஒடுங்கிய சாலைகளில் அவர்களது கார் ஊர்ந்துபோனது.

"வட இந்தியா நம் இடம் போல சுத்தமும் விஸ்தாரமுமாய் இராது. ஜனத்தொகையும் அதிகம். தவிர இது நகரம். ஆபீஸ், கடைகள் இருக்கிற பகுதி. சற்று ஒதுங்கிப் போனால் பசுமையாய் இருக்கும்."

"ஓகோ... ஆனா சார்... என்னை... ஏன்... திடீர்னு?"

அவள் கேள்வியை முடிப்பதுக்குள் அவர் முந்திக்கொண்டார். "இங்குள்ள விருந்தினர் விடுதியில் நீ தங்க ஏற்பாடு செய்திருக்கேன்ம்மா, தேனு. அசதி தீர குளி, இன்னும் தூங்கணுமா தூங்கு. இல்லை, ஊரை ஒரு சுற்று சுற்று. யோகியை நீ மாலை

நாலரைக்குத்தான் சந்திக்கணும்."

"எங்கே சார்... எதுக்கு?"

"இங்குள்ள சமையல்காரங்களுக்கு நம்மூர் சமையல் தெரியுமாம். வத்தக்குழம்பும் அவியலும் செய்யச் சொன்னேன். ஒரு பிடி பிடி. நாலு மணிக்கு நடக்க ஆரம்பிச்சா 15 நிமிடத்து பொடிநடையில் யோகின் வீட்டுக்கு வந்திடுவே."

"அப்ப நீங்க?"

"அவனோடு தனியாக சிலது பேசவேண்டியது இருக்குது. இது என் போன் நம்பர். நாலு மணிக்கு போன் போடு, வழியைச் சொல்லுறேன்... வரட்டா?"

இனி கேள்விகள் கேட்டாலும் பதில் வராது என்பது புரிந்துபோனது. வெறுமே தலையாட்டினாள்.

ஆனால், அவளுள் பல கேள்விகள் பெருகிக் குதித்தன. அதில் முக்கியமானது, தான் ஏன் இங்கே வரவழைக்கப்பட்டோம்? அதன் காரணம் இத்தனை மர்மமாய் ஏன் வைக்கப்பட வேண்டும் என்பதுதான்!

## 3

அன்று மாலை சிம்லாவின் தெருவில் இறங்கி நடந்தவளுக்கு, கேள்விகள் எல்லாம் நீரில் இட்ட மணலாய், அடியில் தங்கி விட்டன.

காரணம்— சுற்றிலும் பச்சைப் பசேல் என மனதை மயக்கிய இயற்கையே. ஒரு சில வளைவுகளிலேயே ஊரின் நெரிசலைவிட்டு விலகிவிட, பசுமை மிகுந்திருந்தது.

ஓங்கிய மரங்களிடையே ஆறு போல வளைந்து ஓடிய குறுகலான சாலைகள். முதுகில் பாரம் சுமந்து குனிந்தபடியே அதில் விரையும் சப்பை முக மனிதர்கள்.

உடன் நடந்த ஒரு பள்ளி மாணவியிடம் பேச்சு கொடுத்தாள்.



"என்ன விசேஷம்? ஏன் எல்லோரும் ஏதோ சுமந்தபடி போறாங்க?"

துல்லியமான ஆங்கிலத்திலேயே பதில் வந்தது.

"விசேஷமெல்லாம் இல்லை, தீதி. இது இங்கே தினப்படி காட்சி. இந்தப் பகுதியில் லாரி, பஸ் போக்குவரத்து கிடையாது. இங்கிருந்து மேலே போனால் கார்களுக்குகூட அனுமதி கிடையாது. மேலே இருக்கும் 'மால்' அதாவது கடைத் தெருவுக்கான பொருட்கள் அத்தனையையும் இப்படி மனிதர்கள் தான் சுமந்து போகணும்."

"அப்ப 'மால்'லில் வாகனங்களே இருக்காதா?"

"அங்கு நாம் கால்களை நம்பித்தான்!" சிறுமி அழகாய்ச் சிரித்தாள்.

"பஸ் நிலையம் அருகே டாக்சி நிலையத்தையும் பார்த்தேனே?"

"அதுவரைக்கும்தான் வாகனங்களுக்கு அனுமதி. முன்பு எல்லோரும் நடந்து மேலேறுவோம். இப்போது அரசாங்கமே 'லிப்ட்' வச்சிட்டாங்க. மேலே போக அஞ்சு ரூபாய். ஆனால், மேலே போய்விட்டால் வாகன புகை, இரைச்சல்னு தொந்தரவு இல்லாமல் இருக்கலாம். சூடான 'பாப்கார்ன்' சாப்பிட்டபடி நடுவீதியில் நடப்போம்."

"வித்தியாசமான ஊர்தான்."

பாதை சரிவில் இவர்கள் கீழ்நோக்கி நடந்ததால் மூச்சு இரைக்காமல் பேச முடிந்தது. ஏறுவது இத்தனை இலகுவாய் இராது.

"கீழே போகப் போக வீடுகள்தான்."

"நான் 'ரேணூஸ்' எனும் வீட்டுக்குப் போகணும்."

"ஐந்தே நிமிடம்தான் ஆகும். இந்த வழியே போங்க."

சற்று கோணலாய் விலகிப் பிரிந்த பாதையைக் காட்டினாள், மாணவி.

"நன்றி."

'மனித நடமாட்டம் இன்றி தனிமையாய் இருந்தது. இந்தப்

பாதை. கண்டிப்பாய் விப்டில் ஏறி, அந்த 'மால்'லை பார்த்து வரவேண்டும்— நம் சென்னை பாண்டி பஜாருக்கு நேர்மாறாய் இருக்குமோ? அங்கும் ஒருநாள் வாகனங்களைத் தடை செய்து விட்டால்?' அமைதியான சென்னை பாண்டி பஜாரை கற்பனை யில் உருவாக்கி தனக்குத்தானே புன்னகைத்து நடந்தவள் எதிரே வந்த காரை கவனிக்கவில்லை.

வளைவில் சத்தமின்றி பாய்ந்த கார் பிரேக்கிட்டு 'கிரீச்'சென குலுங்கி நின்றபோதிலும் அதிர்ச்சியில் இவளுக்கு இதயம், தொண்டைக்கு எம்பியது.

காரின் நுனி தன்னைத் தொட்டதாலோ அல்லது சத்தமின்றி வந்த அதைக் கண்ட அதிர்ச்சியாலோ அவள் தடுமாறினாள். ஏன் என்பது தெரியவில்லை. ஆனால், நிலைகுலைந்து பாதை ஓரத்தில் விழுந்திருந்தாள். சரிந்த பாதை என்பதால் முழுக்க தரையில் கிடக்காமல் சரிவாய் விழுந்தவளுக்கு சற்று கண்ணை இருட்டியது. ஆனாலும் புலம்பினாள்—

"கண் மண் தெரியாமல் ஓட்டுறது... கையில் கார் வந்துட்டா ஊருக்கே ராஜான்னு நினைப்பு."

"சினிமா நாயகிங்கிற நினைப்பில் மிதப்பாய் வர்றது... கை, காலை உடைச்ச பிறகு நம்ம உயிரை வாங்கிறது... ச்சே..."

காரின் உள்ளே 'பிரேக்'கை அழுத்தியவனும், அதன் விளைவால் தப்பி, ஆனால் அஞ்சி விழுந்தவளும் மற்றவரை ஏகக் காலத்தில் திட்டினார்கள்— தமிழில்!

இரண்டாயிரம் சொச்சம் மைலுக்கு அப்பால் தாய்மொழி யைக் கேட்டதும் கடுத்திருந்த இருவரின் கண்களும் சற்று கனிந்தன. ஆவலுடன் அடுத்தவரை ஆராய்ந்தன.

"தமிழா?"

"நீங்களும் தமிழ்தான் போல... ஆனாலும் காரை இப்படியா?"

அவளை இடைமறித்தவன் "ரோட்டிலேயே நடன அரங்கேற்றம் செய்வதற்காய் இத்தனை தூரம் வந்திருக்கிங்க போல... ஆனா, அது எனக்குத் தெரியாதே?" இடக்காகவே வந்தது பதில்.



கை ஊன்றி எழுந்து நின்றவள் மேலே ஒட்டியிருந்த சருகுகளை தட்டிவிட்டாள்.

அவன் சொன்னது உண்மைதானோ?

"சாரி... ஏதோ நினைப்பு... ஆனா நீங்களும் வளைவில் 'ஆரன்' ஒலிக்காமல் வந்தது தப்புதான்."

"ஊருக்குப் புதுசா?"

அவன் மன்னிப்பு கோரவில்லை என்பதைக் கவனித்து மனதுள் பொருமினாள்.

'பண்ணுறதைப் பண்ணிட்டு விசாரணையைப் பாரு.'

"இன்னைக்குக் காலையிலதான் வந்தேன்."

"அப்புறம் இயற்கையை ரசிக்காமல் வேறென்ன சிந்தனை?"

இப்போது சற்று பரிவுடனேயே விசாரித்தவன், காரைவிட்டு இறங்கினான்.

"சென்னை பற்றி நினைச்சேன்."

"கூடவே சென்னையில் இருக்கும் உறவுகளைப் பற்றியும்"

"உறவைப் பொருத்துதானே ஊரின் மேல் அபிமானம் வரும். சென்னை வாழ்க்கை கொஞ்சம் அவசரக்கதியானது. அதேநேரம் சுவாரஸ்யத்துக்கும் குறைவில்லை. இந்த ரோட்டில் நிறைய திருப்பங்களா? ஆக, வாழ்வின் திருப்பங்களையும் யோசிச்சேன்" பாதி தனக்குள்ளாகவே பேசினாள்.

முகவாய் தூக்கி அவளைக் கீழ் கண்ணால் பார்த்தவன், "அம்மணி கற்பனாவாதியா... என் பெரியப்பாவைப் போல! அவருக்கும் மனிதர்கள் முக்கியம். ஆக எல்லோரையும் நம்பிப் பழகுவார். மனுசங்க ஆதாயத்துக்காகத்தான் பழகுறாங்கங்கிறது பெரியப்பாவுக்குப் புரியலை."

"எல்லோரும் அப்படியில்லை."

"நான் பார்த்தவரை நெருங்குகிறவங்க காசு பிடுங்கத்தான் வர்றாங்க... அவரை அதுமாதிரி ஏமாற்று பேர்வழிகளிடமிருந்து காப்பாற்றும் சிந்தனையில் நானும் மும்முரமாய் இருந்ததால் தான் காரை வளைவில் வேகம் குறைக்காமல், ஆரனும்

ஒலிக்காமல் வந்தாச்சு... இதை எதிர்பார்க்கலை..."

"அவரவர் வாழ்வில் நடக்க இருப்பது நடந்துதான் தீரும். அதை நாம் எதிர்பார்க்கிறோமோ இல்லையோ?"

அறிமுகம் இல்லாதவர்களிடம் இப்படி பேச்சு வளர்ப்பவள் இல்லை, அவள். ஆனால், இன்று பேசினாள்.

"விதியைக் குறிப்பிடுறீங்களா? அப்ப மதி... புத்தியின் பங்கு என்ன?"

"கடவுள் ஒவ்வொரு வாழ்க்கைக்கும் ஒரு திட்டம் வச்சிருக்கார். அது மனித சாமர்த்தியங்களை மிஞ்சியதுன்னு நம்புறேன். ஆனா, நல்லவர்களுக்கு நல்லதுதான் நடக்கும். அல்லது நல்லதாய் முடியும்."

கேட்டவன், சற்று கோணலாய்ப் புன்னகைத்தான்.

"ஏதோ நாடக வசனம் போலிருக்குது."

அவனது அந்த அலட்சியமான தோளின் குலுக்கலில் அவளது கோபம் மறுபடி துளிர்த்தது.

சிவந்த முகத்தை அவனிடம் காட்ட விரும்பாமல் திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

'ச்சே... ஒரே மொழிக்காரர் என்ற அபிமானத்தில் வாய் கொடுத்தது தப்பு. மனிதனுக்கு நாக்கு நீளம்!'

அவனும் கிளம்பிவிட்டான் என்பது காரின் சன்ன உறுமலில் புரிந்தது.

'தன் பெரியப்பாவைப் பொல்லாதவர்களிடமிருந்து காபந்து பண்ணுகிறாராம். ஒருவேளை இவர் குறிப்பிட்ட பெரியப்பா யோகதேவனா? அவரும் தமிழர் என்பதால் இருவரும் உறவினராய்தான் இருக்கணுமா என்ன?'

'நடக்க இருப்பவை நடந்தே தீரும். யாரும் தடுக்க முடியாது' என்ற ரீதியில் சற்று முன் தெரியாதவனிடம் முழங்கியவள், 'ஆவது ஆகட்டும்! அப்படி இருந்தால் இருக்கட்டுமே' என்று தன்னை தேற்றிக்கொண்டு நடந்தாள்.

ஆனால், இன்னும் உடலில் ஒருவித பதற்றம் மிச்சமிருந்தது.



'இந்த மணிமாறன் சாருக்கு அப்படியென்ன வேலை? இத்தனை தூரம் வந்தவளை நேரில் வந்து கூட்டிப்போயிருக்க வேண்டாமா? போனிலேயே...'

'உன் விடுதியிலிருந்து 15 நிமிட நடைதான்ம்மா. வந்திடு' என்றிராவிட்டால் இப்படி கற்பனையில் மிதந்து, தடுமாறி விழுந்து, இந்த கார் பேர்வழியின் நக்கலை அனுபவித்திருக்க வேண்டாமே!'

'வேற்று மாநிலத்தில் தமிழரைப் பார்த்தால் ஒரு பாசம் தோன்றாதோ?'

'அடி ஏதும் படலியே? சாரிங்க.'

'உங்களை எங்கேனும் இறக்கிவிடணுமா?'

'எங்கே தங்கி இருக்கீங்க, முடிந்தால் மறுபடி பார்ப்போம்' இப்படி எந்த உபசார வார்த்தைகளும் இன்றி நான் நடனமாடுவது போல வந்தேனாம்... இவரது பெரியப்பாவை எல்லோரும் அரண்ட நினைக்கிறார்களாம்!'

பணம் படைத்தவர்களுக்கே உண்டான பயம்!

அவன் வந்த காரும்கூட விநோத வடிவிலிருந்தது. பரிச்சயமான 'மாடல்' அல்ல. வெளிநாட்டு தயாரிப்பு போலும். பழுப்பும் கருப்புமாய் குடம் போன்ற வடிவில்... ஆனால், அதிலிருந்து இறங்கியவன் மட்டும் நெடுநெடுவென்று வளர்த்தி.

அதற்கேற்ற கம்பீரம். முகத்தில் மட்டும் கனிவும், புன்னகையும் சேர்ந்தால் ஆள் பேரழகன்! ம்ப்ச்... ஆனால், அவை இல்லையே!

இவளின் நினைவுகளுக்கு முற்றுப்புள்ளி இட்டது அந்த பச்சை 'கதவு.'

மணிமாறன், அவளுக்குச் சொன்ன அடையாளக் குறிப்பு, அது. அந்த அகன்ற பச்சை மரக்கதவை திறந்து சாத்தியவள், வீட்டை நோக்கி நடக்க, மீண்டும் அவள் கால்கள் திகைத்துத் தடுமாறின.

காரணம்— அந்த கார்!

அவன் ஓட்டி வந்த விநோத வாகனம், வீட்டின் இடதுகோடியில் நின்றது. என்றாலும் மீண்டும் தன்னை நெட்டித் தள்ளியது போன்ற பிரமை.

ஆக, யோகதேவன்தான் இந்த கார் ஆசாமியின் உறவினரா? அல்லது தன்னைப் போல பார்த்துப் போக வந்தவராயும் இருக்கலாமே... எதிரே போன வாகனம் எப்படி இங்கே? வேறு பாதை உண்டு போலும்!

யாரோ தன்னைப் பார்ப்பது போன்ற உணர்வில் நிமிர்ந்தவளுக்கு, வீட்டு வாசலில் நின்று ஒரு பெண் தன்னையே பார்ப்பது புரிந்தது.

அவளது சேலைக்கட்டும், பொட்டும் 'நான் தமிழச்சி' என்று அறிவித்தன.

முகம் இளக, முறுவலித்தாள், தேனுகா.

"வாங்கம்மா... நீங்கதானே தேனுகா?"

"ஆமா" முறுவலை மேலும் அகலமாக்கினாள்.

"வாங்க. ஐயா, உங்களைத்தான் எதிர்பார்த்து இருக்கார்."

இந்தப் பெண்ணுமே விருந்தாளியை மிக எதிர்பார்த்த தினுசில் இவளையே குறுகுறுவென பார்த்த விதத்தில் இவளுக்கு கூசியது.

"மணிமாறன் சாரா?"

"அவரும்தான். இப்படி வாங்க."

இவள், நடையைத் தொடர்ந்தாள்.

மரத்தளம் கொண்ட அவ்வீடு, ஒவ்வொருவருடைய எடை, பாத அழுத்தத்தைக் கொண்டே துல்லியமாய்க் கணித்து அதற்கேற்ப முனங்கியது!

"இந்த அறைதாம்மா" பெண்மணி இடதுபுறம் கை காட்டி விட்டு நகர, ஆழ மூச்செடுத்துவிட்டபின், உள்ளே நுழைந்தாள்.

அங்கிருந்தவர்கள் இரண்டே பேர்தான்.

மணிமாறனைத் தவிர்த்து தலை நரைத்த ஒருவர் என்பதைக்



கண்ட பிறகு அம்பாய் விறைத்திருந்த அவளது உடல் தளர்ந்தது. மூச்சும் இயல்பாய் வெளியேறியது.

அதுக்கு அந்த 'கார்' பேர்வழி அறைக்குள் இல்லாததே காரணம் என்பது உறைத்தது.

அமர்ந்திருந்த பெரியவர் எழுந்தார்.

சற்று தளர்ந்திருந்தாலும் சீரான உடல்— நிமிர்ந்த தோற்றம்.

கைக்கூப்பி இவளை வரவேற்றார்.

தானும் அவசரமாய் கைக்கூப்பி, அவரை நோக்கி நடந்தவளுக்கு அவரது கண்கள் தன் மீது பதிந்த விதம் ஒருவித அவதியாய் இருந்தது.

மேலும் நெருங்கவும்தான் அவர் கண்கள் தளும்பி இருந்ததைக் கவனித்தாள்.

முகம் வெளுத்து, நீண்ட மூக்கின் நுனி மட்டும் சிவந்திருக்க கும்பிட்ட அவர் கைகள் அப்படியே இவளைத் தொழுவது போலவே இருந்தன.

# 4

தேனுகா, தேநீரைப் [illegible] த்திருந்தவர், பின் பேசினார்—

"உன்னை வரவழைக்கச் சொன்னது நான்தான். என்ன ஏதுன்னு 'பிகு' பண்ணாமல் வந்ததுக்கு ரொம்ப நன்றிம்மா..."

"பரவால்லை சார்... நீங்க சிறந்த எழுத்தாளர்ன்னு..."

"மனதில் ஊறியதை அப்பப்ப காகிதத்தில் வடிச்சிருக்கேன். இப்ப ஏதும் எழுதத் தோணலை... பழசை அசைப் போட்டாலே போதுங்கிற மனநிலை."

மணிமாறன் குறுக்கிட்டார்— "நானும் சேர்ந்தே அசை போடலாம்னு சிம்லா வந்தேன்... நம்ம நாடகக் குழு பற்றி யோகின்

ஆர்வமாய்க் கேட்டதால் நம்ம குழுவின் புகைப்படம் ஒன்றைக் காட்டினேன்..."

"அந்தக் குழுவின் முப்பது பேரில் ஒருத்தியாய்தான் நீ நின்றாய். ஆனால் உன்னை உடனே கண்டு பிடிச்சிட்டேன், நான்..."

இவள் புருவங்கள் புரியாமையில் சுருங்கின.

"அதாவது நீ அவளைப் போலவே இருப்பதை கண்டு விட்டேன்... அதாவது... இன்னொரு டீ குடிக்கிறியாம்மா..."

"இல்ல சார்... யாரைப் போல?"

"எனக்கு ஒரு டீ ஊத்துறியா?"

இவள் கலந்து நீட்டியதை வாங்கிய அவரது விரல்கள் நடுங்கின. இரண்டு மிடறுகள் குடித்தவர் பேசினார்—

"நடிகையாவது அவள் இலட்சியம்... வெறின்னே வை. அந்தளவு அழகும் திறமையும் கூடவே தன்னம்பிக்கையும் இருந்ததே. நான் சொல்லுறது 35 ஆண்டுக்கு முந்தின காலத்தைப் பற்றி... அப்பதான் என் முதல் நாவலை ஒரு வங்காளி படமாய் எடுத்தாங்க. அதே நேரம்தான் அவ... என் ரேணுகாவும்... ரேணுகா தேவி என்றால்தான் அவளைத் தெரியும். சினிமாவில் துடியாய் கால் பதிச்சாள்.

நர்கீஸைவிட அழகு, சாய்ராவைவிட திறமை இருந்ததால் அவங்களைவிட மேலான நட்சத்திர அந்தஸ்து அவளுக்காகக் காத்திருந்தது. மீனாகுமாரி இறந்தாச்சு... அந்த இடத்தை ரேணுகாதான் நிரப்ப முடியுங்கிறது எல்லோருடைய முடிவு."

சொன்னவரின் கண்களில் வயதை மீறித் தெறித்த மின்னல், அந்த இளம் நட்சத்திரப் பெண்ணின் அழகு, ஆற்றலைத் தெரிவிக்க... ஆவலாய்க் கவனித்தாள்.

"ரேணு. ஆந்திரப் பெண். ஆனா, வளர்ந்ததெல்லாம் புனாவில். உன்னைப் போல் நாடகங்களில் நடிச்சா. பிறகு ஒரு கலைப் படத்தில் நடிக்க கிடைத்த வாய்ப்பை தீர்க்கமாய்ப் பயன் படுத்திக்கொண்டாள்.

படத்துக்கு அவளால் ஜீவனும் அந்தஸ்தும் சேர, விருதும்



வந்தது... அந்தப் படத்தைப் பார்த்த நான் என்வசத்தில் இல்லை. ரேணுகாவை சந்திக்க, விருது வழங்கும் விழாவுக்குப் போனேன். படத்தில் ஆவேசமான கிராமப் பெண்ணாய் நடிச்சவ, நேரில் பளிங்குபொம்மை போல் இருந்தா... யாரிடமும் ஒரு அநாவசிய வார்த்தை, ஏன் பார்வைகூட இல்லை..."

மணிமாறன் இதெல்லாம் அறிந்தவர் எனினும் குறுக்கிடாமல் கவனித்தார். "நான் அவளது நடிப்பை, நடிப்பின் வீச்சை, நுணுக்கத்தைப் பாராட்டினேன்... புகழ், அவளுடைய அழகுக்கு இல்லை, தான் அனுபவித்து உருவாக்கிய பாத்திரத்துக்கு என்று புரிந்ததும், கனிந்தாள்."

"ம்ம்..."

"தவிர இவன் எழுதிய கதைதான் சினிமா துறையை ஒரு குலுக்கு குலுக்கியதென்பது தெரிய, அவளும் ஆர்வமாகி விட்டாள். கலைஞர்களிடையே தோன்றும் பரஸ்பர மரியாதை, பிரியம் வளர்ந்து..."

காதல் கதை கேட்கும் லயிப்பில் இருந்தவளை அடுத்து வந்த வார்த்தைகள் உலுக்கின.

"அடுத்த படம் பாதி வரை வளர, எங்கள் நேசம் இறுகியது. என் ரேணு ஒரு விபத்தில் இறந்துட்டா..."

"கடவுளே... என்ன... எப்படி?"

"காரோட்ட கத்துக்கிட்டா... முழுக்க பழக்கம் வரும் முன் போகக்கூடாத வேகத்தில் ஓட்டி..."

அவர் கண்கள் வறண்டு, இலக்கின்றி வெறித்தன.

"சினிமாவில் ஒரு கல்வெட்டாய் பதிஞ்சிருக்க வேண்டிய அவள் பெயர் நட்சத்திரமாய் கண்சிமிட்டி மறைஞ்சிடுச்சு..."

"ரொம்ப வருத்தமாய் இருக்குதுங்க..."

"நானும் வருத்தப்பட்டேன்ம்மா... இனி உயிர் வாழக் கூடாதுங்கிற முடிவுக்கு வந்தேன். பிறகு நடை பிணமான ஒரு வாழ்க்கை... என் வாழ்வுக்கு ஒரு அர்த்தம் தரணும்னா ரேணுவைப் பற்றி வருங்காலம் மறந்துடாத அளவுக்கு ஏதேனும் ஒரு தடயம்

விட்டுட்டுப் போகணும்னு தோணுது..."

"புத்தகம் எழுதலாமேங்க?"

"அவ நடிகை... அவள் திறமையை, வாழ்வை கவிதை போல படச்சுருளில் பதிவு செய்தால் பொருத்தமாய் இருக்கும்...வெனிஸ் திரைவிழாவுக்கு அனுப்பக்கூடிய அளவில் சிறந்த, படம்."

இரு ஆண்களும் பேச பேச இவளுக்குக் குழப்பம் கூடியது.

'இதையெல்லாம் தன்னிடம் சொல்லவேண்டிய காரணம்?'

"நீ ரேணுகாவின் சாயலில் இருக்கேம்மா... உங்க பெயரிலும் கூட ஒரு அபூர்வ ஒற்றுமை இருக்கே— அதேபோல... அதே முகம், விசாலமான கண்கள்... நினைப்பை அப்படியே காட்டக் கூடியவை, அவை. என் கதையைக் கேட்டபோது உன் கண்களில் ஓடிய உணர்ச்சிகளும் லேசானவை அல்ல. சிறு சுழிப்பு, சிரிப்பிலும் அதிகம் பேசும் உதடுகள் அவளுக்கு... அந்த அற்புத முகத்துக்கு ஒத்துப்போகும் உடல்வாகு... அசா[illegible]ய திறமை... உன்னிடம்."

அவர் பேசிக்கொண்டே போக, தன் மனதில் நிழலாய் உருவாகிக்கொண்டிருந்த அவரது கனவு தேவதை எப்படி இருந்திருப்பாள் என்ற ஆர்வத்தில், வீட்டின் சுவர்களைத் தன் பார்வையால் துழாவினாள்.

அங்கு பிரதானமாய் இருந்தது ஒரே படம்தான். ஜோடியாய் இளம் தம்பதிகள் எடுத்துக்கொண்ட அந்தக் கால கேவா நிறப்படம்.


"அவங்களா ரேணுகாதேவி?"

"இல்லை... அவ கங்கா. என் இரண்டாம் மனைவி."

"ஓ... அப்ப..." முதல் மனைவி பற்றியெல்லாம் விசாரிக்கும் வயதோ, தகுதியோ தனக்கில்லை என்பது புரிந்து நிறுத்தினாள்.

"ரேணுகாவைக் கல்யாணம் பண்ண, என்னைப் பெத்தவங்க சம்மதிக்கலைம்மா. ரேணுகாவும் நடிப்பில் ஏதும் சாதிக்கணும்னு தவிச்ச அளவு கல்யாணம் பண்ணிக்கிறதில் நாட்டம் காட்டலை... எங்களுக்கிடையே ஒரு ஒப்பந்தம் போல அவளுக்கு நான்





மோதிரம் போட்டேன்...

என்னைப் பொர்றுத்தவரையில் அதுதான் என் கல்யாணம். அன்றிரவே விபத்துல என் ரேணு மறைஞ்சுட்டா... அதன் பிறகு எங்கம்மாவின் கண்ணீருக்காக நான் கங்காவைத் திருமணம் செய்ய நேர்ந்தது... ப்ச்... நாங்க சந்தோஷமாய் இல்லை..."

கண்களை மூடி ஆயாசத்துடன் தலை சாய்த்தார்.

"இப்ப கங்காவும் இல்லை... இறந்து ஒரு ஆண்டாச்சு..." விளக்கினார், மணிமாறன்.

"நீ என் படத்தில் ரேணுகாவாய் நடிக்கணும்னு விரும்புறேம்மா. அவளை உயிரோடு கொண்டுவர வெறும் சாயல் மட்டும் போதாது. புத்திசாலித்தனமும் கலைதாகமும் கலந்த ஒரு பொண்ணு தேவை. உன்னால் அது முடியும்னு மணிமாறன் சொன்னதை... இப்ப நானும் நம்புறேன்..."

கனவில் மிதந்த அவரது பழுப்பு கண்கள் கெஞ்சின.

"நான் அவங்களை... ரேணுகாதேவியின் படத்தைப் பார்க்கலாமா?"

"கண்டிப்பாய்... விமலி, இங்கே வாம்மா..." உற்சாகமாய்க் குரல் கொடுத்தார்.

"இந்த அம்மாவை மாடி அறைக்கு அழைச்சிட்டுப் போ." வழிகாட்டிய பணிப்பெண்ணைத் தொடர்ந்தாள், தேனுகா.

வீடு முழுக்கவே மரத்தளம்தான். நீள மரப்பாளங்கள், முதுமையில் முனங்கின... ஆனால் வீட்டை குளிரிலிருந்து பாதுகாத்தும் வைத்திருந்தன... வெளியே அடர்ந்த மரங்கள், குளிர்காற்றை வீசி வீசி இவளை நடுங்கச் செய்திருக்க,

'கொண்டு வந்த ஒரே சால்வை தாக்குப் பிடிக்காதோ?' என்று அஞ்சினாள்... உள்ளே கதகதவென்றிருக்க சால்வையை விலக்கி தோளில் வழிய விட்டபடி, நடந்தாள்.

"விமலி, நீங்க எத்தனை ஆண்டாக இங்கே வேலை பார்க்கிறீங்க?"

"ஏழெட்டு வருஷமாங்க..."



இவளுக்கு சற்று ஏமாற்றம்தான்! ஆக இந்தப் பெண் ரேணுகாதேவியைப் பார்த்திருக்க வாய்ப்பில்லை... ஆனாலும் வாசலில் நின்று தன்னை எதிர்பார்த்த ஆர்வத்தைப் பார்த்தால்...

"நீங்க அவங்களுக்கு உறவாம்மா?" விமலி அடக்கமாட்டாமல் கேட்டாள்.

"யா... யாருக்கு?"

"ஐயாவின் முதல் சம்சாரத்துக்கு."

"இல்லை... ஏன்?"

அதே சாயல் தெரியுதே... ஐயா உங்களைப் பார்க்க அத்தனை ஆசைப்பட்டார்... அதான்..."

"உங்களுக்குத்தான் ரேணுகாம்மாவைத் தெரியாதே, விமலி?"

"படங்களில் பார்த்திருக்கேனே? நிறைய 'ஆல்பம்' இருக்கும்மா... கங்காம்மா இருக்கும்வரை இந்தப் படங்கள் எல்லாம் பெட்டிக்குள்ளே இருந்திருக்கும்போல... இப்ப அறைக்கு நாலு படம்னு தொங்குதே..."

"முன் அறையில் அவங்க படம் இல்லையே?"

"வர்ற போறவங்ககிட்டே எல்லாம் ஐயா அவுங்களைப் பத்தி பேசமாட்டாங்க. வேண்டியவங்கதான் இப்படி வீட்டுக்குள்ளார வந்து பார்க்கலாம்."

வீட்டுக்குள்ளும் அவனை அதாவது அன்று சந்தித்தவனைக் காணவில்லையே...?

தேனுகாவின் சிந்தனை திசைமாறி ஓடியது. வீட்டின் வெளியே நின்றது அதே கார்தான்... ஆக இங்கு ஏதோ ஒரு அறையில்தான் அந்த 'சிடுசிடு' ஆசாமி இருக்கவேண்டும். முகம் திருப்பிக்கொண்டு போன இவர்களை ஒரே வீட்டில் கொண்டு சேர்த்ததை விதி என்பதா... கடவுளின் விளையாட்டு என்பதா...?

ஆனால், மாடியறையுள் நுழைந்து பெரிதாய் தொங்கிய அந்த நிழலோவியத்தைப் பார்த்ததும் மற்ற சிந்தனைகள்

அறுந்து மறைந்தன.

படத்திலிருந்த பெண்... பேரழகி... ரேணுகாதேவி.

இவளை தன் விழிகளால் அழைத்தாள்.

அந்த வளைவான ஈர உதடுகள், இவளிடம் பேசத் துடித்தன.

முழு ஈர்ப்புடன் அங்கிருந்த புகைப்படங்களில் ஒன்றிப் போனாள், தேனுகா.

# 5

தலை வகிட்டின் இருபுறமும் தன் கூந்தலை, ஈரமாக்கிய விரல்களால் பொடிப் பின்னல்களாக்கினாள்.

வில்லாக்கப்பட்ட அவளது புருவங்களில் இன்னும் எரிச்சல் மிச்சமிருந்தது.

இப்படி சன்னமாய் வில் புருவங்களாக்கிய பின், கண்ணாடியில் பார்த்தால் வேற்று முகம் போலத் தெரிந்தது. வேற்று முகமென்ன— ரேணுகாதேவியின் முகத்தைத் தன்னில் காட்டும் முயற்சிதான், இது.

யோகதேவனின் முன்பு இப்படி போய் நிற்க... அசந்து போய்விடுவார்!

ரேணுகாவின் கேசம், அலை போன்றிருந்தது. இன்று அபூர்வமாய் கைக்குக் கிடைக்கும் பத்து பைசா நாணயத்தின் விளிம்பினைப் போல பம்மி அடங்கி ஓடும் கூந்தல்.

இவளதோ, பட்டான நீளமுடி. இப்படி உச்சியிலிருந்து பொடிப் பின்னலிட்டால் மறுநாள் இவளது கூந்தலும் அலையடிக்கும். கரும் சிவப்பு உதட்டுச் சாயம், கரும்சாந்து பொட்டு வாங்கி வந்திருந்தாள். இப்போதைய ஒப்பனைக்கு இவை போதும்.

ரேணுகாவின் சிரிப்பு, நடை, பேச்சு, ஒயில் இவற்றை அவர் நடித்த படங்களைப் பார்த்து பார்த்து பயின்றுவிடலாம்.



35 ஆண்டுக்கு முன் இறந்துபோன ஒரு பெண்ணாக தான் நடிக்கவேண்டும் என்பதே அவளுள் ஒரு வித கிளர்ச்சியை உசுப்பியது. அச்சமும், ஆர்வமுமான ஒரு விநோத எதிர்பார்ப்பு.

கொஞ்சுவது போல தன் சம்மதம் வேண்டிய யோகதேவனிடமிருந்து ஒரு சிறு புன்னகையுடன் விடை பெற்றிருந்தாள்.

"டிரைவர், அம்மாவைக்கொண்டு விருந்தினர் விடுதியில் இறக்கிவிடணும்ப்பா..."

சற்று அச்சத்துடனே கார் ஓட்டியை நோட்டமிட்டாள். 'நல்லவேளை அந்த உயரமான, பந்தா பேர்வழி இல்லை... தவிர இவர் காரோட்டி போலவா இருந்தார்?'

புகைப்படத்திலிருந்து ரேணுகாதேவி விட்ட சவாலை இவள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் எனத் தோன்ற, முதலில் கடைத் தெருவுக்குப் போய் சில பொருட்களுடன் அறைக்குத் திரும்பினாள்.

சாயல் மாறியிருந்த தன் முகத்தை மீண்டும் மீண்டும் கண்ணாடியில் பார்த்தாள். இந்த முகம் திரையில் தெரியப் போகிறது! நம்மூரின் பாப்-கார்ன், ஏலக்காய் டீ விற்கும் திரையரங்குகளில் இல்லை. உலகத் திரைப்பட விழாவுக்கான பிரத்யேகப் படம்.

ஒரு காதலனின் ஏக்கத்தைத் தணிக்கப் போகும் காவியம்.

திரைப்பட துறையில் ஒரு ஞாபக ஏடு!

வட இந்தியாவில் அப்படம் நிச்சயம் சலசலப்பை உண்டாக்கும். அங்கு காவிய நாயகியாய் உயர்ந்திருக்க வேண்டிய ஒரு நட்சத்திரத்தின் கதை அல்லவா?

தான் சிலகாலம் இந்த உலகில் வாழ்ந்ததற்கான சுவடே இன்றி போய்விடுவோமோ என்ற பயம்... ஏக்கம் தேனுகாவுக்குள் அவ்வப்போது முட்டும்... இப்போது ஒரு தடம் பதிப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது! இதை நழுவ விடலாமா?

ஊக்கம்... ஆனால் அப்பாவை ஒரு வார்த்தைக் கேட்காமல் சம்மதிப்பதும் உள்ளுக்குள் நெருடியது...

அப்பாவுக்குப் புரியும் என்ற சமாதானமும் கூடவே!

'எனக்கும் என் மனைவி கங்காவுக்கும் குழந்தைகள் இல்லைம்மா... ஆனால் பல நினைவுகள் உண்டு' —என்ற யோகதேவனின் முகத்தில் படர்ந்த சிரிப்பு, அந்நினைவுகள் சுகமானவை அல்ல என்றன.

இவருக்கு அது கட்டாய கல்யாணம்.

மனதில் ஒருத்தியுடனும் நிஜத்தில் வேறு ஒருத்தியுடனுமாய் நடத்திய நச்சு நாடகம்... கசக்கத்தான் செய்யும்.

இதையெல்லாம் உணர்ந்தும் இவரது மனைவியாகவே முப்பது ஆண்டுக்கும் மேலாக வாழ்ந்த கங்காவும் பரிதாபத்துக்கு உரியவள்தான்... இயலாமையும் ஆங்காரமுமாய் வாழ்ந்து முடித்தவள்.

இத்தனைக்கும் காரணம்— அந்தப் பேரழகி.

அல்பாயுசில் மறைந்து போன ரேணுகாதேவி!

'குறும்படம் என்றாலும் படத்துக்கு தலைப்பு தேவையில்லையா?'

கேட்டிருந்தாள்.

'நீங்காத நிலா...'

'ம்ம்... உங்க மனதைவிட்டு நீங்காதவங்க...?'

'திரைத்துறையிலும் அவள் பேர் நிற்கணும்... யாரும் அவளை மறந்து ஒதுக்கிவிடக் கூடாது... அதற்கான முயற்சிதான், இது...'

மணிமாறன் விளக்கினார்— 'அமுதபாரதியின் கவிதை உன்னைப் பார்த்துதானாம்—

**'நீண்ட அலகு நாரை**
**நீரைக் கொத்தினாலும்**
**நீங்காத நிலா?'**

கல்யாணமாகி இத்தனை ஆண்டுகள் போனாலும் ரேணுகாவின் நினைவு நீங்கவில்லை...'

"பவுர்ணமியாய் பெருகி இந்த உலகையே தன் பால் ஒளியால் குளிப்பாட்டி இருக்க வேண்டியவள்! ஆனாலும் இங்கே அவள் எப்பவும் உண்டு" —நெஞ்சைத் தொட்டுக் காட்டினார்.

இப்படி எல்லாம் பேசியபடி அவர்கள் இரவு உணவை முடித்த



போதும் அந்த உயரமான இளைஞனைக் காணவேயில்லை.

அவனைப் பற்றி... அதாவது அவர்கள் சந்தித்தவிதம் பற்றி இவர்களிடம் சொல்ல வேண்டுமோ?

கண்ணில் படாதவனைப் பற்றி ஏன் சொல்ல?

கங்கா மூலம் யோகதேவனுக்கு உறவாய் இருப்பானோ?

அதனால்தான் ரேணுகாவின் சாயலில் தன்னைக் கண்டதும் அப்படி சிடுசிடுத்தானோ?

தேனைத் தொட்ட கையின் பிசுக்கு எத்தனைத் துடைத்தாலும் தீராதது போல அவனது நினைவு ஏன் இப்படி, எனக்குள் ஒட்டியபடி வருகிறது?

அப்படி அவனை தேன் என்றும் வர்ணிப்பது தப்பு—

சற்று தேள்தனமான நாக்கு... பார்வையும் மகாக்கூர்மை!

**எ**திர்பார்த்தது போலத்தான் நடந்தது. இவளைக் கண்டதும் 'விருட்'டென எழுந்த யோகின், (மணிமாறன் அவரை அப்படிக் கூப்பிட்டதால் இவளும் அதே பாணியில் அவரை மனதுள் குறிப்பிட்டாள்) அசையவும் முடியாதவர் போல நின்றார். ஆனால் அவர் விழிகளில் நூறு நூறாய் உணர்வுகள்.

உதடு, கன்னத் தசைகளில் பரவச நெகிழ்வுகள்.

"நன்றிம்மா தேனுகா... ரேணுங்கிறது போல உன்னைத் தேனுன்னே கூப்பிடலாமில்லையா? ரேணு பாத்திரத்தில் நடிக்க சம்மதிச்சதுக்கும்... அதை இத்தனைக் கவித்துவமாய் வெளிப்படுத்தினதுக்கும் நன்றி... அவளும் இப்படித்தான். அதிகம் பேசமாட்டா... ஆனா தன் உணர்வை நமக்கு லேசாய் உணர்த்திடுவா. தினம் எனக்கு காலை தேநீர் கொண்டு வர்றப்போ கூடவே ஒரு ரோஜாவும் வரும். எல்லாம் அவ ஏற்பாடு. வெளிநாட்டு 'செண்ட்'டை எனக்குத் தருவாள்.

சதா அந்த மணத்தில் அவள் என்னோடு இருக்கிறாப்பல ஒரு பிரமையை ஏற்படுத்துவாள். நான் கொஞ்சம் குடிக்கிறதாய் செய்தி அவள் காதுக்குப் போனதும் அவளின் சமையல்காரனை என் வீட்டுக்கு அனுப்பிவிட்டாள்... அவன் விதவிதமாய் சூப்பும் பழரசமும் செய்து தந்து என் வயிற்றில் வேறெதுக்கும் இடம்

தராது பார்த்துக்கிட்டான்... எனக்கு ரோஜா நிறம் பிடிக்குதுன்னு புரிய, என் முன் அவ வேறு நிற உடைகளே போட்டதில்லை... ஆனால் இதைப் பற்றியெல்லாம் ஒரு வார்த்தை வராது...!"

"நீங்க கேட்டால்?"

"சன்னமாய்ச் சிரிப்பாள். அவ்வளவுதான். கீழ்உதடு மடங்க இடது உதட்டோரம் ஒரு பொடி சுழி தோன்றும்... ஆ... அது சரி. ஒரே இரவில் உன் தலைமுடி எப்படி மாறிச்சு...'விக்' இல்லையே?"

"இல்லை. இதெல்லாம் மணிமாறன் சாரின் நாடகத்தில் கிடைத்த பயிற்சி."

"சேலையைக்கூட இப்படி ஒற்றையாய்தான் போடுவாள்."

"கவனிச்சேங்க சார்."

"ஆ... நீயும் அவளைப் போல புத்திசாலிம்மா. கவனிப்புகளில், அதைக் காட்ட ஆர்வப்படுவதில்தான் இருக்குது வெற்றி... எனக்கு ஒரு ஆசைம்மா..."

"சொல்லுங்க சார்."

"ரேணுவுடைய சில சேலை, நகைகள் என்னிடம் உண்டு. சினிமாத்தனமானவைதான்...அதிலும் கூட கொஞ்சம் விலை உயர்ந்தவற்றை அவ அம்மா, அக்கா எடுத்துகிட்டுப் போக, மிஞ்சியதைத்தான் நான் பாதுகாப்பாய் வச்சிருக்கேன்... அதை உடுத்திக் காட்டுறியா?"

நரை முடியும் தளர்ந்த உடலையும் மீறி அவருக்கு வாலிபம் திரும்பியிருந்தது... கண்கள் ஆவலாய் மின்னின.

"நிச்சயமாய்."

அவர் தந்த சாவியோடு மறுபடி மாடி அறைக்குப் போனாள். அவர் சொன்னதுபோல கட்டிலின் அருகே நின்ற 'ஓக்' மர அலமாரியைத் திறக்க, மக்கின நெடி கிளம்பியது.

மங்கலாய் சில சேலைகள் உள்ளே அடுக்கப்பட்டிருந்தன.

இந்தக் காலை நேரத்துக்கு ஆழ்நிறச் சேலைகள் பொருந்தாது எனத் தோன்ற, இருந்த ஒரே ரோஜா வர்ணச் சேலையை மெள்ள உருவினாள்.

"நீங்க உடுத்துங்கம்மா. நான் போய் உங்களுக்குக் குடிக்க



ஏதேனும் எடுத்து வரேன்" என்று விமலி கிளம்ப, கதவை மூடி சேலையைச் சுற்றிக்கொண்டாள். இரவிக்கைப் பொருந்தாததால் முந்தானையை இழுத்து வலப்புற தோளையும் மறைத்தாள்.

கூந்தலை விரித்துப் போட்டு ஒப்பனையைக் கூட்ட, தன் தோற்றம் அவளையே வசீகரித்தது.

ஒரு கோப்பை செம்மதுவில் ஊற வைத்து எடுத்தது போல சிவந்து மினுங்கிய உதடுகள் அவளை கவர்ச்சியாய்க் காட்டின.

வெளித் தோற்றத்தில் மட்டுமல்ல... உள்ளேயும் ஏதோ மாற்றம்!

ஒப்பனை அறையில் அரிதாரத்தோடு பாத்திரத்தின் தன்மையையும் கலந்தே பூசும் தேர்ந்த நடிக— நடிகைகளுடன் பழகி இருந்ததால் இவளுக்குள் நேர்ந்த மாற்றமோ?

கவனமாய் பாதுகாக்கப்பட்ட சேலைதான். எனினும் மக்கின வாடை அடித்தது... தோளின் இருபுறமும் பட்டையாய் சரிகை மின்னினாலும் வெற்றுக் கழுத்து உறுத்த, அங்கிருந்த சிறு பெட்டியிலிருந்து ஒரு முத்துச் சரத்தை தேடி எடுத்து போட்டுக் கொண்டாள்.

அலமாரியைப் பூட்டி, அறையிலிருந்து வெளியேறினாள்.

விமலியைக் காணவில்லை.

உடுத்தி, மேடைக்குப் போவது வேறு!

இப்படி அன்றாட உலகில் நிற்பது கூச்சமாய் இருந்தது.

தயங்கியபடி இறங்கினாள்.

கனத்த சேலையின் கொசுவங்கள், படிகளில் தடுமாறச் செய்யுமோ என்று கவனத்துடன் குனிந்து நடந்தவளை அந்தக் குரல் உலுக்கி நிமிர்த்தியது.

"ஆக, நான் சந்தேகப்பட்டதில் தப்பில்லை."

குரோதத்துடன் குற்றம் சாட்டியது.

மாடிப்படியின் கீழ்முனையில் கைகளைக் கட்டி சாய்ந்து நின்றது. இதுவரை அவள் 'எங்கே எங்கே' என்று தேடிய அவனேதான்!

இவளைத் தடுமாறி விழச் செய்து, உதவாமல், தன் உறவினரை எல்லோரும் ஏமாற்றுவதாய் சலித்தவன்... இப்போதும்

அதையேதான் குறிப்பிடுகிறான். இவளும் அப் பெரியவரின் சொத்தை சுருட்டிக்கொண்டு போகிறாளாம்!

ஆனால் அலட்டாமல் பதிலளித்தாள்.

"சந்தேகமே தப்புத்தான்."

"என்ன?"

"சந்தேகக் குணம் மெச்சத் தகுந்ததல்ல... அதுவும் ஆராயாமல் வரும் வெற்று சந்தேகம் ஆபத்தானது..."

"ஆக, இப்படி வர்றவங்களை நம்பிக் கொண்டாடணுமா?" அவன் குரலில் காரம் கூடியது.

"நம்பிக்கை வேணும். தப்பான உணர்வுகள் பிறரைவிட உங்களைத்தான் அழிக்கும்." சிறுவனுக்கு விளக்குவது போல சொன்னாள்.

அவன் முகம் கடுத்து, உதடுகள் இறுகின.

"நீ நடிகையா, வசனகர்த்தாவா? பேச்சு பொழியுது? உடம்பை அலங்கரிச்சது போலவே பேச்சும் ரொம்ப அலங்காரம் தான்..."

இவளை அவமானப்படுத்த என்றே குரலைக் குத்தலாக்கினான். இவளோ 'இந்தப் பேச்சு எனக்கு அநாவசியம்' என்பதாய் விலகி நடந்தாள். ஆனால் ரேணுகாவின் நினைப்புடன் செய்த அலங்காரம், அதற்கொப்ப உள்ளே ஊற்றெடுத்த பூரிப்பு எல்லாம் நமத்து, நசுங்கிப் போயின.

## 6

தரையைத் துடைத்து, துணியை அலசிப் பிழிந்து காயப் போட்டவளுக்கு, நடந்தது எல்லாம் கனவாய்த் தோன்றியது.

மிக அழகான கனவு.

வாளியின் அழுக்கு நீரை பின்புற தாழ்வாரத்தின் செடிகளுக்கு ஊற்றிய பின், தன் அடுக்குமாடி வீட்டின் இரும்பு வலைப்பின்னல்



வழியே தெரிந்த, நெரிசலான சென்னை நகரைப் பார்த்தாள்.

போன வாரம் இதே கண்கள் கண்ட காட்சிதான் எத்தனை வித்தியாசம்! பனித்தொப்பி போட்ட பெரும் மலைகள், குழந்தை போல உருண்டு ஓடும் ஓடைகள், நெடு நெடுவென பசும் மரங்கள்... முக்கியமாய், வாகனமற்ற கடைத் தெருக்கள். அதில் முதுகு வளைய பாரம் சுமந்தபடி மனிதர்கள்...

'ரோட்டைப் பார்த்து நடக்கிறதில்லை...?' என்று அதட்டிய அவன் ரவிதேவ்!

அவனது பெயரை யோகின் மூலம்தான் அறிய நேர்ந்தது.

ரேணுகாதேவியின் ரோஜா நிறச் சேலையை அணிந்து வந்தவளை, விழி நிறையப் பார்த்தவர், அச்சேலை நிறத்துக்கே சிவந்திருந்த அவள் முகத்தையும் கவனித்துவிட்டார்.

"என்னம்மா. உன் முகம் ஏன் இப்படி சிவந்திருச்சு?"

"இல்ல... ஒண்ணுமில்லை..."

"ரவியின் குரல் கேட்டுதே... உன்னிடமா பேசினான்?"

"அது யார்?"

"என் தம்பி மகன்— ரவிதேவ்... நான் அவனது பொறுப்புங்கிற நினைப்பில் எல்லோரையும் அதட்டுவான்..."

"பர... பரவாயில்லைங்க..."

"மன்னிச்சிடும்மா... என்ன சொன்னான்?"

"அலங்காரம் எப்படி இருக்குது... அதைச் சொல்லுங்க."

இது, பேச்சை மாற்றும் முயற்சி.

அவரது கண்கள் பனித்திருந்தன. "என் நிலாப் பெண்ணை மறுபடி பார்க்கிறேன்... அவளுக்கும் இப்படித்தான்... சிறு கோபத்திலும் முகம் சிவந்திடும்..."

நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டு அவளை அதில் அமரச் செய்தார். "ஆனால் ஒரு காரியத்தில் நீ கொஞ்சம்..."

"சொல்லுங்க சார்?"

கனிவுடன் இவளையே பார்த்தார்.

"நீ அதிகம் உழைக்கிறே. இல்லையா?"

"உழைச்சுத்தான் ஆகணும் சார். அப்பா தனியார் கம்பெனியில் கேஷியர். பொறுப்புக்கேற்ற சம்பளம் கிடையாது... அங்கேயே நானும் பகுதி நேர வேலை பார்க்கிறேன். தபால் மூலம் படிக்கிறேன். கம்ப்யூட்டரும் அவசியம். படிச்சால் என் வேலைக்கு உதவும்... ஆனா..."

"உலக அழகிப் பட்டத்துக்காக வெளிநாடு போகிற பெண்களைப் பார்த்திருப்பே. கிள்ளியெடுக்க சதையிராது. 24 அங்குல இடுப்புக்காக இலை, தழை ஜூஸ்ன்னு வயிறைச் சுருக்கி இருப்பாங்க... நம்ப கிராம வயற்காட்டில் நாள் முழுக்க நாத்து நட்டு, களையெடுக்கும் பெண்ணுக்கும் அதே உடுக்கை இடுப்பு இருக்கும்... ஆனா, அவளை மேடையில் நிறுத்தினா எடுப்பாய் இருக்காது. ஏன்?"

- "சதா வெயிலில் வறண்ட மேனி. உழைப்பால் முறுக்கேறிய உடம்பில் வலு இருக்கும்... ஆனா கவர்ச்சி இருக்காது."

"ரொம்ப சரி. துளிர் வெற்றிலையின் மினு மினுப்பு அவளுக்கு வாய்க்காது. அதிக உழைப்பு அவளது மிருதுத்தன்மையை உருவிடுது. மென்மையான இளமையை உறிஞ்சிடுது. நீ நடிக்கப் போறது ஒரு கனவுக் கன்னியாய்..."

"........."

"'இப்படியும் ஒரு அழகா... திறமையா?'ன்னு பார்த்தவர்கள் வியந்த ரேணுகாதேவியாய் நீ மாறணும்... இயற்கைத் தந்திருக்கும் அழகை மேலும் மெருகேற்றணும்மா, தேனுகா..."

அவளுக்குப் புரிந்தது.

உழைப்பு தன்னை உருக்குலைத்துவிடாமல் காத்துக்கொள்ள சொல்கிறார்.

அலுவலக வேலை, நடிப்பு பயிற்சி, நடனம், வீட்டு பராமரிப்பு, சமையல், படிப்பு என்று சாவகாசமாய் உட்கார, கண் அயர நேரமின்றி, பசித்ததும் உண்ண நேரமின்றி...

வேண்டிய ஓய்வும் உணவும் இருந்தால்தானே அழகு வாய்க்கும்?



"மறுவாரம் நீ சென்னையில் இருப்பாய்."

"ஆமா சார்" ஆனந்தமாய் சொன்னாள்.

கூடவே அப்பா தன் நடிப்பு முடிவுக்கு ஒப்புக்கொள்ளுவாரா என்ற சஞ்சலமும் அரித்தது.

"மணிமாறனின் ஆலோசனைபடி உணவு நிபுணர் தரும் பட்டியலின்படி சாப்பிடு... கம்ப்யூட்டர் இப்போதைக்கு வேண்டாம். ஆயிரம் ரூபாய்க்காக உன்னைப் பிழிந்தெடுக்கிற வேலையையும் விட்டுடு... ரெண்டு மாதத்தில் உன் உடம்பு தேறினதும் படப்பிடிப்பை ஆரம்பிக்கலாம்."

இதெல்லாம் தனக்கு சாத்தியமா என்று அசந்தவளை அந்த சிரிப்பொலி தொட்டு உலுக்கியது.

ஆணும், பெண்ணுமாய் இணைந்து சிரித்த உல்லாச ஒலி.

தன்னிச்சையாய் யோகனின் முகத்திலும் புன்னகை திரண்டது.

"ரவி, மற்றவர்களிடம் சிடுசிடு என்று நின்றாலும் யமுனாவிடம் வாலைச் சுருட்டிடுவான். அவள் சிரித்தால் இவன் சிரிப்பான். அவள் சிணுங்கினால் விழுந்து விழுந்து தாங்குவான்..." என்று அவர் சொல்ல, இவளுக்கு 'சுருக்'கென்றது.

பிறகென்ன... தன்னைக் கண்டதுமே தூக்கி எறிந்து பேசியவன் இன்னொருத்தியிடம் விழுந்து, வழிகிறான் என்பது... ஒருவித அவமானம்தானே?

"அவர் இங்கேதான் இருக்காரா?"

"அடிக்கடி வந்து போவான். அவனுக்கும் யாருமில்லை, எனக்கும் பிள்ளைகள் இல்லைன்னு ஒருவித பரஸ்பர பாசம், பரிதாப உணர்வு, பாதுகாப்பு எல்லாம் கலந்து... தவிர சிம்லாவின் அழகும் அவனை இழுக்குதும்மா... இஷ்டமாய் வருவான்..."

'பிறரை அலட்சியப்படுத்துவதும் அவருக்கு இஷ்டம்தான் போல...' சற்று காட்டமாய் நினைத்தவள் மேலும் கேட்டாள்.

"மற்றபடி அவர் இருப்பது எங்கே?"

இதெல்லாம் உனக்குத் தேவையா, என்று புத்தி அதட்டினாலும் மனம் மேலும் தகவல்களை சேகரிக்க ஆசைப்பட்டது.

"டெல்லி, மும்பைன்னு இருப்பான். பெரும்புள்ளிகளுக்கு வெளிநாட்டு கார்களை வாங்கிக் கொடுக்கிறதுதான் தொழில். அதனால் அரசியல்வாதிகள், முன்னணி நட்சத்திரங்களுடன் நல்ல பழக்கம்."

அவன் பவனி வந்ததும் விசித்திரமான வாகனத்தில்தானே?

"இப்பகூட மும்பையில் ஒரு உச்சநட்சத்திரத்துக்கு ஆறு கதவுகொண்ட கார் வாங்கிக் கொடுத்திருக்கானாம்."

இவள் பாமரத்தனமாய் மற்ற காருக்கு எத்தனைக் கதவுகள் என்று மனக்கணக்கில் ஈடுபட்டாள்!

கூட இரு கதவுகள் எதற்கு?

மேலும் ஒரு வரிசை இருக்கைகளுக்காகவா?

"அது என்ன விலை இருக்கும்ன்னு யோசனையா தேனு?" தன் நினைப்பை அவர் கூற, உடல் கூசி வெறுமே தலையசைத்தாள்.

"எழுபது இலட்சத்துக்கு மேலே... நம்ப பயலுக்கு அதில் கனத்தத் தொகை கிடைக்கும். பயல் பணக்காரன்!"

ஆக, பணத்தில் புரள்பவன். புகழ் போதையில் மிதப்பவர்களுடன் சகவாசம்... அதுதான் இத்தனை எகத்தாளம்... எளியவர்களிடம் அலட்சியம்.

சற்று தொலைவிலிருந்து மீண்டும் சிரிப்பொலி வந்து இவளைச் சீண்டியது.

"இந்த யமுனா யார்?"

"அவ அப்பா சிம்லாக்காரர்... ஆனால், பெண் டெல்லி கல்லூரியில் படிச்சா. அப்ப ரவியோடு பழக்கம்னு நினைக்கிறேன். சிம்லாவில் கைகளால் பின்னப்பட்ட காலுறைகள் பிரபலம். மிஞ்சிய பல வர்ண கம்பளி நூல் துண்டுகளால் பின்னப்படும். அவற்றைப் போட்டால் பாதங்கள் வெதுவெதுன்னு இருக்கும். தவிர ஒன்று போல மற்றொரு ஜோடி அமையாது. நாடோடிக் கலையிலான அதை இங்கே ஜோடி இருபது ரூபாய்க்கு வாங்கி, அமெரிக்காவில முந்நூறு ரூபாய்க்கு வித்துடுறார்."



"ஓ... அதனால்தான் அந்தப் பெண்ணும் சிம்லா வந்திருக்காங்க போல..."

"நம்ம ரவி வழக்கம் போல் வர, கூடவே இந்த அம்மாளும் வருவாங்க. அவ்வளவுதான்."

யோகின் சிரித்தார்... ஆனால் அது அவளுக்கு ரசிக்கவில்லை.

## 7

**"தே**னு, அரை தம்ளர் காப்பி தாயேன்."

அப்பாவின் குரல், அவளை சரட்டென நிகழ் உலகுக்குள் இழுத்து இறக்கியது.

இதென்ன பைத்தியக்காரத்தனம்?

தீப்பெட்டி அடுக்கு போன்ற சென்னை மாடிவீடுகளைப் பார்த்ததும் சிம்லாவின் ஒப்பீடு மனதுள் வந்தது, சரி...

ஒட்டினாற் போல யோகின் சார் அறிவுரைகள்... அதுவும் சரி. பிறகு ஏன் ரவிதேவ் பற்றி எல்லாவற்றையும் விலாவாரியாய் அசை போட்டபடி நின்றாள்?

அவனது அலட்டலும் ஆணவமும்...

ஆனால் அவன் ஜம்பமெல்லாம் ஒரு பெண்ணிடம், அதுதான் அந்த யமுனாவிடம் செல்லுபடியாகவில்லையே... அவளிடம் எப்படி குழைந்து சிரித்தான்...?

ச்சே... மறுபடி அவர்களைப் பற்றி ஏன் யோசனை?

"இதோ தர்றேன்ப்பா..." அப்பாவிடம் காப்பியை நீட்டியவள் சற்று திடுக்கிட்டாள்.

"ஏன்ப்பா, முகம் சரியில்லை?" என்ற கேள்வியை அடக்கிக் கொண்டு அவர், காப்பியை குடிக்கும் மட்டும் காத்திருந்தாள்.

வழக்கமாய் ஒரு வாய் பருகியதும் மகளைப் பார்த்து புன்னகைக்கும் தகப்பன் முகத்தில் இன்று சுரத்தில்லை.

காய்ச்சல் வரும்முன் கன்றுவது போல முகம் கிடந்தது.

காலி தம்ளரை வாங்கியவள் அவரது நெற்றியில் கை வைத்தாள். அவளது கையை அழுத்தப் பற்றிக்கொண்டவரின் உடம்பு குலுங்கியது.

"என்னப்பா... அழுறீங்க?"

மனம் பதைத்து அவரருகே முழங்காலிட்டாள்.

"சொல்லுங்கப்பா... உடம்புக்கு முடியலியா? படுக்கிறீங்களா?"

"இல்லை மகளே... இனி சும்மாவே படுத்துக்கிடக்க வேண்டியதுதான்."

கேள்வியோடு விம்மிய அவரது தோளை நீவினாள்.

"வேலை போச்சும்மா... இனி எங்கள் வேலையை எந்திரம்தான் செய்யுமாம்."

அப்பா குறிப்பிடுவது கம்ப்யூட்டரை எனப் புரிந்தது.

இது காலத்தின் தவிர்க்க முடியாத மாற்றம். இனி அப்பாவால் வேறு வேலை தேட முடியுமா? கணினியைக் கற்கும் ஆர்வமும் வேகமும் அவருக்கில்லை.

"ஓய்வுப்பணம் ஏதும் பெரிதாக வராதும்மா. மொத்தத்தில் கையில் ஒன்றரை இலட்சம் வரும். அதைக்கொண்டு நாம் எவ்வளவு காலத்தை ஓட்டுறது? சேமிப்புன்னும் அதிகமில்லை. சொந்தமாய் வீடுகூட இல்லியேடா. உன் கல்யாணத்தை... அந்த ஒன்றரை இலட்சத்தில் உடனே... அதாவது அது கரைஞ்சு போறதுக்குள்ளே முடிச்சிட்டா, நான் ஏதோ ஒரு முதியோர் இல்லத்தில் சேர்ந்திடலாம்..."

"அந்த நிலமை எல்லாம் நமக்கு வராதுப்பா... நாம சேர்ந்துதான் இருப்போம். இந்த குறும்படத்தில் நடிச்சால்..."

கையைத் தூக்கி மறுத்தார்.

"வேண்டாம்டா... சினிமாவை மறந்திடு, தேனு. அதென்ன எள்ளுருண்டையா... நமக்கு ஏற்காது. ஆக வேண்டியதாய் பார்ப்போம்."

இவளுக்குள் ஏதோ நொறுங்கியது...



வேறென்ன... சில நாட்களில் பிரமாண்டமாய் எழும்ப இருந்த அவளது கனவுகள்தான்...!

அன்றிரவு தலையணை நனைய அழுதாள்.

பகிர்ந்தால் துக்கம் பாதியாகும் என்பார்கள். ஆனால், இது பகிரக் கூடாத வருத்தம். அப்பாவிடம் தன் வேதனையைக் காட்டி அவரை மேலும் கவலைக்குள்ளாக்கக்கூடாது.

ஆக, விசும்பலும் வெளியே கேட்காதபடி அழுதாள்.

அதுவே நெஞ்சின் பாரத்தை அதிகமாக்கியது. தாய் இருந்தால் அவள் மேல் சாய்ந்து அரற்றி இருக்கலாம்.

'இது போல வாய்ப்பு யாருக்கேனும் கிடைக்குமாம்மா? நானே கூட இப்படி ஒரு வாய்ப்பு வரும்னு கனவு கண்டதில்லையே... பட விழாவில் என் படம்... அதிலும் என் முதல் படம்... போச்சேம்மா...' என்று. இப்பொழுதோ தந்தையைத் தேற்றும் நிலையில் அவள் நின்றாள்.

"விடுங்கப்பா... எனக்கு ஓரளவு கம்ப்யூட்டர் அறிவுண்டு. ஒரு ஆறுமாச படிப்பு முடிச்சால் உங்க கம்பெனியேகூட வேலை தரும். அந்தச் சம்பளம் போக அப்பப்ப நாடக வருமானம்... நம்ம ரெண்டு பேருக்கும் அது போதாது. இந்த ஒன்றரை இலட்சத்தை பேசாமல் பாங்கியில் போடுங்க. வட்டி, குட்டி போட்டுட்டு இருக்கட்டும். சரிதானா?"

ஆனால் அப்பா நிலைகுலைந்தார்.

"உனக்கு உடனே கல்யாணத்தை முடிச்சிடணும்மா" என்ற புள்ளியிலேயே பம்பரமாய்ச் சுழன்றார்.

"வாழ்க்கைன்னா மாற்றங்கள் இல்லாமலா? அது தெரிஞ்ச நீங்க இப்படி அலட்டிக்கலாமாப்பா?"

"எங்க அம்மா சொல்வாங்கடா, தேனு. 'வாழ்க்கைன்னா மாற்றங்கள் வரும், வரணும். ஆனால் நட்டாற்றில் குதிரையை மாற்ற நினைப்பது தவறு'ன்னு. ஒரு நடுத்தர வர்க்கக் குடும்பத்துக்கு நடிப்பு... சினிமா இதெல்லாம் சரிப்படாது."

அப்பாவின் பேச்சுக்கு இவள் கட்டுப்பட வேண்டிய சூழ்நிலை.

ஆனால் திருமணம் என்ற நினைப்பே கசந்தது. இப்படி அவசர அவசரமாய் கடமைக்கு ஏற்படும் ஒரு பந்தம் எப்படி நிறைவாக அமையும்?

மற்றபடி ஒருவாறாகத் தன்னை தேற்றி அப்பாவுக்குக் கட்டுப்படும் நிலைக்கு அவள் வர, வந்தது அடுத்த சோதனை!

அந்த பதிவுத் தபாலை அவள் பக்குவமாய்ப் பிரிக்கும் போதே இதயம் படபடத்தது. தபாலில் இருந்தது, இமாச்சல முத்திரை. அதாவது யோகினிடமிருந்து...

என்ன எழுதி இருப்பார்?

அவரது கனவுப் பட நாயகி ஆக தனக்குக் கொடுப்பினை இல்லை என்று விரைவில் கடிதம் எழுத வேண்டுமென நினைத்து, அதற்கான தைரியம், பக்குவத்தைத் திரட்டிக்கொண்டிருக்கும் வேளையில், இக்கடிதம். அது, சொல்லப்போவது என்ன?

முதலில் படபடப்பாய் கடித வரிகளில் ஓடிய அவளது விழிகள் மெள்ள பரவசமாகின.

எப்பேர்ப்பட்ட வாய்ப்பு!

'நீங்காத நிலா'வை இயக்கப்போவது பிரபல இயக்குநர் மயன்! சிறு விளம்பரமோ, முழுநீள படமோ, அதை கவிதையாய்ப் படமாக்கி, பார்ப்பவர்களை அயர வைக்கும் அவரா தன்னை இயக்கப் போவது?

அவர் இயக்குவதைத் தொலைவில் இருந்து பார்ப்பதேகூட பாக்கியம் என்ற நிலையில்... அவர் இயக்கி, அதில் தான் நடிப்பது அபூர்வ அனுபவம் அல்லவா? வாழ்நாள் முழுக்க பிறரிடம் சொல்லி பெருமிதப்படக்கூடிய சந்தர்ப்பமல்லவா?

மயனை இவள் போய்ச் சந்திப்பதற்கான தேதியும், போகும் முன் அவரிடம் பேசி வசதியான நேரமும் அறிந்து செல்ல தொலைபேசி எண்ணும் தரப்பட்டிருந்தது.

இந்த வாய்ப்பை ஏற்க முடியாது என்பதை நேரில் போய்தான் சொல்ல வேண்டும்... அதுதான் மரியாதை!



# 8

திரையுலகின் அந்த ஜாம்பவானைப் பார்த்தவளுக்கு எதையும் விளக்க முடியவில்லை. அவரது கேள்விகளுக்கு ஒற்றை வரியில் பதில் சொல்லத்தான் முடிந்தது.

"இப்ப என்ன செய்யப் போறதாய்த் திட்டம்?"

"கம்ப்யூட்டர் படிப்புல சேரணுங்க..."

"அதாவது வேலையில் சேருவதற்காக?"

"ஆமாங்க."

"ஒரு ஆண்டு கூட நீ வேலையில்லாமல் இருக்க முடியாதா?"

"ம்... சம்பளம் இல்லாது இருக்க முடியாதுங்க..."

தாடி, மீசைக்குள் பொதிந்திருந்த அவரது உதடுகள் முறுவலித்தன.

மயனுக்கு படைப்பாளிகளுக்கே உரிய கனவுக் கண்கள். ஆனால் அதில் காரியக் கூர்மையும் இருந்தது. நீண்ட விரல்கள், அதிகம் உட்கார்ந்து யோசிக்கும் மனிதர் இவர் எனச் சொல்லும் உடல்வாகு.

"ஆக யோகினுக்கு உன் சமீப பிரச்சினை பற்றி தெரியாது?" முகவாயை நீவியபடி கேட்டார்.

"இப்பதான் எழுதிப் போட்டேங்க."

எழுதிய தனக்கும், வாசிக்கும்போது யோகினுக்கும் அது தாளக்கூடாத ஏமாற்றம்தான்... ஆனால்வேறு வழியுமில்லையே!

ஆசைகளை ஊதி ஊதி அவை எம்பி சுவாலையாய் எரியும்போது குளிர்நீரை வீசினது போன்ற அதிர்ச்சி...

யோகின் நிலைகுலைந்திருப்பாரோ?

அன்று ரேணுகாவின் சேலையில் இருந்தவளை சில புகைப் படங்கள் எடுத்தவர், எல்லோரும் சேர்ந்தே சாப்பிடலாம் என்று

சொல்லி ரவிதேவ், யமுனாவையும் மேசைக்கு அழைத்தார்.

தேனுகாவுக்கு தயக்கம். எனினும் மறுக்க வழியில்லை.

மேசையில் உணவுவகைகள் வைக்கப்பட, முதன்மை இருக்கை
யைக் காட்டி, 'இது நம் முக்கிய விருந்தினருக்கு மிக அழகான
சிம்லாவில் ஏன் உலகிலேயே அழகான ஒரு இளம் பெண்ணுக்கு...
என்று அவர் சொல்ல, யமுனாவின் முகத்தில் பூரிப்பு கலந்
சிறு படபடப்பு.

'தேனுகா, இது உனக்கான இருக்கை. உட்காரும்மா...' அவ
சொல்ல... கண்டிப்போன யமுனாவின் முகத்தைக் காண்பதி
இவளுக்கொன்றும் ஆனந்தமாயில்லை.

'நான்... அப்படி ஒன்றும்...' தடுமாறினாள்.

'இந்த வீடு என்னது. என் கண்களுக்கு மிக அழகி
அருமையான பெண் நீ. அவ்வளவுதான். இப்ப உட்காரு'

இந்த 'இருக்கை' சம்பந்தமாய் கிளம்பிய சிறு ஒதுக்கலைக்கூட
தாள முடியாமல் யமுனா கடுகடுத்தாள்.

தன் நாற்காலியை ரவிக்கு மிக அருகே இழுத்துப் போட்
அவனிடம் குனிந்து கிசுகிசுத்தாள்.

இவளை கண்டுகொள்ளவேயில்லை.

தேனுகா, மரியாதை நிமித்தம் உணவு பற்றி பாராட்டா
சில வார்த்தைகள் கூறவும் தன் குரலை உயர்த்தினாள், யமுனா

"ஏன் ரவி? போன மாசம் மதுமதிக்கு ஒரு கார் வாங்கி
தந்தீங்களே. அதற்கான பணம் வந்தாச்சா... இல்லை இழுப
தானா?"

"பணம் வந்ததும் தர்றேன்னு இழுக்கிறாள்."

"நடிகைகளே இப்படித்தான். தகுதிக்கு மீறின ஆசைகளை
வளர்த்துக்கிறது. கொஞ்சம் பல்லைக் காட்டினால் எவனும் த
இழுப்புக்கெல்லாம் வருவாங்கங்கிற திமிர் வேறு. நீங்க பணத்தை
அழுத்திக் கேட்க மாட்டீங்கன்னு நினைச்சிருப்பாள்."

"அதெப்படி, இருபது இலட்சத்தை போகுதுன்னு சும்மாவிட

"ஏன்னா, நீங்க நடிகைன்னா 'ஆ'ன்னு பார்க்கிற ரகமில்லை



இப்ப டி.வி.யில் நடிக்கிறதுகளுக்குக்கூட மவுசைப் பாருங்களேன்..."

யமுனா தன்னை மட்டம் தடுவதற்காய் நடிகை வர்க்கத்தையே இழிவுபடுத்துவது புரிய, யோகினுடன் தேனுகா வேறு ஏதோ பேச, யமுனாவின் எரிச்சல் ரவி மீது பாய்ந்தது.

அவன் தனக்குப் பரிமாறிய கையோடு அவளுக்கும் ஒரு கரண்டி நூடுல்ஸ் வைக்க,

"ச்சே.... எனக்கு இது பிடிக்காதுன்னு தெரியாதா? உங்க நினைப்பு இங்கே இல்லை போலிருக்கு..."

"வேண்டாம்னா சாப்பிடாதே. ஒதுக்கி வச்சிடு..."

"நீங்க இன்னைக்கு வாங்கித் தந்த துணிகூட எனக்குப் பிடிக்கலை. என்ன ரசனையோ?"

ரவியின் முகம் இறுகியது.

தன்னை மட்டம் தட்டியவனைக் குட்டவும் ஒருத்தி இருக்கிறாள் என்றளவில் தேனுகாவுக்குத் திருப்திதான்.

"ரசனைகள் வேறுபடும்மா. மற்றவர்களின் ரசனையை நாம் மதிக்கணும்." பக்குவமாய்ப் பேசினார், யோகின்.

"ஒரு ஓவியம் உன்னதம்னு நான் நினைக்க, வேறு ஒருவனுக்கு அது வெறும் வர்ண மெழுகல் போல் தெரியலாம். புத்தகம் என்றால் பலருக்கு உயிர். வாசிப்பதில் பிடிப்பு இல்லாதவனுக்கு அது வெறும் மையோடிய காகிதம்.

சங்கீதம் அற்புதம்னு மனம் கிறங்கிறவங்க உண்டு. 'அது என்ன விலை'ன்னு கேட்பவர்களும் உண்டே.... என்ன சரிதானே?"

பொதுவில் பேசி சூழ்நிலையை இதமாக்கினார்.

'இப்போதும் அவர் தானிருக்கும் சிக்கலைப் புரிந்து கொள்ளுவாரா? உள்ளுக்குள் தவித்தாள், தேனுகா.'

இவள் விலகலில் ரவிதேவுக்கு திருப்தியாய்தான் இருக்கும். யமுனாகூட 'ஒண்டவந்த பிடாரி ஒழிந்தாள். இனி தான் மட்டுமே ஒரே பிடாரியாய் ஆட்சி செய்யலாம்' என்று திருப்திபடுவாள்!

"வணக்கம்! யோகின் இருக்காரா?" 'கணீர்' என்ற மயனின்

குரலில், நிகழ் உலகுக்கு வந்தாள்.

'ஹூம்...' வழக்கம் போல தன் சிந்தனை இந்தச் சூழலிலுமே ரவி, யமுனாவிடம் ஓடியது அவளுக்கு அவமானமாகவும் குழப்பமாகவும் இருந்தது. தொலைபேசி எண்களைத் தேடி தொடர்பு கிடைப்பதில் மயன் மும்முரமாய் இருக்க, இவளது சிந்தனையும் தறி கெட்டுப் போனது.

இன்னும் யோகினுக்கு தன் கடிதம் கிடைத்திராது. ஏமாற்ற மான இவள் காரியத்தை போட்டு உடைக்கப் போகிறாரா மயன்?

"என்ன... யோகின் கிளம்பியாச்சா. மறுவாரம் இங்கே இருப்பாரா? சரி." குழம்பிய இவள் முகத்தைப் பார்த்தவர், "அப்ப வரும் வாரமே பேசி முடிவெடுக்கலாம். எனக்கு விளம்பர படப்பிடிப்பு இருக்கு. என் மனைவி தன்மதி வருவாள். இருந்து பேசிட்டு போ..."

## 9

மயனுடையது கேரள பாணியில் எளிமையான மரவீடு. வரவேற்பறையின் கண்ணாடி அடுக்குகள் ஷம்பீரமாய் நின்ற தேசிய விருதைப் பார்த்தவளுக்குப் புல்லரித்தது.

நின்றபடி ஆவலாய்ப் பார்த்தவள், "இதுபோல விருது உங்களுக்கும் கிட்டும்" என்ற இனிய குரல் கேட்டு, அவசரமாய்த் திரும்பினாள்.

முழுக்க உலராத கூந்தல், நுனி முடிச்சிட்டுக் கிடந்தது. நெற்றியில் சந்தன கீற்றும் குளிர் முகமுமான அப்பெண்,

"நான் தன்மதி– டைரக்டர் சம்சாரம்" அறிமுகப்படுத்திக் கொள்ள இவள் கைகுவித்து தலையாட்டினாள்.

"உங்களைப் பற்றி கேள்விபட்டிருக்கேன். மோகினி ஆட்டத்தில் பிரபல நடனமணியாச்சே..."

"நன்றி... பத்து நிமிடத்தில் அவரை அனுப்பிட்டு வந்துடுறேன்.



பிறகு நாம் சேர்ந்தே சாப்பிடலாம். சில விவரங்களை நான் உங்களிடம் சொல்லணும்."

"ஆகட்டுங்க... இருக்கேன்."

"போனமுறை டெல்லி போயிருந்தப்ப சிம்லாவில் யோகினை சந்திச்சோம். அருமையான மனிதர்... அப்போ ரேணுகாதேவியின் படங்களை நான் கண்டதுண்டு... உங்க ரெண்டு பேருக்கும் அற்புதமான சாயல் ஒற்றுமை..." வியந்து பாராட்டினாள்.

"ஆமா... ஆனால்..."

"இருங்க. ஐந்தே நிமிடம்."


சொன்னது போலவே சில நிமிடங்களில் வந்த தன்மதி, சூடான குழாய் புட்டு, பயிறு, பழம் எனப் பரிமாறிவிட்டு, உடன் அமர்ந்து தன் பள்ளிப் பருவம், குடும்பம் பற்றியும் பிறகு தனக்கு நாட்டியத்திலும் மயன் மீதும் தோன்றிய ஈர்ப்பு பற்றியும் சொல்ல, ஆர்வமாய்க் கேட்டாள், தேனுகா. இதெல்லாம் கனவு போல பட்டது அவளுக்கு!

இப்படி பிரபலங்களுடன் உட்கார்ந்து சாவகாசமாய்ப் பேசக் கூடும் என்பதே பிரமிக்க செய்ய, தன்மதி மேலும் கூறிய விவரம் இவளை வாயடைக்கச் செய்தது.

"உன்னைப் பார்த்த டைரக்டருக்கு... அதாவது மயனுக்கு, தன் அடுத்தப் படத்தில் உன்னை நடிக்கக் கேட்கணும்னு தோணிச்சு. உனக்கு, மெல்லிய உணர்வுகளைக் கூட கூர்மையாய் வெளிக்காட்டும் முகமாம்."

"........."

"எங்களது அடுத்த தயாரிப்பு ஒரு சரித்திரப் படம். ஒரு சாம்ராஜ்யம் எப்படி கட்டப்படுகிறது, பிறகு எப்படி கட்டுக் குலைகிறது என்பது பற்றிய படம்... கிளைக்கதையாய் காதலும் உண்டு. சிற்பியின் மகளை பிரதம சீடனும், இளவரசனும் நேசிப்பதாய்... நடிக்க வாய்ப்புள்ள பாத்திரம்... ஆனால் முதல்ல யோகினுடைய படம் பூர்த்தியாகணும்... அதன் படப்பிடிப்பு ஆரம்பிக்கவே ரெண்டு மாசமாகலாம்... அதற்குள்



உன் உடம்பும் தேறணும்..."

"நான்... இங்கே பேச வந்த காரியமே வேறுங்க...", என்ற தேனுகா தன் தந்தை வேலை இழந்ததையும், பணப் பிரச்சினை அவளது கனவுகளுக்கு தடையாய் இருப்பதையும் அவசரமாய் விளக்கினாள்.

அத்தனையையும் ஒரு பரிவான புன்னகையுடன் கேட்ட தன்மதி, "சந்தோஷமாய் இருக்கு, தேனுகா..." என்றாள் முடிவில்.

"என்ன... புரியலையே?"

"அழகாக இருக்கும் பெண்களுக்கு இந்த காலம் பணம் ஒரு பிரச்சினையே இல்லை. 'மாடலிங்'னு ஆரம்பிக்கிறாங்க. மேடையில் அல்லது விளம்பர படங்களில் வசீகரமாயிட்டு தோன்றும் இப் பெண்களுக்குச் செலவழிக்க பணக்கார பசங்க அல்லது பிரமுகர்கள் தயாராய் உண்டு.

பெண்கள் அதற்கு ஈடாய் எதையும் தரத் தயாராகிடுறாங்க. ஆனால், அப்ப போய்விடாதது பரிசுத்தம் மட்டுமல்ல, அதைத் தெரிவிக்கும் முகக்களையும்தான் என்பதை அவங்க அறியுறதில்லை. அழகு முன் யாரும் பணிந்து விடுகிறார்கள்... உன்னிடம் அது உண்டு. இத்தனை ப்வித்ரமான அழகுடைய, திறமையும் கொண்ட பெண் லேசில் கிடைக்காதே..."

"நன்றி... ஆனா, என் படிப்பு, வேலை..."

"அதுக்கெல்லாம் இப்ப நேரமில்லை. டான்ஸ் கத்துக்கிறியா?"

"சுதா அக்கா கத்துத் தர்றாங்க..."

"அடிப்படை தெரிஞ்சிருக்கும். ஆனா, உனக்கு உடலின் மொழி வலுப்படணும். உணர்ச்சியை வெளிப்படுத்தும் முகம்


ராணி முத்து

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஆறு மாதம் | ரூ. 65 |
| ஒரு ஆண்டு | ரூ. 120 |
| இரண்டு ஆண்டு | ரூ. 225 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஆறு மாதம் | ரூ. 450 |
| ஒரு ஆண்டு | ரூ. 800 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை-600 007.

உனக்கு உண்டு என்றாலும் நாடகக் குழுவின் பயிற்சியும் உண்டல்லோ? ஆக, இப்ப நடிப்பு இயல்பாய் வரும்... உடம்பும் அதுக்கு ஒத்துழைக்கணுமே. உடம்பின் ஒவ்வொரு அங்குலமும் நடிக்கணும்... அதற்கு உன்னைப் பயிற்றுவிக்க ரக்ஷாதாஸ்தான் பொருத்தமானவங்க..."

இவளுக்குத் தலை சுழன்றது.

இவளது பிரச்சினையை, மறுப்பை காதிலேயே ஏற்றிக் கொள்ளாமல், மேலும் மேலும் திட்டமிட்டு கனவு கட்டிடத்தை எழுப்பிக்கொண்டே போகிறார்களே?

ரக்ஷாதாசும் கேள்விபட்ட பெயர்தான். ஆனால், அந்த அம்மையாருக்கு எழுபது வயது இருக்கும். ரஷ்யாவில் பல ஆண்டு தங்கி 'பாலே' நடனம் கற்று, அதை இந்திய நடனத்துடன் கலந்து சில நிகழ்ச்சிகளை அமைத்தவர். அவை சிலரின் சிலாகிப்புக்கும் பலரின் கண்டனத்துக்கும் உட்பட்டதையெல்லாம் அவள் கேள்வி பட்டது உண்டு. ஆனால், அதெல்லாம் 15, 20 ஆண்டுக்கு முன்.

"அப்பெண்ணால், அதாவது ரக்ஷாவால் இப்போது ஆட முடியாதுதான். ஆனால், உன் அசைவுகளில் எங்கே தவறு இருக்குதுன்னு சொல்லி திருத்துவாங்க... நடிப்புக்கு அது முக்கியம்..."

"அது உண்மைதாங்க... ஆனா, என் நிலமை..."

"எதுவும் லேசில்லை, தேனுகா. ஆனால், ஒரு நினைப்பிருக்கணும். ஒன்பது மாடி கட்டிடமானாலும் அது மண்ணிலிருந்து தான் உருவாகிறது. சரித்திர படம் எடுப்பது லேசில்லை. அதுக்கான வரவேற்பு இப்ப இல்லைங்கிறதோடு செலவும் நாலு மடங்கு அதிகம். ஆனால், அதெல்லாம் நம் கற்பனைக்கு, குறிக்கோளுக்கு தடையாய் இருக்கக் கூடாது."

"நான் மட்டும்னா துணிந்து நிற்பேன்... ஆனால் அப்பாவால்... அவருக்கு என்னை விட்டால் யாருமில்லை."

விரிந்த கூந்தலை கோதியபடி ஆமோதிப்பாய் தலையசைத்தாள், தன்மதி.

"என்னுடைய சமீப நாட்டிய நாடகம். 'கடல் கன்னிகள்'



நாகரீகப் பெண்ணைப் பற்றியது. நிகழ்கால பெண்ணைக் கடல் கன்னியுடன் ஒப்பீடு செய்திருந்தேன்.

அறிவு, ஆற்றல் எனும் துடுப்பால் முன்னே நகர்பவள் அதே நேரம் தன் முன்புற பெண் உருவில் மனைவி, தாய், மகளாய் நின்று குடும்பத்தையும் பேண வேணும். இல்லையா?"

"நிஜந்தாங்க. வெளி வேலைக்குப் போகும் பெண், வீட்டை 'அம்போ' என்று விட்டுவிடுகிறாளா என்ன?"

எழுதிய காகிதத்தை நீட்டினாள், தன்மதி.

"இதில் ரக்ஷாதாசின் விலாசம், தொலைபேசி எண், குறிச்சிருக்கேன். கற்றுத் தரும் சொற்ப நேரத்துக்கே ஆயிரக் கணக்கில் பணம் வாங்குவாங்கன்னு கேள்வி. ஆனா, அந்த கொஞ்ச நேரமே உன் நடிப்பை ஆயுசுக்கும் மேம்படுத்தும். கவனமாய்ச் சாப்பிடு. தேவையான ஓய்வும் அவசியம். வாழ்த்துகள்."

ஒரு பிரம்பு கூடை நிறைய கனி வகைகளுடன் விடை கொடுத்தாள், தன்மதி.

"நன்றி... ஆனால்..."

"முகத்தில் இன்னும் குழப்பம் இருக்கு...ம்? யோகின் மறுவாரம் வர்றாராமே? உனக்கான சன்மானத்தை அவரை முன்னதாகவே கொடுக்கச் சொல். சமாளிச்சிடலாம். பணம் பற்றி...?"

"நாங்க பேசவே இல்லை..."

வாஞ்சையுடன் இளையவளின் கன்னத்தைத் தட்டியவள்,

"கனவுலகிலேயே சஞ்சரிக்கும் கலைஞர்கள்... ம்? ஆனால் உன் பிரச்சினையைச் சொன்னால் யோகின் புரிஞ்சுக்குவார். ஆக, தயங்காமல் அவரோடு பேசு."

அதுதானே...! இன்றைய புதுமுகங்கள் கூட கோடிகோடியாய் சம்பளம் பெறுவதாய் செய்தி வரும் சினிமா உலகில் தனக்கு பல ஆயிரங்கள் வந்தாலும் போதுமே. சமாளித்துவிடலாம்!

ஆக, மறுக்கும் முடிவோடு வந்தவள், சமாளித்துவிடும் தெம்புடன் வீடு திரும்பினாள்!

# 10

நெளிவாக்கப்பட்ட கேசமும், அதீத சிவப்பு இதழ்களுமாய்த் தயாராகிக் கொண்டிருந்த மகளைப் பார்த்த சுந்தரத்தின் முகம் சுருங்கியது.

தேனுகாவின் வீட்டில் தொலைபேசி இல்லாததை உணர்ந்த யோகின் ஒரு சென்னை நண்பரின் மூலம் செல்போனுக்கு ஏற்பாடு செய்ய, இருவரும் அடிக்கடி பேசிக்கொள்ள முடிந்தது.

இந்தியாவின் முன்னணி இயக்குநரின் அடுத்த படத்தில் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது பற்றியும்கூட யோகின்தான், சுந்தரத்திடம் மகிழ்ந்து பேசினார்.

"அருமையான, திறமையான பொண்ணுங்க. அவளுக்கேற்ற சந்தர்ப்பங்களும் இப்ப வர்றதில் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி..."

ஆனால் சுந்தரம் மகிழ்வதாய்க் காணோம்.

"ஏம்மா, இதெல்லாம் நமக்கு ஒத்துவராதுன்னு சொல்லியும் நீ விட்ட மாதிரியில்லையே?"

வாடாத அவரது புன்னகையை, இப்போது முகத்தில் காணவேயில்லை.

"இல்லைப்பா... மறுத்து கடிதமெல்லாம் எழுதிப் போட்டாச்சு... யோகின் சார் இங்கே வரும்போது அழுந்தச் சொல்லிடுறேன்... ஆனால், அவங்க நடிக்கக் கேட்பது வழக்கமான படத்தில் இல்லைப்பா. அதாவது மூணு மணி நேரத்தில் ஆறு பாட்டுள்ள சினிமா இல்லை... நம்மூரில் படம் வெளியாகாது."

"ஆனாலும் உன் பேருக்கு ஒரு பிரபலம் ஏற்பட்டிடும்மா. நடிக்கும் முன்னரே அடுத்தப் படத்துக்கான சந்தர்ப்பம் வந்திடுச்சு பார்த்தியா?"

இவளாலும் அதை மறுக்க முடியவில்லை.

"இப்படி வரும் சந்தர்ப்பங்களை மறுக்க உனக்கு மனசு



வராதுடா. இது ஒன்று மட்டும்ன்னு நினைத்தபடி பல படிகளை ஏறிடுவே. பிறகு அந்த உயரத்துக்கு என்னால் மாப்பிள்ளைத் தேட முடியுமா? அதாவது நம் கையிலிருக்கும் சொற்ப வசதிக்கு அது முடியாதேம்மா..."

அப்பாவின் பிரச்சினை புரிந்தது.

அதே நேரம் இதுபோன்ற சந்தர்ப்பங்களை நழுவ விடுவதா என்ற மருகல்!

'சந்தர்ப்பம் உன் கதவைத் தட்டாவிட்டால் நீ ஒரு கதவைத் தட்டு' எனும் முன்னேற்ற மொழி அவளுக்கு மிகப் பிடிக்கும்

இப்போதோ கதவைத் திறந்து நுழையத் துடிக்கும் அதிருஷ்டத்தை வெளியே தள்ளி கதவடைக்க வேண்டிய நிலை! அதற்கான துணிச்சல்... திராணி அவளுக்கு இல்லையே. ஆனால், யோகின், செல்போனில் அவள் தந்தையிடம் எப்படி எடுத்துச் சொன்னாரோ, தெரியவில்லை. சில நாட்களில்—

"நான் சராசரித் தகப்பன்ம்மா... பெண்ணை நல்ல இடத்தில் கல்யாணம் செய்துக்கொடுத்து, அவ நிறைவாய் வாழ்ந்தால் போதும்னு நினைக்கிறவன். ஆக, அகலக்கால் வைக்க பயப்படுறேன். ஆனா, என் மறுப்பு உனக்கு வாழ்நாள் முழுக்க ஒரு ஏமாற்றத்தைத் தருமானால் நான் தடுக்கலை..."

சாப்பிடும் நேரத்தில் அப்பா மெள்ள சொன்னதையே அவரது சம்மதமாய் எடுத்துக்கொண்டாள்.

ஆனாலும் கவர்ச்சியாக்கப்பட்ட தோற்றத்தில் யோகினைப் பார்க்க மகள் கிளம்பியதை அவர் ரசிக்கவில்லை.

இவளும் இப்படி ஆர்வம்காட்ட வேண்டாம். ஆனாலும், கொப்பளித்த ஆர்வத்துக்கு அணை கட்ட முடியவில்லை. இத்தனை ஆர்வமுள்ளவளை எப்படி அடக்கிவைப்பது என்பதும் ஒரு தகப்பனின் நியாயமான கவலைதான்.

யோகினை சிறு இடைவெளிக்குப்பின் பார்க்கப் போகும் உற்சாகம், இவளுக்குள்.

பணப் பிரச்சினைப் பற்றிய பேச்சை அவரிடம் எப்படி எடுப்பது என்ற தயக்கமும்... கூடவே அவனது. அதாவது

ரவிதேவ் ஞாபகமும்... மலரோடு வரும் மணம் போல... சிம்லா அல்லது யோகினை நினைத்துக்கொண்டால் கூடவே இழுபடும் ரவிதேவ் பற்றிய நினைவுகள்...

ஊகூம்... அதை மணம் என்று சொல்ல முடியுமா? ஒருவித நெருடலான காட்டமான நெடி!

சென்னை மகாபலிபுர சாலையில் யோகின் தன் நண்பரது வீடு ஒன்றில் தங்கி இருக்கிறார்...

'காலியாய்க் கிடக்கிற வீடு... நாங்க இருந்தால் நல்லதுன்னு சொந்தக்காரர் வந்திருக்கார்' என்று யோகின் சொன்னதால், ரவியும் கூட வந்திருக்கிறானோ என்ற நெருடல் நினைப்பு!

நீலாங்கரையைத் தொட்ட நீண்ட பயணம் அவளுக்கு அசைபோட நேரம் தந்தது.

பேருந்திலிருந்து இறங்கியவள், யோகின் சொன்னது போலவே அங்கு விசாரித்து அந்த வீட்டை அடைவதுக்குள் வியர்த்து விறுவிறுத்திருந்தாள்.

மெல்லிதாக்கப்பட்ட வளைபுருவங்களும், அடர்சிவப்பு சாய உதடுமாய் இப்படி பட்டபகலில் சூரிய தகிப்பில் அலைவது அவளுக்கே அசட்டுத்தனமாய்ப்பட்டது.

யோகினுக்கு மறுப்பாய் கடிதம் எழுதியவள், நிலைமை இப்போது சீராகிவிட்டது என்பதைச் சொல்லும் யுக்திதானே, இது!

கடலின் நீலப் பின்னணியில் முத்தின் வெண் திரட்சியுடன் அழகாய் நின்றது, அவ்வீடு. கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். மணி பதினொன்று.

சொன்ன நேரத்துக்கு வந்தாகிவிட்டது.

வெளி 'கேட்'டிலிருந்து வீடு போய் சேரவே ஐந்து நிமிடமாகும் என்ற நினைப்புடன் காலை வீசிப் போட்டாள்.

வியர்த்த முகத்தை, கைக்குட்டையால் லேசாக ஒற்றிக் கொண்டாள்.

வழியில் நின்ற சில தென்னைமரங்கள் 'எங்களால் இவ்வளவு



நிழலும் காற்றும்தான் தரமுடியும்' என்பதாய் சோகையாய் அசைந்தன...

யோகினிடம் எல்லாவற்றையும் சொல்ல வேண்டும்.

அப்பாவின் வேலை போனது, நடிப்பு பற்றிய அவரது அதிருப்தி, யோகினின் பேச்சால் தந்த அரைகுறை ஒப்புதல்— எல்லாம்.

அவளது பசித்த வயிறு உறுமியது.

காலையில் சாப்பிட்டது போதவில்லை.

ரேகா அதாவது, உணவு நிபுணர் எழுதித் தந்த பட்டியலின்படி சாப்பிட்டதுதான் காரணம்.

பட்டியல் சரிதான். ஆனால், அதன்படி உணவு, பழரசங்களைத் தயாரித்துத் தர ஒரு ஆள் வேண்டுமென்பதே முக்கியத் தேவை!

ஒருநாள், காலை உணவுடன் பெங்களூர் தக்காளிச் சாறு என்றால் மறுநாள் இயற்கை உரத்தில் விளைந்த பீட்ரூட்டின் சாறாம்! அவற்றை வாங்க, இவளே போகவேண்டியிருந்தது.

தவிர ஒட்டை மிக்சியுடன் போராடி, அதைப் பிழிந்து குடிப்பதுக்குள் 'அம்மாடி' என்றாகிவிடுகிறது!

ஆக, இப்போதைய அவசரத் தேவை, பணம்! கொடுக்கப்பட்ட சொற்ப உணவில் வீட்டு வேலைகளைச் செய்ய முடியவில்லை! கூடுதலாய் உண்டாலும், ஒத்தாசைக்கு ஒரு ஆள் போட்டால் தேவலை. தன் சம்பாத்தியமும் நின்று, சம்பளத்துக்கு ஒரு ஆளை நியமித்து... ஆங்... நடன, நடிப்புப் பயிற்சிக்கான கட்டணம் வேறு.

சிந்தனைகளுடன் நடந்தவளின் கால், தயங்கி நின்றது. காரணம்— வீட்டின் மறுபுறம் ஒதுங்கி நின்றது ஒரு கார்.

இலைப் பச்சையில் வினோத வடிவில் இருந்த அது... அவனுடையதா? நம்மூரில் பிஸ்தா, கரும்பச்சையில் வாகனங்களைப் பார்த்தது உண்டு. எனினும் இந்த ரகப் பச்சை, வடிவம்... இது அயல்நாட்டு தயாரிப்பே.

ஆம்! வந்திருப்பது சாட்சாத் நானேதான் என்பது போல கேட்டது அந்தச் சிரிப்பொலி! இப்போதும் இணை

குரல்களாகவே.

ஆக, யமுனா இங்கும் வந்துவிட்டாளா? இதற்கு ஏன் தனது மனம் பொருமவேண்டும்? தன்னையே சாந்தப்படுத்தியபடி படியேறினாள்.

அதேநேரம், கதவு திறந்து வெளிப்பட்டனர், இருவர்.

"அடடே... நம்ப வசனகர்த்தா– நடிகை!"

ஏளனத்துடனேயே கண்டுகொண்டான், ரவிதேவ்! "இங்கே... உன்னை எதிர்பார்க்கலை" அலட்சியமாய்ச் சொன்னாள், யமுனா.

"யோகின் சார் வரச்சொன்னார்."

"மாமா அழைத்ததால் சிம்லாவுக்கே வந்தவங்க இங்கே வரமாட்டாங்களா?"

அவன் பேச்சு இவளை மறுபடி குத்தியது.

# 11

இந்தக் குத்தல் பேச்சு அவனுக்கு புதிதில்லை. இப்படி குத்திப் பேசுவதால்தானோ என்னவோ அவனைப் பற்றி அதிகம் நினைக்கிறாள்?

'இவர்கள் எப்படி தூண்டில் வீசினாலும், வாய் கொடுத்து சிக்கிக்கொள்ளக்கூடாது' என்றமுடிவோடு கதவைத்தட்டினாள்.

"மாமா உள்ளே முக்கியமாய்ப் பேசுறாங்க."

உனக்கென்ன அவசரம் என்ற தோரணையில் சொன்னாள், யமுனா. தமிழ் தாய்க்கும் வடக்கத்திய தகப்பனுக்குமாய்ப் பிறந்த அவளின் தமிழ், சற்று கொச்சையாய் இருந்தாலும் அமிழ்தான மொழி அப்போதும் இனிக்கத்தான் செய்தது.

ஆக, இவள் குறுக்கிட அஞ்சி, காத்து நின்றாள்.

வரவேற்பறையிலாவது அவளை உட்காரச் செய்யலாம் என்ற



எண்ணத்துடன் சற்று தயங்கினான் போலும், ரவிதேவ்.

"என்ன இப்படி அசமந்தமாய் நிக்கிறீங்க? இங்கே இருந்து பாண்டி பஜார் போக ஒரு மணி நேரமாகும்– நடுவெயிலில் அலையவச்சுட்டீங்க" சிணுங்கினாள், யமுனா.

"இப்ப என்ன அவசரம்?"

"எனக்குப் பொறுமை இல்லியே... இவ்வளவு நேரம் மாமாவை தனியே விட்டுட்டு வரமுடியாதுன்னீங்க... சரி, இப்பவாச்சும் சட்டுன்னு கிளம்புங்க."

இழுத்தவளின் பின்னே நாய்க்குட்டியாய்த் தொடர்ந்தவனை சற்று இளக்காரமாய்ப் பார்த்தாள், தேனுகா.

ஆகக் குட்ட குட்ட குனிபவர்களிடம்தான் ஐயாவின் ஜம்பம்! பணக்கார யமுனாவிடம் ஏதும் செல்லவில்லை. எனினும் வயதான பெரியப்பாவை இந்தத் தனி இடத்தில் விட்டுப் போகாமல் இதுவரை காத்திருந்ததே ஒரு பொறுப்புள்ள பண்புதான்.

சன்ன உறுமலுடன் கார் பின்னடைந்து, முழு வட்டமடித்துப் புறப்பட்டதைப் பார்த்தபடி நின்றாள், தேனுகா.

கதவு திறந்தது.

"அடடே... வாம்மா. குரல் தராமல் ஏன் இங்கேயே நின்னுட்டே?"

யோகினைப் பார்த்ததும் அதுவரை ஏறியிருந்த களைப்பெல்லாம் கரைந்தது போலிருக்க, புன்னகைத்தாள்.

"பரவாயில்லைங்க சார்... போனில் பேசிட்டிருந்தீங்க போல..."

"யாரோடுன்னு நினைக்கிறே? உங்க அப்பாதான். 'என்ன... தேனுகா கிளம்பிட்டாளா? அடுத்த முறை நீங்களும் வரணும். ரெண்டு நாள் தங்கி இந்த கடல்காற்றை ஆனந்தமாய் சுவாசிட்டுப் போங்க'ன்னு அழைச்சேன்."

இவளுக்குள் நன்றி உணர்வு பொங்கியது. நினைவு தெரிந்து இவர்கள் யார் வீட்டுக்கும் விருந்தாடிப் போனதில்லை. யாரும் இவர்களைத் தேடி வந்ததுமில்லை.

"ரொம்ப நன்றி சார்... அப்பா வர்றாங்களோ இல்லையோ... நீங்க அழைச்சதே எங்களுக்கு பெரிய கவுரவம், மகிழ்ச்சி."

"முதல்ல உட்காரும்மா... பெரிய பெரிய வார்த்தையெல்லாம் பேசாதே. ரவி அடிக்கடி சொல்லுவான்– தேனுகாவையே உங்க படத்தின் வசனகர்த்தாவாகவும் போட்டுடலாம்னு..." சிரித்தார்.

இவளுக்குள் கொதித்தது! இதென்ன இடக்கு? அவனது குத்தல் பேச்சுக்கெல்லாம் வாய்மூடி இருப்பவளுக்கு இப்படி ஒரு பட்டமா?

முன்பு சிம்லாவில் அனைவருமாகச் சேர்ந்து அமர்ந்து உண்டபோதிலும் எக்களிப்பான சீண்டல் பேச்சுதான். அதாவது– சினிமாவில் தலைகாட்டும் பெண்களுக்குத் தலைகால் புரியாது. கிடைக்கும் பணம், புகழுக்காக எதையும் செய்யத் தயாரான பேர்வழிகள் என்ற ரீதியில்.

சற்று முன்புகூட, இவள் வாய்ப்புக்காக எந்தத் தொலைவுக்கும் விழுந்தடித்து ஓடுபவள் எனச் சொல்லவில்லையா? அத்தனை துணிந்தவள் எனில் ஏனிப்படி கலங்க வேண்டும்? பணமின்மை, அப்பாவின் அதிருப்தி என்று இவள் அல்லாடுவது அவர்களுக்குப் புரியாது.

இவளை மேலும் கீழுமாய்ப் பார்த்த யோகதேவின் புருவங்கள் நெரிந்தன.

"இந்த இரண்டு வாரத்தில் உன் உடம்பு தேறி இருக்கும்னு நினைச்சேன்ம்மா, தேனுகா. ஆனால், என் 'நிலாப் பெண்' கொஞ்சம் தேய்ந்தாற்போலிருக்கிறதே?"

தன் பிரச்சினையைச் சொல்ல இதுதான் தருணம்... தொண்டையைச் செருமிக்கொண்டு இவள் தொடங்கும் முன் யோகினே தொடர்ந்து பேசினார்.

"பிரச்சினைகள் அதிகம்தான், தேனுகா. படம் தயாரிப்பது சுளுவானதில்லை. இத்தனை ஆண்டுகளில் விலைவாசி எம்பிடுச்சு. மணிமாறன் மூலம் மயனிடம் ஆரம்ப விவரங்களைத் தெரிவிச்சுட்டு, அவரிடம் நான் போனில் பேசியபோதும் மயனும் இதையேதான் சொன்னார்.



'உங்க நிதி நிலைமை வலிமையாய் இருந்தால்தான் இந்தக் கிணறைத் தாண்ட முடியும் சார். இல்லை நடுக்கிணற்றிலே விழுந்து தத்தளிக்க வேண்டியதாய்ப் போயிடும்னு' எச்சரித்தார்.

அதேநேரம் என் ஆசையைப் புரிஞ்சு, பணம் வாங்கிக்காமலேயே படத்தை இயக்கித் தருவதாய்ச் சொன்னார். இத்தனைக்கும் சொந்தமாய் சரித்திர படமொன்றைத் தயாரிக்க இருக்கும் அவருக்கும் பணத் தேவை அதிகம்."

தெரியும் என்ற தினுசில் தலையாட்டினாள், தேனுகா.

"உன்னிடம் தன்மதி எல்லாம் சொல்லி இருப்பாள். அவளும் திறமை உள்ள பெண்."

"ஆமாங்க... அந்தப் படத்திலும் எனக்கு ஒரு பாத்திரம் இருப்பதைப் பற்றி உங்களிடம் சொன்னேன்."

புன்னகையுடன் தலையசைத்தார்.

"உன்னைப் பார்த்த அன்றிரவே மயன் அதுபற்றி என்னிடம் பேசினார். உன் திறமை, அழகு, முக்கியமாய் நேர்மை, பரிசுத்தம் பற்றி ஒரே புகழ்ச்சி. அதிலும் அவர் படத்தின் கதாநாயகி வேடம் கிடைத்தும் நீ பெரிசாய் மகிழ்ந்துவிடவில்லைங்கிறதில் மயனுக்கு ரொம்ப ஆச்சரியம்! சாதிக்கணும்; அதற்கான சந்தர்ப்பங்களைத் தட்டிப் பிடுங்கணும்னு அலைமோதும் பெண்களில் தேனுகா வித்தியாசமானவள்னு சிலாகித்தார்."

"அப்பாவுக்கு இதெல்லாம் பிடிக்கலை சார்."

"உங்க அப்பாவிடம் பேசினதுமே புரிஞ்சுகிட்டேன்... நயந்து பேசி அவரை ஒருவழியாய் அசைத்து சம்மதிக்க வச்சிருக்கோம்."

"நன்றிங்க. ஆனா..."

"உனக்கு சாப்பிட ஏதும் தராமல் பேசிக்கிட்டே இருக்கேன் பாரு..."

அவசரமாய் எழுந்தார்.

"விமலியை வரச்சொல்லவாய்யா?"

"அவ எங்கே வரமுடிஞ்சது? கிளம்புறப்ப படிக்கட்டிலே வழுக்கி விழுந்து காலில் கட்டோடு சிம்லாவில் இருக்கிறாள்.

அவ வர முடியாததால் ரவி என்கூட கிளம்பவேண்டிய நிர்பந்தம். இந்த வீடும்கூட அவனது நண்பருடையதுதான். சமையல் அறையிலும் புகுந்து ஏதோ செய்கிறான்."

இவள் விழிகள் உருண்டதைக் கண்டு நகைத்தார். "அதிகமில்லைம்மா. சிற்றுண்டி செய்வோம். காப்பி போடுவோம். அவ்வளவுதான்."

"அப்பஎன்னா மதியச் சாப்பாடு?"

"வாங்கி வர்றேன்னான்."

"ஓ?" அவரைப் பின்தொடர்ந்து சமையல் அறைக்குள் போனாள். அது, அவள் நினைத்த அளவுக்கு அலங்கோலமாய் இருக்கவில்லை என்பதும் சற்று ஆச்சரியம்தான்!

"என்னம்மா?"

"பால் இருந்தால் நமக்கு காப்பி கலக்குறேங்க."

"இந்த டப்பாவில் பால்பவுடர் இருக்கு. இதுல சர்க்கரை..."

கூடவே அணிவகுத்திருந்த மசாலா சாமான் வகைகளை ஆர்வமாய் நோட்டமிட்டாள். அடுக்களையில் அத்தனை நவீன உபகரணங்களும் இருந்தன. பெயரெழுதிய கண்ணாடி ஜாடிகளில் பொடி வகைகள்.

"வீட்டை அருமையாய் வச்சிருக்காங்க."

"வீட்டுக்காரரர் இருப்பது கனடாவில்" என்றபடி கரண்டிகளை எடுத்து நீட்டினார், யோகின்.

கொதித்த நீரில் காப்பிபொடி கலக்'கும்'மென மணம் எம்பியது. பிஸ்கட்டுகளை எடுத்து தட்டில் வைத்தார்.

"அப்ப இத்தனை அழகாய் இதையெல்லாம் வச்சது?"

"வீட்டுப் பராமரிப்புக்கு என்றே ஆட்கள் இருக்காங்கம்மா. இல்லைன்னா இந்த பெரிய வீடுகளை செல்வந்தர்கள் எப்படி பராமரிப்பாங்க? நாலு வீடுகளை ஒரு ஆள் பராமரிப்பதாய் ஒப்பந்தம். உரிமையாளர்கள் எப்ப வர்றோம், எத்தனை நாளுக்கு தங்கிறோம்ன்னு தெரிவித்துவிட்டால் வீட்டை சுத்தம் பண்ணி இதெல்லாம் வாங்கி வச்சிடுவாங்க... கூடவே வரிகட்டுவது,



வெள்ளையடிப்பது, பாதுகாப்பு எல்லாம் அவங்க பொறுப்பு தான்."

"அடடே... செய்யணும்னு நினைச்சால் எத்தனை வேலைகள் கிடைக்குது இல்லையா?"

"ம்... நம்ப படம் எடுக்கவும் கடனுக்கு 'அப்ளை' பண்ணி இருக்கேன். ரவி இப்படி வீடும் பார்த்துத் தந்து... அவனில்லாமல் முடியாதும்மா."

தன்னிடம் 'சிடுசிடு'வென்று விழுபவன், பெரியப்பாவிடம், முக்கியமாய் யமுனாவிடம் பாசமாய், ஏன் குழைவாகவும்தான் நடந்துகொள்ளுகிறான். காப்பியை பருகியபடியே நினைத்தாள், தேனுகா.

## 12

"ஏம்மா, மீனு வேணுமா? இப்பத்தான் பிடிச்சது."

கூவிய பெண்ணை ஜன்னல் வழியே எம்பிப் பார்த்தாள். தலையிலிருந்த சிறு ஓலைக்கூடையில் மீன் இருந்தது போலும்.

"என்ன மீன்? காட்டேன்."

சரித்துக் காட்டினாள். வெள்ளியில் செய்தவைப் போன்ற கடல் மீன்கள்.

"அல்வாவாட்டம் இருக்கும். வாங்கும்மா."

காப்பி குடித்தபடி இவளிடம் பேசிய யோகின் சற்றுக்கெல்லாம் கண் அயர, இவள் வீட்டைச் சுற்றி வந்தாள். மணி பன்னிரெண்டு தான்.

மதிய உணவுடன் வருவதாய்ச் சொல்லிச் சென்ற ரவி அப்படி விழுந்தடித்தெல்லாம் வந்துவிட முடியாது. பாண்டி பஜார் போக, வரவே ஒன்றரை மணி நேரமாகிவிடும். அந்தப் பகுதியில் 'ஷாப்பிங்' என்றால் சேலையோ நகையோதான். அதை அரை மணி நேரத்தில் யமுனா முடித்துவிடக்கூடுமா?

பிறகு சாப்பாடு வாங்கி வீடு வர, மூன்று மணிகூட ஆகலாம். அரிசி, பருப்போடு பிற பொருட்களும் இருக்க, 'சமைத்து விட்டால் என்ன?'

சற்று நேரத்தில் கண்விழிக்கும் யோகினுக்கு நிச்சயம் பசிக்கும். காலையில் வறட்டு ரொட்டியைச் சாப்பிட்டவருக்கு சூடாய் வீட்டுச் சாப்பாடு இருந்தால் நல்லது. தவிர இப்போதைக்கு இவள் செய்யக்கூடிய உபகாரமும் இது மட்டும்தான்.

அரை மணி நேரத்தில் உணவு தயாராகிவிட்டது. உணவின் மணம்தான் அவரை எழுப்பி இருக்க வேண்டும்.

"என்னம்மா... நாக்கில் நீர் ஊற வைக்கிறே" என்றபடி சமையலறை உள்ளே எட்டிப் பார்த்தார்.

"பசித்தால் உட்காருங்க, சாப்பிடலாம்?

அவர் அமர... இவள் பறிமாற...

பேசியபடியே இருவரும் உணவு உண்டனர். பின்பு ரேணுகாதேவியின் படங்கள் கொண்ட ஆல்பம், நடித்த படத்தின் ஒரு பகுதி... என்று நேரம் போனது. மறுபடி ஒரு காப்பி பருகியவர்கள், கடற்காற்றை ஆழ சுவாசித்தபடி காலாற நடந்துகொண்டிருந்த போதுதான் ரவியின் கார் சீறலாய் வந்து நின்றது.

இறங்கி, கதவை அறைந்து சாத்தினான்.

முகத்தில் கோபச் சிடுசிடுப்பு...

"மன்னிக்கணும் பெரியப்பா... நாலு மணியாச்சு... இந்தாங்க உங்க சாப்பாடு."

இரு உணவு பொட்டலங்களை நீட்டியவனின் தொனியில் மன்னிப்பு கோரலைவிட கோபமே இருந்தது.

"இருக்கட்டும்ப்பா... யமுனா எங்கே?"

இப்போது ரவியின் முகத்தில் நிலவிய கடுப்பைக் காணச் சகிக்கவில்லை.

"அவ ராஜ பரம்பரை போல பெரியப்பா... தங்கத்தைக் கொண்டே உயிர் வாழ முடிவு பண்ணிட்டா... மூணு மணி



நேரமாய் தங்கத்தைத் தடவியும், பார்த்துமே பசியாறிகிட்டு இருக்கா..."

"பெண்கள் அப்படித்தாம்ப்பா... அதிலும் அழகிய பெண்களுக்கு நகை மீது அதிக ஆசை இருக்கும்..."

ரவியின் கண்கள் தன்னை யோசனையுடன் தடவுவது புரிந்தது, தேனுகாவுக்கு.

தன் கழுத்து, காதை ஆராய்கிறானோ?

பெயருக்கு அங்கு கிடந்த பொட்டுத் தங்கத்தை அளவிடுகிறானா?

"முதல்ல சாப்பிடுங்க பெரியப்பா... சாரி உன்னையும் சேர்த்து பட்டினி போட்டுட்டேன்..."

இவளிடமும் அரை மனதாய் மன்னிப்பு கோரினான். 'இத்தனை கரிசனை உள்ளவர் நேரத்தே உணவுடன் கிளம்பி இருக்கலாமே?' இப்படி தேனுகாவின் விழிகள் சொன்னது போல,

'முதல்ல கடை கடையாய் ஏறி இறங்கினோம்... நகைக் கடைகள் எல்லாம் ஏ.சி. என்பதால் உள்ளே நிம்மதியாய் உட்கார்ந்து 'செல்'லில் பேசினதில் நேரம் நழுவினதே தெரியலை... மணி பார்த்தால் இரண்டரை. சாப்பாடு வாங்கப் போனால் கூட்ட நேரம், பார்சல் கட்டவே 25 நிமிடமாச்சு. திரும்பும்போது பள்ளி, கல்லூரிகள் விடும் நேரம்... சரியான நெரிசலில் சிக்கிக்கிட்டேன்..."

"யமுனா எங்கேப்பா?" யோகின் கேட்டார்.

"அவளுக்குப் பார்த்துத் திரலை... எனக்கு அந்த மஞ்சள் உலோகத்தை ரெண்டு மணி நேரமாய்ப் பார்த்ததில் கண் எரிச்சல்... சாப்பாடு ஆறிப்போயிருக்கும்... சூடு பண்ணிடவா?"

"நீங்க சாப்பிட்டீங்களா?" மிருதுவாய்க் கேட்டவளை வியப்புடன் ஏறிட்டான்.

"இல்லை, உங்களை விட்டுட்டு எப்படி... இதோ எனக்கான பார்சல்."

"என்ன வாங்கி வந்தீங்க?"

"பிரைட்— ரைஸ், சில்லி— சிக்கன்."

"பிரிட்ஜ்ஜில் வச்சிடலாம். இப்ப வீட்டுச் சாப்பாடு சாப்பிடுறீங்களா?"

"அது எப்படி.... யார் செய்தது?"

"தேனுகா சமைச்சாப்பா. அருமையான வெங்காய சாம்பார், காரட் கூட்டு, மீன் வறுவல்... நீ கொண்டு வந்ததை ராத்திரிக்கு சாப்பிடலாம். இப்ப இதை ஒரு பிடி பிடி!"

"சரி."

சில நிமிடங்களில் முகம் கழுவி வந்தவன் முன், ஆவி பறக்கும் உணவு வைக்கப்பட்டது.

"வாவ்! நல்ல மணம்"— ஆவலாய்ப் பிசைந்தான்.

ரசித்து உண்டான்.

கை கழுவியவன், "நன்றி தேனுகா. அருமையான சமையல். திருப்தியாய்ச் சாப்பிட்டேன்" எனவும், தன் பெயரை முதன்முதலாய் அவன் உச்சரித்ததை உணர்ந்தாள்...

ஏனோ அது அவளுக்கு ஒருவித திருப்தி தந்தது.

"ஒரு டீ கிடைக்குமா? வழக்கமாய் சாப்பிட்டதும்..."

"ம்... அடுப்பில் தண்ணீர் வச்சிட்டேன்... இப்ப தயாராயிடும்..."

வியந்து பார்த்தான்.

"எப்படி?"

"போன முறை சிம்லாவில் நீங்க சாப்பிட்டதும் டீ கேட்டீங்க. அது நினைவிருந்தது..."

"சாரி தேனுகா..."

கவனமாய் தேநீரை வடிகட்டியபின் திரும்பிப் பார்த்தாள்.

"எதுக்கு சாரி?"

"இது நினைவு இருக்கும்னா, உன்னைப் பற்றி நான் காட்டமாய்ப் பேசியதும் நினைவில் இருக்குமே?"

யோகின் சமீப சினிமா பத்திரிகைகளுடன் முன்னறையில் இருந்தாலும் இளையவர்கள் இருவரும் சின்னக் குரலிலேயே



பேசினர்.

"ம்ப்ச்... எளியவங்க அதை எல்லாம் பொருட்படுத்தக் கூடாது..." கசப்பை வெளிக்காட்டாத குரலில்தான் சொன்னாள்.

"அப்படி நினைச்சியா தேனுகா?"

"எப்படி?" கேள்வியுடன் தேநீரை பீங்கான் கோப்பையில் ஊற்றி நீட்டினாள்.

"அதாவது நீ எளியவள்... பணக்காரி இல்லை என்பதால் நான் மட்டமாய் பேசியதாய் நினைச்சியா?"

"டீக்கு இனிப்பு போதுமா?"

"நிச்சயமாய் அப்படியில்லை... எனக்கு சினிமா நட்சத்திரங்கள் மீது கொஞ்சம் வெறுப்பு, கோபம் உண்டு... அவர்களை ஓரளவு நெருக்கமாய்ப் பார்த்ததால் ஏற்பட்ட சில அனுபவங்களால் ஏதோ கடுப்பு... உன் அழகை, அலங்காரத்தைப் பார்த்ததும்... நீ ஒரு நடிகைன்னு அனுமானிச்சேன்..."

"ஓ... முதல் முறையாக நான் சாலையில் நடந்து போகும் போதே கூட என்னிடம் நீங்கள் எரிஞ்சு விழுந்ததாய்தான் ஞாபகம்..." என்றாள், வாய்க்குள் சிரிப்பொன்றை மென்றபடி.

"அது... அது... கீழே விழுந்த நீ, என்னைத் திட்டுவதற்கு முன் நான் முந்தும் ஒரு தற்காப்புதான்..."

இருவரும் வாய்விட்டு சிரித்தார்கள்...!

## 13

தேனுகாவின் சப்தநாடியும் ஒடுங்கியது.

தொடை வரை நீண்ட, பின்னாமல் விடப்பட்ட வெள்ளை கேசம். மகாக் கூர்மையான நாசி, நயனங்கள். தீக்கங்காய் மின்னும் குங்குமம், அதன் சிகப்பை எடுத்துக்காட்ட மிகக் கருமையாக்கப் பட்ட விழிகள்...

வெடவெடப்பான உடல்...

அதட்டலான பேச்சு...!

இப்படியிருந்த ரக்ஷாதாசைப் பார்த்து, அவளுக்கு ஏதும் ஓடவில்லை.

வெள்ளை மஸ்லின் சேலையை பல கொசுவங்களுடன் வித்தியாசமாய்க் கட்டி, இடக்காலை மடக்கி வலக்காலை தொங்கவிட்டிருந்ததில் ஒரு வித தெய்வீகச் சாயல் சேர்ந்திருந்தது. வெள்ளைத் தாமரை இருக்கைதான் பாக்கி!

"ஆறு மாதமாய்தானே நாட்டிய பரிச்சயம்."

உறுமலாய் வந்தது கேள்வி.

"ஆமாம்மா... எனக்கு நடிப்பு... நடிப்பில்தான் ஆர்வம்."

"நடனம்தான் எல்லாவற்றுக்கும் அடிப்படை"— தீர்ப்பாய் சொன்னாள்.

"ஆகட்டும்மா..."

"அதற்கு அடிப்படை ஆண்டவன் கொடுக்கும் பொறி. அது உள்ளே இருந்தால் ஊதி ஜோதியாக்கலாம்."

பவ்வியமாய்த் தலையசைத்தாள்.

"அந்தப் பொறி... அதாவது ஆண்டவனின் வரம், உனக்குள்ளே இல்லைன்னா நான் ஒண்ணும் செய்ய முடியாது. சரி, இப்ப நான் ஒரு சம்பவம் சொல்லுவேன். அதை நீ நாடக— நாட்டிய பாணியில் செய்து காட்டணும். பார்ப்போம்."

இவளுக்குள் வெலவெலத்தாலும் தலையாட்டினாள். வேறு வழி? மயன், இவளுக்காய் தேர்ந்தெடுத்த பயிற்சியாளர் அல்லவா அவள்!

"ஒரு நூற்றாண்டுக்கு முன்னே வாழ்ந்த வேடுவ இளம் பெண் நீ... உன் காதலன் வரச்சொல்லி விட, நீ தனியே அவனைப் பார்க்கும் ஆவலுடன் காட்டுக்குப் போகிறாய்... கோயிலுக்குப் போவது போல மலர் கூடையுடன்... ஆனால் அங்கே உனக்காய் காத்திருப்பது காதலன் அல்ல... உன்னை அடையப் பார்க்கும் ஒரு காமுகன். இதைச் செய்!"

துப்பாக்கியின் ரவை போல வெளிவந்தது உத்தரவு!



கையிலிருந்த 'ரிமோட்' அழுத்தப்பட, அந்த அறையை இசை நிரப்பியது.

மெல்லிய தபேலா தட்டலும், புல்லாங்குழலுமாய் இணைந்த சுகமான லயம்.

கண்களை மூடி நின்றாள்.

காட்டுப் பாதை, கையில் மலர்க்கூடை,. மனதுள் காதல் குதூகலம். அனைத்தையும் தன்னுள் பரவ விட்டாள்.

அதற்கு இசை உதவியது.

"எனக்கு உன் முகபாவனைகூட தேவையில்லை. உன் முதுகுப்புறம் பார்த்தலே போதும்" வந்தது அடுத்தக் கட்டளை.

சற்று துணுக்குற்றாலும் இப்போது தேனுகா அசரவில்லை.

முதுகு காட்டி நின்றாள்... தபேலாவின் தாளத்துக்கு ஒப்ப நடந்தாள். சுற்றும் முற்றும் பார்த்தாள்...

கானகத்தில் மலர்களுக்கு ஏது குறை...?

கைக்கு எட்டியவற்றோடு, எம்பியும் சிலவற்றைக் கொய்தும் தன் மலர் கூடையை நிரப்பினாள்... அவற்றை முகர்ந்ததும் உடம்பு சிலிர்த்தது...

நடையில் துள்ளல் கூடியது.

சில நேரம் கால்கள் நாணிப் பின்னின...

சில பொழுது துள்ளி விரைந்தன...

காணப் போவது காதலனை அல்லவா?

நெற்றிக்கு மேல் கை வைத்துத் தேடினாள்... உன்னிப்பாய் அவனது காலடி ஓசைக்காய்க் காத்திருந்தாள்...

அதோ... அதோ... காலடி சத்தம்...!

அவன்தான்!

இடை துவள மயங்கினாள்.

மலர் கூடையைக் கீழே வைத்து, தன் கூந்தலை, சேலைக்கட்டை மேலும் சீராக்கிக்கொண்டாள். தன்னையே அழகு பார்த்து, பின் நிமிர...

ஐயோ... இதென்ன?

இந்தக் கொடூரன் எப்படி இங்கே வந்தான்?

உடல் விறைக்கத் திகைத்து, பின் ஆத்திரத்துடன் மூச்சிரைத்தாள்.

அதனூடே ஒரு பய சிலிர்ப்பை ஓடவிட்டாள்...

இசையின் அலை ஓய்ந்தது.

"போதும். உனக்குக் கற்றுத் தரேன்."

தேனுகா திரும்பி நின்று வணங்கினாள்.

"வாரம் இரண்டு வகுப்புகள். உனக்கு கற்பனையும், அதை வெளிப்படுத்தும் உடம்பும் வாய்த்திருக்கிறது... ஆக, நான் அதிகம் சொல்ல வேணாம். மற்றவர்களுக்கு வாரம் ஐந்தாயிரம் கட்டணம்... நீ அதில் பாதி தந்தால் போதும்..."

தேனுகாவுக்கு தலை சுழன்றது.

ஆனாலும் கணக்கிட்டாள்... 'மாதம் பத்தாயிரமா?'

இது சலுகைக் கட்டணமாமே!

எப்போது வகுப்புகள் என்பதை ரக்ஷாதாஸ் சொல்ல, தலையாட்டிவிட்டுக் கிளம்பினாள்...

ஆனால் ஆட்டோவில் ஏறியவளுக்குள் இதைவிட... அதாவது உயர்ந்த கட்டணம் என்பது தவிர வேறு ஒரு அதிர்ச்சியின் குலுக்கல்...

ரக்ஷாவின் முன் நடனமாடியபோது காத்திருக்கும் காதலனாய் தன் மனக்கண்ணில் அவள் கொண்டு வந்து நிறுத்தியது... ரவிதேவ்!

அவனை மனதில் வரித்தே அப்படி உல்லாச நடை போட்டாள்.

ஆனந்தத்தில் சுழன்றாடினாள். ஏன்?

கற்பனைக்கு சாருகான், மாதவன் போதுமே...! சமீப காலமாய் பிடிவாதமாக தன் சிந்தனைகளில் ஒட்டிக் கிடப்பவன், ரவிதேவ். முதலில் கசப்பும் கோபமுமாகவே இருப்பினும் கடந்த சில நாட்களில் அவர்களின் உறவு



இலகுவாய்... இனிமையாகி இருந்தது.

அது, அவளுள் பரப்பிய உற்சாக பரபரப்பு... இதுவரை அனுபவிக்காத அனுபவம்!

"எப்போதுமே கனவு கண்டபடியேதான் நடக்கிறதா?"

கேலியான கேள்வி அவளைத் தட்டியது.

"ஓ... நீங்க... எப்படி இங்கே?"

"ஆரன் அடிச்சும் மசியாத கனவு... ம்? பெரியப்பா உன்னை வீட்டில் விடச் சொன்னார்..."

"உங்களுக்கேன் சிரமம்?"

"பொழுது போகிறதுதான் இங்கே சிரமமாய் இருக்குது."

காரில் அவனருகே அமர்ந்தவள், கேட்டாள்.

"யமுனா எங்கே?"

"கோபம்..."

"ஏதோ நகை ஆசையில் உங்களை அன்று தாமதப் படுத்தியதற்காய் இன்னுமா கோவிச்சுகிறது நீங்க?"

"தப்பாய்ப் புரிஞ்சுக்கிட்டே."

"என்ன?"

"கோபம் எனக்கில்லை. அவளுக்கு!"

அசட்டு சிரிப்புடன் அவன் சொல்ல, இவளுக்குள்ளும் சிரிப்பு முட்டியது. "வராதேன்னுட்டா!" என்றான்.

பிரதான சாலைக்குள் நுழையும் சிக்னலில் கார் சன்னமாய் குலுங்கி நின்றது.

வெளியே நின்ற ஒரு சேரிப் பெண் தன் குழந்தைக்கு பலூனைக் காட்ட, அது அந்த வர்ண உப்பலைப் பிடிக்க, அவள் இடுப்பிலிருந்து கால்களை உதைத்து "தா தா" என மழலையில் கூச்சலிட்டது.

இந்தக் காட்சியை ரவி பார்க்கிறானா என்று ஓரக்கண்ணால் அவள் நோட்டமிட, அவனும் சிறு கவிதை போன்ற அக்காட்சியில் லயித்துதான் இருந்தான்!

# 14

கார், நெரிசலான பகுதியைக் கடந்த பிறகு மெள்ள ஆரம்பித்தாள்.

"அந்தக் குழந்தை ஏன் பலூனுக்கு அத்தனை ஆசைப்பட்டது தெரியுமா?"

முடியும் அடியும் இல்லாத அக்கேள்வியில் சில கணங்கள் தடுமாறியவன், தாமதமாய்க் கேட்டான்.

"ஓகோ... சிக்னலில் நின்றபோது பார்த்த தாய்— குழந்தை பற்றி சொல்லுறியா?"

"அதேதான். பதில் சொல்லுங்க..."

தான் இப்படி பேசுவது அதிக பிரசங்கித்தனம் என்பது புரிந்தும் ஏனோ சொல்லாமல் இருக்க முடியவில்லை.

"பதில்...? ஏன் அந்த பலூனுக்காக பாப்பா தவிச்சதுன்னா? ம்ம்ம்... ஏன்னா அது லேசில் கைக்கு எட்டலை... அதான் அந்த ஈர்ப்பு."

"ரொம்ப சரி. ஆண், பெண் ஈர்ப்பிலும் கொஞ்சம் விலகல், ஒதுங்கல் இருந்தால்தான் எடுபடும்..."

அதன் அர்த்தம் புரிந்து, புருவங்களை உயர்த்தியவன் வாய் விட்டுச் சிரித்தான்.

மிகக் கவர்ச்சியான அச்சிரிப்பை விழியெடுக்காமல் பார்த்து ரசித்தாள், தேனுகா.

"குழந்தைக்கு சரி. யமுனா குமரியாச்சே?"


"கொஞ்சம் குழந்தைத் தனமான குமரி?"

"உண்மைதான். ஆக நான் பலூனாட்டம் பறக்கணுமா?"

"அவங்க உங்களை ஒதுக்கியதும் நீங்க தவிச்சீங்க... யமுனாவையே நினைச்சு ஏங்குனீங்க..."

"இல்லை... அது தப்பு. பொழுது போகவில்லையே தவிர





ஏக்கமெல்லாம் இல்லை..."

அவன் அவசரமாய் மறத்தது, இவளுக்கு ஏனோ ஆசுவாச மாய் இருந்தது.

"நீங்களும் கொஞ்சம் எட்டியே இருந்தால் யமுனா தவிச்சு, போர் அடிச்சு, வழிக்கு வந்திடுவாங்க..."

"மனோதத்துவ மாமேதை... இப்படியொரு பட்டமும் உனக்குத் தரலாம், தேனுகா !"

"அப்படின்னா பெரும்பாலான பெண்களுக்கு அதைக் கொடுக்கணும். பெண்களுக்கு இதுமாதிரியான சூட்சுமங்கள் அதிகம்."

"ஓ... அதான் யமுனா என்ற ஆறு என்னை இப்படி மூழ்க விடுகிறதா? ஐதராபாத்துல வேலை இருக்குது. போயிட்டு வரட்டுமா?"

கேள்வியுடன் இவளைப் பார்த்தான்.

"அது உங்க வேலையை பொறுத்தது."

"ப்ற என்கிறே... பிறகு உன் இஷ்டம் என்கிறே? இதுவும் பெண்ணின் சூட்சும விளையாட்டா?"

"கொஞ்சம் கண்டுக்காமல் விட்டால் போதும்... அதுக்காக இப்படி ஊரைவிட்டே கிளம்பணும்னு இல்லை. அவ்வளவு தான்."

"இப்ப குருதட்சணை ஏதாவது தரணுமே?"

காரை ஓரமாய் நிறுத்தினான்.

"அதிகபிரசங்கித்தனமாய் ஆலோசனை சொன்ன நான் குருவா?"

"பின்னே... அகக்கண்ணைத் திறந்துவிட்டீர்களே?" என்றபடி அவன் இறங்க, இவளும் இறங்க வேண்டியதாயிற்று.

ஐஸ்கிரீம் பார்லரில் அமர்ந்து, அவன் வரவழைத்த ஐஸ்கிரீமை ரசித்து சாப்பிட்டாள்.

அவனைப் பார்ப்பதில் கண்களுக்கும் அலாதி குளிர்ச்சி,



தென்பட்டது!

அடுத்ததாய் அருகிலிருந்த துணிக்கடைக்குள் அவன் நுழைய, இவள் கடை வாசலிலேயே தயங்கினாள்.

"குருஜி வாங்க... தட்சணையை தேர்ந்தெடுங்க..."

"ஐஸ்கிரீமே போதும்... அப்பா காத்திட்டிருப்பார்..." தன் கைக்கடிகாரத்தைத் தட்டிக் காட்டினாள்.

"இன்னும் ஒரு மணிகூட ஆகலை... இருபது நிமிடத்தில் வீட்டுக்குப் போயிடலாம்."

"எனக்கு ஏதும் தேவையில்லை."

"குருவுக்கு வரும் தேங்காய் பழமெல்லாம் அவருக்குத் தேவையா என்ன? மறுக்காமல் பயன்படுத்திக்கிறார்— அவ்வளவு தான்... இந்த குருவுக்கு சேலை அல்லது சல்வார்?"

"எனக்கு ஏதும் வேணாங்க... பிளீஸ்..."

இவளையே விழுங்குவது போல பார்த்தவனின் பார்வையில் என்ன தெரிந்தது...?

ஏமாற்றம்... கோபம்... இல்லை... ஒருவித பிரமிப்பு?

கடையில் படி இறங்கியபடி கேட்டான்.

"அப்ப சாப்பிடலாமா?"

"ஐஸ்கிரீம்கூட, நான் இன்னும் மூணு கிலோ கூடணும்னு சொன்னதால்தான் சாப்பிட்டேன். வீட்டில் உணவு பட்டியலின் படி கீரை மசியல், சாலட், நெய்யில் தாளிச்ச பருப்பு, முட்டை எல்லாம் தயாராய் இருக்குது..."

"அப்படீன்னா நான் அங்கே சாப்பிடலாமா?"

"நிச்சயமாய்" — மகிழ்வுடன் சம்மதித்தாள். "ரெண்டு பாக்கெட் தயிர்சோறு மட்டும் வாங்கிட்டு போயிடுவோம்... சோறு போதாமல் ஆயிடுச்சுன்னா?"

இறங்கியவன், சோறுடன் அவியல், இனிப்பு வகைகள் என்று பல பார்சல்களுடன் வந்தான். பதினைந்தாம் நிமிடம் இவளது வீட்டில் அப்பாவுக்கும் ரவிதேவுக்கும் அறிமுகம் நடந்தது.

"வாங்க தம்பி. உங்க பெரியப்பா உங்களைப் பற்றி பெருமையாகப்பேசுவார். அவரையும் கூட்டி வந்திருக்கலாமே?"

"பெரியப்பாவுக்கு சென்னை நகரின் புகையும், தூசும் ஒத்துக்கலை. சிம்லாவிலுமே அவர் வீடு ஒதுங்கித்தான் இருக்கும்."

"தனியாய் இருப்பாரே... அதுதான்..."

"இன்றுதான் அவருக்கு ஒத்தாசைக்கு விமலி வந்து சேர்ந்தாள். சிம்லா செய்திகள் எல்லாம் ஒலிபரப்பிக்கொண்டிருப்பாள்..."

"அவங்களுக்கு கால் குணமாயிடுச்சா?"

"ஆமா... பெரியப்பாவுக்கும் இந்தக் கடற்கரை காற்று, மீன் எல்லாம் பிடிச்சு போச்சு... தினம் காலார நடக்கிறதால் ஆரோக்கியம் கூடி இருக்குது."

கூடவே ஒரு தட்டு போட்டு தேனுகா பரிமாற, இரு ஆண்களும் தொழில் பற்றி சுவாரஸ்யமாய்ப் பேசியபடி சாப்பிட்டனர்.

"அடேங்கப்பா... தம்பி, சிறுவயசிலேயே உங்களுக்கு எத்தனைப் பெரும் புள்ளிகளோடு பழக்கம்!"

"அவங்களோடு ரொம்பக் கவனமாய்ப் பழகணுங்க. சிலபேர் காரை வாங்கிய மறுவாரமே, 'இது ராசியில்லை. வேறு மாற்றிக்கொடு'ம்பாங்க. எல்லாத்தையும் சமாளிக்கணும்."

அது போன்ற சம்பவங்களை ரவிதேவ், சுவாரஸ்யமாய் விவரிக்க, பொழுது ஓடியே போனது.

தேநீருக்குப் பின் சுந்தரத்தையும் கூட்டிக் கொண்டுதான் கிளம்பினான்.

"பெரியப்பாவுக்கு காலை முழுக்க படம் சம்பந்தமாய் வேலை இருந்தது. இப்ப பொழுது போகாமல் எனக்காக காத்திட்டிருப்பார். நீங்களும் வந்தால் ஆனந்தப்படுவார் சார்..."

குளிரூட்டப்பட்ட உயர்ரக காரில் பயணம் வெகு சுகமாகவே இருந்தது... யோகினுடன் அறிமுகமானதும் பெரியவர்கள் இயல்பாக நெருங்கிக் கொண்டனர்.

அவர்கள் பேசியபடி மெள்ள நடக்க, இளையவர்கள் தனித்து விடப்பட்டனர்.



சிறுவயதிலிருந்தே கடற்கரை, தேனுகாவைக் குதூகலப் படுத்தும். ஓடி ஓடி சிப்பிகளைப் பொறுக்குவாள். எடுத்த கடல் குச்சிகளை தூய வைத்து சிலேட்டில் எழுத உபயோகிப்பாள்... அப்படி எடுத்த சில சங்கு, சிப்பிகள் இன்னும்கூட உண்டு...

ரவியோடு இணைந்து நடக்கும்... அவ்வப்போது லேசாய் தோள் உரசும் அனுபவத்தை இப்போது எடுத்து இதயத்துள் பத்திரப்படுத்தினாள், தனக்கே சொந்தமான புதையலாகப் பொதிந்து வைத்தாள்.

## 15

**தா**னே தனக்குக் குழி வெட்டிக் கொண்டாயிற்று...! வேறென்ன சொல்ல! இப்படி மருகினாள், தேனுகா.

ஐதராபாத் போன ரவி, அங்கிருந்தே வெளிநாடு போவதாய் தகவல் வர இவளுக்குத் தவித்தது.

"பிரான்சில் இருக்கிறாரா?" யோகினிடம் விசாரித்தாள்.

"ஆமாம்மா. அங்குள்ள காசினோ, உலகப்புகழ் பெற்றது.

கேளிக்கை, சூதாட்டம் நடக்கும். அதன் வாசலில் உலகின் அத்தனை அதி நவீன கார்களையும் பார்க்கலாமாம்! விமானத்தில் வரும் கோடீஸ்வர பயணிகளுக்கு டிரைவரோடு கூடிய டாக்சிகள். அவர்களோடு வரும் பெண்களின் நகைகளும் அலாதியாய் இருக்குமாம்..."

இவளுக்குள் சிறு பொறாமை நெளிந்தது. இப்படி நகைகளைப் போடக் கூடிய பெண்கள் சாதாரண அழகுடனா இருப்பார்கள்...? என்ற கடுப்பு.

"சிலர் சூதாட்டத்தில் ஜெயிக்கும் பணத்தில் காரை விலை பேசி வாங்குவதுண்டு. பலர் இருப்பதை இழந்துவிட்டு போவதும் உண்டாம்!"

"அதிருஷ்ட சக்கரம் எப்படி வேணுமென்றாலும் சுழலும்..."

ஆனால் இரண்டு நாளில் ரவிதேவ், சென்னைக்கு எதிர் பாராமல் வர, அது தன் பக்கமாய் சுழலுவதாய் மகிழ்ந்தாள், தேனுகா.

அன்று மதிய உணவுக்குப் பின் யோகின் படுத்துவிட, இவள் ரேணுகாதேவியின் படங்களை மீண்டும் மீண்டும் ஓடவிட்டு அதில் அமிழ்ந்திருந்தாள். அந்த அழகிய நட்சத்திரத்தின் ஒவ்வொரு அசைவிலும் அலாதி நளினம், புதுமை இருந்தது உண்மை.

அதை அப்படியே ஒற்றி, தனக்குள் உறிஞ்சி எடுத்தாள். அந்த நடையை, சிரிப்பைதான் மிக இயல்பாய் செய்யும் அளவில் தன்னில் பதித்துக்கொண்டிருக்கையில்தான் அந்த 'ஆரன்' ஒலி அவளை உசுப்பியது.

குதித்து எழுந்தவள், ஜன்னலருகே ஓடினாள்.

ரவி இப்படித்தான் ஆரனை அழுத்துவார். இசை போல...

வெள்ளை முயல் போன்றிருந்த காரின் கதவைத் திறந்து ரவி இறங்க, இவள் முகம் பூவாய் மலர்ந்தது!

"வாங்க... பிரான்சு போனதாய்ச் சொன்னாங்க...?"

"இல்லை... போகும் முன் இங்கே ஒரு நாளாவது வரவேண்டிய நிர்பந்தம்..."

"பெரியப்பா தூங்குகிறாங்களே... எழுப்பவா?"

"எழுந்ததும் பார்த்தால் போதும்..."

"என்ன சாப்பிடுறீங்க?"

"விமானத்தில் சாப்பிட்டேன்... டீ போதும்... உன் இஞ்சி டீ பிரமாதமாய் இருக்கும்..."

"ஒரே நிமிடம்" குழந்தை போல உள்ளே ஓடினாள். ஆவி பறக்கும் பானத்தோடு, சூடாக்கப்பட்ட கட்லெட்களைப் பரிமாறினாள். அவன் சாப்பிட்டபடி பேசியதை ரசித்தாள்.

காலி கோப்பையை வைத்தவன், சிறு அட்டைப்பெட்டியை இவளிடம் நீட்டினான்.

"இது உனக்குப் பிடிக்குதா பாரு..." பெட்டிக்குள் இருந்தது



இளம் நீல நிறச் சேலை. வேலைப்பாடுடன் மின்னியது.

"நல்லா இருக்கு..."

"உனக்குத்தான்..."

"எனக்கு இதெல்லாம் தேவையில்லையே..."

"எனக்கும்தான் தேவையில்லை... ஒரு திறப்பு விழாவுக்குப் போக நேர்ந்தது. தெரிஞ்சவங்க... ஏதேனும் வாங்க வேண்டிய நிர்பந்தம். அதான் வாங்கினேன்..."

"உங்களுக்கு ஐதராபாத்தில் யாரைத் தெரியும்?"

"யாரையா? இந்தக் கடை உரிமையாளரின் கணவரை, அவருக்கு ஒரு காரை விற்கத்தானே அங்கே போனேன்."

"ரொம்ப நன்றி..."

"பரிசை ஏற்றதற்கு நன்றி... அப்புறம் உனக்கு இன்னுமொரு நன்றி."

"அது எதற்கு. டீக்கா?"

"சரி, வஞ்சனை பண்ணாமல் அதற்கும் நன்றி சொல்லிடுறேன். ஆனால் நான் சொல்ல வந்த நன்றி நவிலல் பெரிய காரியத் துக்கு... அதாவது உன் உபதேசம் நல்லா வேலை செய்யுது..."

விஷமமாய் சிரித்தன அவன் விழிகள்.

"அதாவது யமுனா காரியத்தில்?"

"ம்... நான் சற்று விலக, அம்மா எம்புறாங்க... பவுர்ணமி கடலலை போல ஒரே ஆர்ப்பரிப்பு!"

"அப்ப எல்லாம் சரியாயிடுச்சா?"

கேட்டவளுக்குத் தொண்டை அடைத்தது.

"இப்பத்தான் காரியமே சரியாய்ப் புரியுது, தேனுகா..." என்றான், புது தினுசாய். இவளுக்கு முழுக்க புரியாவிட்டாலும் பிறரது காதல் சமாசாரத்தை அதிகம் கிளறுவது நாகரீகமில்லை என்று மவுனமானாள்.

"சரி, உன் காரியமெல்லாம் எப்படி?"

"ம்... டான்ஸ் வகுப்புக்கு போறேன், ஒரு சம்பவத்தை கிரகித்து

வெளிப்படுத்துவது எப்படிங்கிறதை ரக்ஷாதாஸ் அறுபுதமாய் சொல்லித் தர்றாங்க. உடைகளுக்கான அளவெல்லாம்கூட எடுத்தார்கள்."

"படப்பிடிப்பு எப்ப ஆரம்பம்?"

"பணம் திரட்டலை போல..."

"உனக்கு ஏதும் பணப் பிரச்சினை...?" அவனும் இழுத்தான்.

இதுவரை சேமிப்பில் வண்டி ஓடிக்கொண்டிருந்தது. முதலில் முறுமுறுத்து மறுத்த அப்பா இப்போது உற்சாகமாய்ப் பேசினார்.

'யோகதேவ் பாந்தமான பெரிய மனிதரும்மா. என்னை அவரோடு வந்து தங்கச் சொல்கிறார். ரெண்டு பேருக்கும் ஒரே ரசனை. பழைய படங்கள், நாவல்கள், எல்லாத்துக்கும் மேல நீ! அன்று கடற்கரையில் நடந்துவிட்டு வந்த பிறகு எத்தனை சுகமாய் தூங்கினேன் தெரியுமாடா? அவர்கிட்ட இப்ப பணம் பற்றியெல்லாம் பேச்செடுக்க வேணாம்...?'

ஆக பணப்பிரச்சினையை இவளும் மறந்திருந்தாள்.

"ஏன் கேட்கிறேன்னா... பணம் இல்லையேங்கிற பதற்றத்தை இந்த சினிமா தொழிலில் நீ காட்டினால் அது தப்பாயிடும்..." ரவி சொன்னான்.

"அந்த நபர் ஒரு பெண்ணாய் இருந்தாலும் கூடவா?"

இவள் சீண்டினாள்.

"ச்சு... விளையாடாதே தேனுகா... இப்ப கம்பெனியின் அதாவது பெரியப்பாவின் நிதி நிலைமை இறுக்கமாய் இருக்குது. சீக்கிரம் உனக்கான சம்பளம் வரும்... அது வரை..."

"சமாளிச்சிடுவேன்..."

"நல்லது" பிறகு அவர்களது பேச்சு... வேறு விஷயங்களில் படர்ந்தாலும், இவளுக்கு அவன் காட்டிய அந்தக் கரிசனை பிடித்திருந்தது. அவன் பிரியமுடன் கேட்ட விதம் உள்ளே தித்தித்தபடி...

தன் பணத் தேவையைப் பற்றி சொல்லி இருக்கலாமே?

குடும்பத்தில் இருவருக்குமே சம்பளம் நின்றபிறகு,



மொட்டைத்தலைக்கு சவுரி வைத்துக் கட்டியது போல இவர்களுக்கு ஒரு வேலைக்காரி வேறு... எகிறும் செலவுகள்... எப்படி சமாளிப்பது?

ஆனால், அந்தக் கவலை எதையும் வெளிக்காட்டாமல் சிரித்துப் பேசினாள். இனி ரவியை எத்தனை நாள், வாரங்கள் கழித்து இப்படி பார்க்கக்கூடுமோ? அதுவும் யமுனா இன்றித் தனியே...

# 16

வீட்டின் உரிமையாளர் அப்படி கத்துவார் என்று தேனுகா நினைக்கவில்லை.

ஏன், அந்நாள் வரை அவரை நின்று, நிலைத்து பார்த்ததுகூட இல்லையே! அப்பாவே நேரில் போய் பிரதி மாதம் ஐந்தாம் தேதி வீட்டு வாடகையைத் தந்துவிடுவார்.

போன மாதம் தாமதமாயிற்றாம்.

இம்மாத வாடகை இன்னும் வரவில்லையாம்... அப்பா மறந்துவிட்டாரா?

அதற்காக இப்படி வீட்டுக்காரர் அலற வேண்டுமா? அதுவும் அனல் போன்ற வார்த்தைகளில்!

'நாடகம், நடிப்புன்னு போயிட்டா மரியாதையான நடப்பெல்லாம் மறந்திடும் போல? மாசம் முடியப்போகுது— இன்னமும் வாடகை வந்தபாடில்லை. வேலையும் போயிடுச்சாமே? இதோ பாருங்க, சுந்தரம் சார்... இந்த வீடு என்னுதில்லை— என் தங்கச்சிக்கு ஒரு வருமானம் போல இருக்கட்டுமேன்னு எங்க அப்பா வாங்கிப்போட்ட சொத்து.

வாடகையை வசூலிச்சு அனுப்பவேண்டியது மட்டும் நான். பணம் வரலைன்னா மாப்பிள்ளையோட பொல்லாப்பு எனக்குல்ல வந்துசேரும்? இந்த எண்ணூறு ரூபாயைக் கொடுக்க முடியலைன்னா சொல்லிடுங்க... ஆயிரம் தர தயாராய்

இருக்காங்க... நீங்க நாடக அறையிலேயே தங்கிடலாம்.'

சொற்களின் தாக்குதலில் திணறிவிட்டாள். கூசிப்போய் அவள் உடனே கிளம்பியது யோகதேவ்வைக் காணத்தான்.

'இனி பஸ்சில் கிளம்பாதே, தேனுகா. வாடிப்போயிடுறே. இந்த எண்ணுக்கு போன் போட்டால் வீட்டுக்கே டாக்சி வரும்' என்று ரவி கொடுத்திருந்த எண்ணைப் புரட்டக்கூட நேரமில்லாதது போல ஒரு தவிப்பு.

பேருந்தில் ஏறிவிட்டாள். வீட்டு வாடகைத் தரமுடியாத வளுக்கு கார் சவாரியா என்ற எக்களிப்பான ஆத்திரமும் காரணம்தான்!

பணம், பதவி பெரிதாய் இல்லாவிட்டாலும் போதிய கவுரவத்துடன் வளர்ந்தவளுக்கு இச்சிறு சலசலப்பு தாளவில்லை. மிரண்டுபோனாள்.

அப்பா விக்கித்துவிட்டார்.

மோர் குடிக்க வைத்து, ஆசுவாசமாய்ப் பேசி, பக்கத்து வீட்டு மாமியைப் பார்த்துக்கொள்ள கேட்டுக்கொண்டே கிளம்பினாள்.

அப்போதுதான் அப்பா மெள்ள விபரம் சொன்னார்.

இனி மளிகை, பால் என்று எல்லாரும் பாக்கிக்காக வந்து தொண்டையை நெருக்கும் முன் ஏதேனும் செய்ய வேண்டும்.

ஒப்பனை செய்யும் அறையிலேயே தங்கிக்கோ என்றஎக்களிப்பு, குத்தி கண்களை கலங்கச் செய்தது.

இப்படி காசுக்காக மற்றவர்களின் படி ஏறவேண்டி வந்து விட்டதே என்ற அவமானத்தில் கண்ணீர் வழிந்தது.

களைத்த முகத்தில் வடிந்த கண்ணீரைத் துடைத்தபடி யோகின் வீட்டினுள் நுழைந்தவளுக்கு இங்கும் அதிர்ச்சி காத்திருந்தது.

யோகினின் அருகே அமர்ந்து பேசியபடி இருந்தவள்—யமுனா!

'ச்சே... சுத்த அசட்டுத்தனம்... முகத்தைத் துடைத்து, சிராக்கக்கூட இல்லாமல் இதென்ன அவசரம்?'

நனைந்த கண், கன்னங்களுமாய் ஒரு வீட்டுக்குப் போகும்படி அப்படி என்ன ஆகிப்போனது?



அட பாவுக்கு ஒன்றுமில்லையே... பிறகென்ன? ஆனால் அப்பா அதிர்ந்து, சோபாவில் சோளக்கொல்லை பொம்மை போல சரிந்திருந்த விதம் சரியில்லை.

ஆக, விரைவில் காசுடன் போக வேண்டும்!

'அப்பா... காசுதானே? இதோ கைநிறைய இருக்குப்பா... இதற்காகவா சோர்ந்துபோனீங்க?' என்று தேற்றி, அவரை நிமிர வைக்க வேண்டும்.

"வாம்மா தேனுகா. ஏன்... என்ன... பஸ்சிலே வந்த அலுப்பா?" சற்று பதறி எழுந்தார், யோகின்.

"உங்களைப் பார்க்கலாம்னுதான்..."

"உட்காரும்மா... விமலி, 'ஜூஸ்' எடுத்து வாம்மா."

"இருக்கட்டுங்க... அவசர காரியமாய் வந்தேன்."

"உட்கார்ந்து, பழரசம் குடிச்சு பிறகு சொல்லலாம். அப்பா நல்லா இருக்காங்கல்ல?"

கேள்வியில் இவளுக்குள் மறுபடி அழுகை முட்டியது. யமுனா முன்பு தன் அவல நிலையைச் சொல்லுவதா என்ற அவமானச் சங்கடம்.

"நான் வர்றேன் மாமா... அவள் ஏதோ தனியா பேசணும்னு நினைக்கிறாள் போல. நாமதான் சாவகாசமாய் எப்ப வேணும்னாலும் பேசலாமே?"

உரிமையும் உல்லாசமுமாய் அறையைவிட்டு வெளியேறினாள், யமுனா.

"என்னாச்சு தேனுகா... உன்னை இப்படி பார்த்ததில்லையே?"

"பிரச்சினை ரொம்பப் பெரிசில்லைங்க. ஆனா, எனக்கு அதைத் தாங்க திராணியில்லை... அப்பாவும் துவண்டுட்டார்."

"சரி, என்ன பிரச்சினை?"

"பணம்... பணம் தேவைப்படுது. அப்பாவுக்கும், எனக்கும் சம்பளம் இல்லை. போதாதுக்கு வேலைக்காரி, நடன கட்டணம், எங்க வண்டி, இரண்டாம் மாசமே இடிச்சு நின்னுடுச்சு. நிலைமை இப்படி தொட்டுக்கோ துடைச்சுக்கோன்னு இருப்பதை

நான் உணரலை..."

"நானும் உணரலையேம்மா... அதுதான் சங்கடமாக இருக்குது. ரக்ஷா தாகக்கு பத்துன்னு, உன் செலவுகளுக்குமாய் இருபது. இருபத்தையாயிரமாவது தேவைப்பட்டிருக்குமே?"

"ஐயோ... அவ்வளவெல்லாம் வேணாங்க. ஆறாயிரம் எங்க செலவுக்குப் போதும், சமாளிச்சிடலாம். உங்களைத் தொந்தரவு செய்யக்கூடாதுன்னு..."

"படத்துக்கான முதலை எப்படிப் புரட்டுறதுங்கிற யோசனையில் அத்தியாவசிய செலவுகளைப் பற்றி நினைக்க விட்டுட்டேன் பாரும்மா... விசாரிச்சு பணம் கொடுத்திருக்கணும்... ஆனா, நாம பணத்தைப் பற்றி இதுவரைப் பேசினதில்லை... ரவியைப் போல, எனக்கு நீ இருக்கேன்னு பூரிப்பாய் நினைத்தவன், கடமைகளை மறந்துட்டேன் பார்த்தியா?"

பரிவுடன் இவள் தலையைக் கோதிவிட்டார்.

"அந்த உரிமையில்தான் நானும் ஓடி வந்தேங்க."

"அப்ப, மாமான்னு கூப்பிடேன். அந்த உரிமையை நானும் ரசிக்கட்டும்."

சற்று தயங்கினாலும் பிரியமாகவே ஒத்துக்கொண்டாள்.

"ஆகட்டும் மாமா."

"இப்போதைக்கு எவ்வளவு தேவை?"

"வாடகைப் பணம் எண்ணூறுதான். ஆனால், மளிகை, பால்..."

"ஒரு நிமிடம்மா..." என்று உள்ளே போனவர் ஐந்தாம் நிமிடம் பணக்கட்டோடு வந்தார்.

"கைப்பை ஏதும் இல்லையாம்மா?"

"இல்லை மாமா... இந்த குட்டி பர்ஸ்தான், அவசரத்தில் எடுத்துட்டு வந்தேன்."

அங்கிருந்த கனத்த 'பிளாஸ்டிக்' உறையில் பணத்தைப் பொதிந்தவர், "சாப்பிடுறியா?" என்றார்.

"அப்பா காத்திருப்பாங்க... நன்றி."



வாசல் வரை வந்து பையைத் தந்தார்.

"இருபது போதும்ல?"

"போதும், நன்றி மாமா."

"மகிழ்ச்சி. என் கவனக்குறைவால்தான் உனக்கு இந்த மனக்கஷ்டம்."

"எனக்கே எங்க நிலைமை சரியாய்த் தெரியலையே... வர்றேன்."

"அப்பாகிட்ட நீ வந்துகிட்டு இருக்கிறதாய்த் தெரிவிக்கிறேன்."

"ம்... நன்றி."

தாழ்வாரத்தின் மூலையில் ஒரு மூங்கில் நாற்காலியில் அமர்ந்திருந்த யமுனாவையும் நோக்கி மரியாதை நிமித்தம் புன்னகையுடன் விடைபெற்றாள், தேனுகா. ஆனால், அங்கே பதிலுக்கு முறுவல் இல்லை.

## 17

அன்று அந்த இருண்ட முகத்தைக் கவனிக்கும் மனநிலையோ, ஆராயும் சாதுரியமோ தேனுகாவுக்கு இல்லை. அவசரமாய் வீடு திரும்பினாள். அதே அவசரத்தில் நாட்கள் வாரங்களாகி, மாதங்களாகவும் திரண்டு மறைந்தன.

இது இன்னது—இப்படி என்று உணரும்முன்பாகவே அடுத்தது நிகழ்ந்து அவளை ஆச்சரிய சுழலுக்குள் இழுத்து, அமிழ்த்தியது.

எல்லாம் இனிய சுழல்களே! பணம் பற்றிய கவலை விலகியதுமே அவள் மனது இயல்பாய், ஏற்ற பாத்திரத்திற்குள் இறங்கிவிட்டது.

கவனமாய்ச் சாப்பிட்டு, அழகுக் குறிப்புகளை சலிப்பின்றி செய்ய, அவளது தோற்றப் பொலிவு சகட்டுமேனிக்குக் கூடியது!

துலக்காமல் எண்ணெய் விட்டு விட்டு ஏற்றப்படும் விளக்கு, பிசுக்கேறி கிடப்பது போலத்தானே மனித உடலும்.

இது சாதாரண அரப்பு, புளி தேய்த்தல் இல்லை. மிக மென்மையான, ஆனால், உயர்ரக சுத்திகரிப்பு. ஆக, தேனுகா— பொன் விளக்காய் மாறி இருந்தாள்.

ரேணுகாதேவியின் சில படங்களைப் பார்த்துப் பார்த்து தன்னுள் பதிவாக்கி இருந்த அசைவுகளை அவள் மிக இயல்பாய் வெளிக்காட்ட முடிந்தது.

காட்சிகளை இயக்குநர் மயன் விளக்கியதுமே அதை கிரகித்து ரேணுகாதேவியாகவே அவள் வாழ்ந்த அழகில் பிரமித்துப் போனார்கள், மயனும் யோகினும்.

"அபாரம்!"

சரியான நடிகை கிடைத்துவிட்ட மகிழ்வில் குழுவே ஒன்றி, ஒற்றுமையாய் இயங்கியது. அனைவரும் படத்தில் தங்கள் திறமைகளைக் காட்டுவதைச் சவாலாய் எடுத்துக்கொள்ள, படம் கவிதையாய் உருப்பெறத் தொடங்கியது.

நடித்த இரு படங்களிலேயே பல விருதுகளை வென்று திரைவானில் நீங்காத நிலவாய் பதிந்திருக்க வேண்டிய ஒரு நிலாப் பெண், முழுக்க பிரகாசிக்கும் முன்னர் மறைந்தே போனாளே என்று பார்ப்பவர் ஏங்கும் அளவுக்கு படம் உருவானது.

ரேணுகாதேவியின் ஆவிதான் தனக்குள் புகுந்துவிட்டதோ என்று தேனுகாவே மிரளும் அளவில் அவள் மாறிப்போனாள்.

ஒவ்வொரு காட்சிக்கும், உணர்வுக்கும் தோதான உடைகளும், அலங்காரமும் செய்யப்பட்டு, ஒரு அரிதான கனவை அங்கு நனவாக்கி அதைப் பதிவும் செய்தார்கள்.

அந்த அழகிய முப்பது நாள் உழைப்பை 'எடிட்டிங்' முடிந்து அரை மணி நேரப் படமாய்— குறுங்கவிதையாய் பார்த்ததும் அவள் அழுதேவிட்டாள்.

தன் கனவு கைவரப்பெற்ற ஒரு மன எழுச்சியில் ஊற்றெடுக்கும் அழுகை...

அவள் தன்னிலைக்கு வந்தபோது மற்றவர்களின் கண்களில்





ராணி காமிக்ஸ்

வெளிவந்துவிட்டது!

அதிரடிக் கதை

சூதாட்டக்காரி



வண்ணப் படக்கதை

சூதாடிகளிடம் வழிப்பறி செய்யும் சூதாட்டக்காரி! அவளை மடக்கிப் பிடித்தது எப்படி?

"ராணி காமிக்ஸ்" பாருங்கள்!

இப்போது விற்பனையாகிறது!!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

# இதயம் பேசுகிறது

நாவலைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். முகவரி: இதயம் பேசுகிறது, "ராணி முத்து", சென்னை - 600 007.

## எங்களை வசப்படுத்திய நாவல்!

மணிமாலாவின் "என்வசம் நான் இல்லை" நாவலைப் படித்ததும் நெகிழ்ந்துவிட்டேன். உண்மையாகவே "பவித்ரா" போன்ற குணமுள்ள பெண்ணுக்காக மனசு ஏங்கத் தொடங்கிவிட்டது.

*வீ. பெரியசாமி, தேனூர்.*

மிகவும் அருமையான படைப்பு. எங்களை வசப்படுத்திவிட்டது. நாவலைப் படித்து முடிக்கும்வரை "என் வசம் நானில்லை."

*பிரியா மகேஸ்வரி, எரப்பரெட்டிபூர்.*

வியக்க வைத்த, வித்தியாசமான, மாறுதலான கதையோட்டம். அசத்தியிருந்தார், மணிமாலா.

*தி. ஸ்ரீசற்குரு, முத்தம்மன் நகர்.*

நாவலைப் படிக்கும்போது உண்மையில் அழுதேவிட்டேன். ஒரு தந்தையின் பாசத்தை அப்படியே அனுபவித்து எழுதி இருக்கிறார், மணிமாலா. அவரை மனதார பாராட்டுகிறேன்.

*சகுணா ஜெயராம்,*
*வெள்ளூர் சத்திரம்.*

மணிமாலா மட்டுமல்ல நாங்களும் எங்கள் வசம் இல்லை... நாவல்— மெய்மறந்து, மெய் சிலிர்க்கச் செய்தது!

*வள்ளி, திசையன்விளை.*

நாவலைப் படித்து முடித்ததும் என் மனம் என் வசம் இல்லை. கதாபாத்திரங்களுடன் என் மனமும் ஒன்றிவிட்டது.

*விஜயலட்சுமி, ஆதம்பாக்கம்.*

மனதை நெகிழ வைக்கும் மாறுதலான, உணர்ச்சிகரமான நாவல். பவித்திராவை மறக்க முடியவில்லை!

*த. சத்தியநாராயணன், அயன்புரம்.*

அழகான மலர்கள்தான் முதலில் பறிக்கப்படும். அன்பான உள்ளங்கள்தான் முதலில் பிரிக்கப்படும். கடைசியில் பிரிவோ என கலங்கினேன். இளசுகளை இணைத்து வைத்த விதம் அருமை... பவித்ராவையும் அருணையும்தான் சொல்கிறேன்.

*வெ. அம்சதீபா, விளக்குடி.*

தொடக்கம் முதல் இறுதிவரை நல்ல விறுவிறுப்பு! பவித்திரா, மூத்தபெண் என்ற 'கதைத் திருப்பம்' அருமை! நாவலை முடிக்கும்போது... ஒரு நல்ல குடும்பப்படம் பார்த்த திருப்தி ஏற்பட்டது.

*ப. காளிதாசன், நீர்விளங்குளம்.*

"ராணி முத்து"வே... என் நெஞ்சில் நீ எவரெஸ்டு சிகரமாய் உயர்ந்துகொண்டே போகிறாயே... நல்ல நாவல்களை தந்து திகைப்படைய வைக்கிறாயே... என் மனம் என்னும் மாளிகையின் முடிசூடா ராணி நீதான்.

*சி. பூர்ணிமா, தாண்டாம்பாளையம்.*



நீரும், உதடுகளில் திருப்தியும் கசிந்திருந்தன.

அத்தனை நாட்களாய் உள்ளே சன்னமாய் குத்திய முள் இப்போது அழுத்தமாய் நெருடியது. யோகின் அருகே போய் அவரது தோளைப் பற்றி மெள்ளக் கேட்டாள்.

"ரவி வந்திடுவாரில்லை, மாமா?"

"அப்பப்ப படம் பற்றி கேட்கிறான். ஆனால், எப்ப இந்தியா திரும்புகிறான் என்பதுபற்றி வாய் திறக்கமாட்டேங்கிறானேம்மா."

"நீங்க சொல்லுங்க— முதலிலேயே பார்த்துட்டு, படம் எப்படி வந்திருக்குன்னு அவர் சொல்லணும்னு."

கனிவும் பெருமையாய் தன் நாயகியைப் பார்த்தார்— "அப்படி யாரேனும் வந்து சொன்னால்தானம்மா படத்தின் அருமை தெரியும்?"

அவரை முறுவலுடன் பார்த்தாள்.

"படம் அற்புதமாய் வந்திருக்கிறது. உங்களுக்குத் திருப்தி தானே?"

"அதனால்தான் தென்னிந்திய மொழிகளிலும் 'டப்' பண்ணப் போகிறோம்."

"அப்ப நம்ப பக்கமும் திரையிடப்படுமா?"

"முடியாது. ஆனால், பிராந்திய மொழி குறும்படங்களில் இது தனியிடம் பெறும்."

"நீங்க சொன்னால் அவர் வருவார், மாமா."

படத்தில் மூழ்கி இருந்தவளுக்கு வெளிஉலகம் பற்றி நினைப்பூட்டியது ரவி பற்றிய நினைவுகள்தான். அவர்களின் முதல் சந்திப்பு...

கசக்க கசக்க அவன் எரிந்து விழுந்தது! இனிக்க இனிக்க வைத்தது இவளுடைய சமையலை அவன் ரசித்து சுவைத்து சாப்பிட்ட நாள்.

அன்றுதானே 'தேனுகா' என்று முதன்முதலாய் அழைத்ததும் கூட? அதன்பிறகு இயல்பாய்... ஏன் தித்திப்பாகக்கூட பேசிய

சந்தர்ப்பங்கள்... அவன் வாங்கித் தந்த ஐஸ்கிரீம்! நீலச்சேலை!!

எல்லாமே பொக்கிஷ ஞாபகங்கள்!

ஏன் அப்படி?

அவனது மனதில் மற்றொருத்தி உண்டு என்பது முழுக்க அறிந்த பிறகும் ஏனிந்த ஈர்ப்பு? தறிக்கெட்ட தவிப்பு?

அவள் முன்பே முடிவு செய்துவிட்டாள்.

திரைப்பட முன்னோட்ட காட்சிக்கு அந்த நீல சேலைதான் என்று. அதைப் பிரித்தபோதுதான் அதன் முழு மினுமினுப்பும் விரிந்தது– அதோடு இணைக்கப்பட்டிருந்த இரவிக்கைத் துண்டில் கச்சிதமான துணி தயார்!

மழைநீர் சொட்டுகளைக் கோர்த்தது போன்ற நகை செட்டும் பொருத்தமாய் எடுத்து வைத்திருக்கிறாள்.

ரேணுகாதேவி பாணியில் அன்றிரவுக்கான அலங்காரம் எல்லாம் முடிவாகிவிட்டது. எல்லாம் அவனுக்காய்... தன் பரிசு சேலையில் தன்னைக் கண்டதும் அவன் கண்கள் சொல்லும் சேதியைப் படிப்பதற்காய்...

பாராட்டும் பரிவுமாய் அவன் முகத்தில் விரியப்போகும் புன்னகைப் பூவிற்காய்...

## 18

படத்தின் புகைப்படங்கள், படத்துறை பெருந்தலைகளின் புருவங்களை உயர்த்தின.

ரேணுகாதேவி, வடஇந்திய நட்சத்திரம் என்பதால் வடக்கே படம் பற்றிய கிளர்ச்சி அதிகம் என்றாலும் படத்தை உருவாக்கிய சிற்பிகள், முக்கியமாக நாயகி தமிழர் என்பதால் தென்இந்திய படப்புள்ளிகளும் ஆவலுடன் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.

'ஆளு அசத்தல். தூள் நடிப்பு. யாருப்பா அது தேனுகா?"

"மணிமாறன் நாடகக் குழுவில் இருந்துச்சாம்."



"நேராக பெரிய இடத்துக்கு போயிடுச்சே?"

"அடுத்து மயன் படத்துல முக்கிய வேடமாம்."

"எது? அந்த சரித்திர படத்திலா?"

"ம்... ஆனா மரத்தைச் சுத்தி ஆடிப் பாட வராதாம்."

பெருமூச்சுவிட்டாலும் பெருந்தலைகள் எல்லாம் படக் காட்சிக்கு கூடிவிட்டனர். முதலில் சென்னையிலும் மும்பையிலும் திரையிடுவதாய்த் திட்டம்.

இவளுக்கு மங்கலான தங்க முத்துகள் பதித்த ஆடையை நிபுணர் வடிவமைத்திருந்தாள்– பழுப்பு முத்தில் ஆபரணங்கள்.

"இதற்கான செலவே எக்கச்சக்கமாய் இருக்குமே?"

"இது உனக்கான உடை இல்லை, தேனுகா. நீ இதற்கான மாடல் மட்டுமே. இது மும்பை கோடீஸ்வரரின் மனைவிக்கு போயிடும்."

"ஒருத்தர் போட்டுக் கழற்றியதையா?"

"நடிகை தேனுகா போட்ட உடை என்பதால் அதற்குரிய மதிப்பு அது!"

ஆக, இந்த சிறு படத்துக்கு இத்தனை எதிர்பார்ப்பு! கவர்ச்சி!!

"தரமான படைப்புகளுக்கு எப்பவுமே மதிப்புண்டு, தேனுகா. படத்தை ரேணுகாவின் சில புகைப்படங்களோடு சி.டி.களாகவும் வெளியிடுறாங்க. படத்துக்கு எப்படி வருமானம் கிடைக்கும்னு நினைச்சது போக, லாபமே வரும்ங்கிற நிலை இப்போது."

மனதுக்குள் இறைவனுக்கு நன்றி செலுத்தினாள்.

'எல்லோருக்கும் லாபமாகவே அமையட்டும்... தனக்கும் இது ஒரு அற்புத அனுபவம்தான்... முக்கியமாக ரவியைச் சந்தித்தது! சற்றேனும் பழகியது!!'

பெரியப்பாவின் வேண்டுதலுக்கு இணங்கி அவன் பட வெளியீட்டு வைபவத்துக்கு வரலாம்... ஆனால், அதன்பிறகு?

**'உடைந்து போகும்தான்**
**ஆயினும் எத்தனை அழகு**
**நீர்மேல் குமிழி!'**

குட்டி கவிதை ஒன்று நினைவில் ஓடியது.

உடைந்துபோகுமென்று தெரிந்தே இவள் ரசித்த அழகுக் குமிழ் அவன்... இனம்புரியாத குதூகலத்தை இவளுள் குமிழிடச் செய்தவன்.

இப்பிரிவு, அவன் மீதான ஈர்ப்பை அதிகரித்தது. ஆனால், ரவிதேவுக்குள் எந்த பாதிப்பும் நேர்ந்திருக்காது. மற்றொருத்தி மேல் பிரமை கொண்டவனுக்கு தன்னைப் பற்றி நினைப்பு வருமா?

'அவர் போனில் பேசும்போது, நான் கேட்டதாய்ச் சொல்லுங்க மாமா' என்பதற்கு மேல், பெண்ணான இவளால் ஏதும் சொல்ல முடியவில்லை.

அவனுடன் நேர்ந்தது ரெயில் பயணிகளுக்கிடையே முகிழ்க்கும் திடீர் நட்புதான். பேசிப் பழகுவதோடு சரி. மறந்தே போகும் தொடர்புகள்.

அது தொடரவில்லையே என்ற மறுகலில் நியாயமில்லை. அதிலும் யமுனாவின் காதலைப் பற்றித் தான் இப்படி நினைப்பது, மருகுவது மகா தப்பு, பாவம்! ஆனாலும் ஒருமுறையேனும் அவனை பார்க்க, மனம் தவித்தது.

யோகின் இவளுக்கு எந்த பதிலும் தராமல் மழுப்பினார். "பயல் ஐரோப்பா முழுக்க சுற்றுகிறான்ம்மா. படக்காட்சி தேதியையும் சொல்லிட்டேன். அவன் தீர்க்கமாய் ஏதும் சொல்லலை."

"அவருடைய போன் நம்பர்?"

"செல் எண் போல ஏதோ நீளமாய் தந்தான். எழுதி எங்கே வச்சேன்னுகூட நினைப்பில்லை."

அழுத்திக் கேட்க முடியவில்லை. ஆனால், தவிப்பும் துக்கமும் அவளை அழுத்தின.

'காதல் நமக்கு எப்போதும் எதையேனும் தருகிறது. அவன் அருகே இருக்கையில் ஆனந்தத்தை– வெட்கத்தை! அருகே இல்லாதபோதோ தவிப்பு– துக்கத்தை.'

படத்தில் ரேணுகாதேவியாக தான் பேசிய ஒரு வசனம்



அவளுக்கு இப்போது முழுதுமாய் விளங்கியது!

அப்படியானால் இதுதான் காதலா?

அசடே... மற்றொருத்தியோடு பார்த்தவனிடம் நீயும் ஆசை வைக்கலாமா?

'காதல் ஒருவித தற்காலிக மனநோய். திருமணமானால் குணமாகிவிடும்!' என்று சிரிப்பார், மணிமாறன்.

யமுனாவோடு ரவிக்கு திருமணமானால் தனக்கு நோய் குணமாகும் போலும்!

"தேவதையாட்டம் தெரியுறே, தேனுகா. இந்த நீலம், உன் அழகை அலாதியாக்கிடுச்சு" பிரமிப்புடன் ஏற, இறங்கப் பார்த்தபின் மனமாரப் பாராட்டினாள், தன்மதி.

இயக்குநரின் மனைவியான அவளும் சற்று பரபரப்புடனேயே ஈடுபட்டிருந்தாள்.

"நன்றிங்க."

"நாலே மாதங்களில் எப்படி மாறிப்போயிட்டே? உழைக்கத் தயங்காத பொண்ணு நீ– கூடவே அதிருஷ்டமும் உண்டு போல."

நெற்றியில் இட்டிருந்த சந்தனக் கீற்றுக்குப் பொருத்தமாய் அதே நிற எளிய சேலையில் இருந்த தன்மதியின் கைகளைப் பற்றினாள், இவள்.

"எனக்குப் பயமா இருக்குதுங்க தன்மதி."

"எதுக்காம்? விலையாகாதுன்னு தெரிஞ்சும் எல்லோரும் ஆசை ஆசையாய் பண்ணின படம், இது. அந்த உழைப்பு வீண்போகலையே... சி.டி.க்கே பயங்கர கிராக்கி. இன்னும் தயார் பண்ணுறாங்க. விருதுகளும் நிச்சயம். பிறகென்ன?"

"ம்... எனக்கு இதெல்லாம் தெரியாத– புரியாத விவரம். யோகின் மாமாவும் பணம் பற்றிய பதற்றத்தில் இருந்தாரா?"

"பின்னே... படம் சின்னதானாலும் தேவைப்பட்ட காசு சொற்பமல்ல... யோகினிடம் அத்தனை காசு இல்லையே?"

"உங்கள் கணவர், டைரக்ஷனுக்கு பணமே வாங்கலைன்னு

சொன்னாங்க."

"அவருக்கும் யோகினின் கனவு பிடிச்சிருந்தது. அவருடைய நிதி நிலைமையும் தெரியும். அதான் இலவசமாக செய்து கொடுத்தார்."

"ம்ம்..."

"ஆனா, ரவி இல்லைன்னா இந்தப் படம் இல்லை."

"யார்... ரவிதேவா?"

"பின்னே? உலகம் முழுக்க சுற்றி சம்பாதிக்கும் பணத்தை இங்குதான் அனுப்புகிறார். அதிகக் கடனெல்லாம் வாங்கினால் வட்டி கட்டுறதுக்குள்ளே ஒடிஞ்சிடுவோம்."

"ஓ... மாமா ஏதும் சொல்லலை."

"ஆரம்பத்தில் ரவியிடமே யோகின் விவரமாய் ஏதும் சொல்லலை போல. பிறகு ரவிக்கு எப்படியோ யோகினின் இக்கட்டான நிலைமை புரிஞ்சு உதவினாராம்."

"இக்கட்டாய் என்ன நிலைமை?"

"ரேணுகாதேவியின் நினைப்பாய் ஒரு மோதிரம் மட்டுமே உண்டு. மாணிக்க மோதிரம். நவர்புகளுடைய காலத்தது. அதைக் கண்டு ரேணுகா ஆசைப்பட, அப்பமே இலட்ச ரூபாய் கொடுத்து வாங்கிப் போட்டு அழகு பார்த்தாராம்."

"அவங்க மேல அவர் வச்சிருந்த பாசம் அப்படி."

"அவங்க நினைவாய் இவருக்கு மிஞ்சிய அந்த மோதிரத்தை யோகின் விற்கப் பார்க்கிறார் என்றதும்தான் ரவி உதவிக்கு வந்தது."

மய்னின் அதட்டல், பெண்களின் பேச்சை வெட்டியது. "தன்மதி, உன்னை, தேனுகாவை கூட்டிட்டு வரச்சொன்னா, கதையடிச்சுட்டு நிற்கிறே... கிளம்புங்க பிளீஸ்..."

அறியாத முகங்களிடையே இவள் கொண்டுபோய் நிறுத்தப்பட்டாள்... அறிமுகங்கள் நடந்தன. ஆனால், எந்தப் பெயரும் முகமும் கருத்தில் பதியவில்லை.



படம் பற்றிய பதற்றம் தவிர அத்தனை கண்களும் பிரமிப்புடன் தன்னையே மொய்ப்பது உணர்ந்த கூச்சம்...

இன்னும் அவனைக் காணவில்லையே என்ற ஏக்கமுமாய் நின்றாள்.

விளக்குகள் அணைந்து, படம் ஓடியது.

எல்லாரையும் போல அவளும் அதில் ஒன்றினாள்.

படம், ஓடி முடிந்தது.

ரேணுகாதேவியின் நடிப்பாற்றல், கலைநுணுக்கம்... அதனோடு வரும் சன்னத் திமிர், ஒயில், அபார அழகு அனைத்தையும் உணர்ந்து... அது, முழுநிலவாய் பூரித்து ஒளிவீசும் முன்னே அழிந்த ஏக்கத்துடன் எல்லோரும் எழுந்தார்கள்.

இப்போது தன்னைப் பார்த்த பார்வைகளிலிருந்த பாராட்டு அவளுக்குப் புரிந்தது.

வார்த்தைகளால் வாழ்த்தினார்கள். புகழின் வெளிச்சம்... அவ்வெளிச்சம் தரும் போதை அவளுக்குப் பரிச்சயமாகத் தொடங்கியது.

"நன்றி. ஆனால், என்னுடையது சிறு பங்கு. நான் யோகின் சாருக்கும் டைரக்டருக்கும்தான் நன்றி கடன்பட்டவள்" என்று திரும்பத் திரும்ப சொன்னாள்.

அவளது நாடக மன்ற நண்பர்களும் இறுகக் கைப்பற்றி பாராட்டினார்கள்.

மணிமாறனுக்கு வார்த்தையே வரவில்லை. தலையில் கை வைத்து வாழ்த்தினார்.

பத்திரிகையாளர்களின் கேள்விகள் ஒருபுறம்...

அத்தனைக்கும் நடுவே அவளது கண்கள் அவனுக்காய் அலைபாய்ந்தன.

அவன் எங்கே? அவன் ஏன் வரவில்லை?

# 19

"நீ இந்த காரில் ஏறு, தேனுகா" யோகின் அவசரப் படுத்தினார்.

"அப்பா?"

"உங்க அப்பா என்னோடு வர்றாங்க. அவர் இத்தனை மகிழ்வாக சிரிச்சு இப்பதான் பார்க்கிறேன்ம்மா."

"நானே அவரை இப்படி பார்த்ததில்லையே, மாமா. அவர் முகமெல்லாம் எத்தனை பெருமை, பூரிப்பு?"

'எம்பொண்ணா இப்படி நடிச்சது? தேவதையாட்டம் இருந்தாள்... கடைசியில ஐயோ, இத்தனை அம்சமான நடிகை அல்பாயுசில போயாச்சுன்னு கண்ணை எல்லாம் கலங்கப் பண்ணிட்டாள்ன்னு மாய்கிறார்!"

"எல்லாத்துக்குமே நான் உங்களுக்குத்தான் கடமைப் பட்டிருக்கேன் மாமா!"

"காரில் ஏறும்மா... வெளியே போயிட்டு வரலாம்."

"இல்ல மாமா... என் கட்டிலில் படுத்தால்தான் இன்னைக்குக் கொஞ்சமேனும் தூங்க முடியும்."

"சரி, எல்லோருமாய் சேர்ந்து சாப்பிடலாம்."

"சரி மாமா..."

தாழ்வான காரினுள் ஏறி அமர்ந்ததும் அதன் இருட்டு மூலையில் யாரோ உட்கார்ந்திருப்பது புரிந்தது.

"யாரது?"

பதிலில்லை.

"டிரைவர்— காரை நிறுத்துங்க..." காரோட்டிக்கு உத்தர விட்டாள். அடுத்த மூலையிலிருந்து மிருதுவாய் குரல் வந்தது.

"நான்தான்— ரவிதேவ்..."



அதற்குள் கார், வேகம் குறைந்தது.

டிரைவர் தயக்கமாய்க் காணப்பட்டான்.

"ஓரமாய் நிறுத்தி, இறங்கிக்கோப்பா."

இறங்கிய ஓட்டுநரின் கையில் பணத்தைத் திணித்தவன்—

"முன்னே வந்து உட்காரு, தேனுகா" என்றான், உத்தரவு போல.

இறக்கை முளைத்ததுபோல அடித்துக்கொண்டது அவளது இதயம்.

இதுவரை அனுபவித்தது மகிழ்வு என்றாலும் இப்போது தான் மனம் நிறைந்திருந்தது. பசும்பால் சுவைதான் என்றாலும் அதில் பனங்கற்கண்டை சேர்த்துக் காய்ச்சினால் எப்படி தித்திப்பாக இருக்கும்?"

"எப்ப வந்தீங்க?"

"ஆறு மணிக்கு" காரை கிளப்பியபடி சொன்னான்.

"படம்... படத்தைப் பார்த்தீங்களா?"

"ம்..."

"இந்த சேலையைப் பார்த்தீங்களா?"

கேட்ட தன்னையே கடிந்துகொண்டாள். காரின் இருளில் அவன் பார்வை, பாவனை ஏதும் புலப்படவில்லையே...?

"பார்ப்பதை எல்லாம் நம்ப முடியலை..."

"நீங்க தந்த பரிசைக்கூடவா?"

இடறினாலும் இலகுவாய்ப் பேச முயன்றாள்.

"சேலை கட்டிய மாதரை நம்பாதேன்னு ஒரு அனுபவசாலி எழுதியே வச்சிட்டார்..."

"உங்களுக்கென்ன கோபம்? அதுதான் இதுவரை தகவல் ஏதும் சொல்லாமல்...?"

"கோபமில்லை... ஏமாற்றம், தேனுகா. காசுமேல் மோகமில்லாத வித்தியாசமான பெண் நீ என்று நினைச்சேன். கலையை மட்டுமே நேசிக்கும் அபூர்வ ரகம்ன்னு கணிச்சேன்..."

"எனக்குப் புரியலை..."

"எனக்கும்தான் புரியலை... நிஜ வாழ்க்கையில் நீ ஏன் நடிக்கணும்னு..."

அதுவரை அவளுள் கொப்பளித்த மகிழ்வெல்லாம் நொடியில் வற்றி, வறண்டது.

"என்னிடம் பணம் தேவையில்லை— சமாளிச்சிக்குவேன்னு சொன்ன நீ சில நாட்களில் பெரியப்பாகிட்ட பணத்துக்காக ஏன் போய் நின்னே, அழுதேன்னு புரியலை..."

மரத்த புத்தியைச் சிந்திக்கச் செய்தாள்.

"ஓ... அது..."

"பணம் தேவையான்னு கேட்டேன்... காசு உனக்கொரு பொருட்டில்லாதது போல பேசினவள் ஏன் பெரியப்பாவிடம் போகணும்?"

"என்னை நடிக்க அழைச்சது அவர்."

"படத்துக்கு பணம் போடுபவன் நான். கடன் வாங்கினது என்பேரில்."

"அதெல்லாம் எனக்குத் தெரியாதே... தவிர பெரியவர்கிட்ட கேட்பதுதான் முறை."

"எது முறை? அழுகையோடு கெஞ்சுறதா?"

இவளுக்குள் கோபம் கிளர்ந்தது.

"அந்நேரம் அங்கே யமுனா இருந்தாங்க... அவங்க சொன்னதை வைத்து... அதாவது உங்க காதலிங்கிறதால் அவங்க சொல்லுறதை எல்லாம் நம்ப அவசியமில்லை,"

"யமுனா— என் காதலி... இதென்ன புது வம்பு?"

இவளுக்கு வாயடைத்தது!

அவன் சொல்வது அல்லவா புது வம்பு... புரியாத வம்பு?

"நீ உடுத்தி இருக்கும் சேலைகூட ஒருவிதத்தில் அதற்கான பரிசுதானே?"

"எதற்கான? புரியும்படி பேசுங்க..."



"யமுனாவோடு நான் அதிகம் பழகினது உண்மை. சதா ஒரு பெண்— அதிலும் அழகிய பணக்காரப் பெண் தன்னைச் சுற்றுவதில் ஆணுக்கு பெருமிதம் உண்டாகும்... பல ஆண்கள் துரத்திய யமுனா, என்னைத் துரத்தியதில் கொஞ்சம் அசட்டுத்தனமாய் குழம்பிட்டேன்— அவளைக் கல்யாணம் செய்யலாமோங்கிறது வரை..."

"அப்படீன்னா இப்போது..."

"நான் யமுனாவைக் காதலிக்கலை. இதைப் புரிய வைத்த உனக்கு நன்றி."

"இதில்... இதிலே என் பங்கு என்ன?"

உலர்ந்த உதடுகளால் கேட்டாள்.

"எனக்கு அந்த பலூன் கதை சொன்னே..."

போக்குவரத்து குறைந்த சாலையில் கார், காற்றைக் கீறியபடி பறந்தது.

"ஓ... அன்னைக்கு காரில்! அது 'கொஞ்சம் விலகி இருந்தால் பிரியம் பலப்படும்'னு சொன்னேன்..."

"யமுனாவிடமிருந்து கொஞ்சம் விலகியதும்தான் தெரிந்தது, அதன் நிம்மதி? சதா அற்ப காரியங்களைப் பற்றிப் பேசியபடி 'ஷாப்பிங்' ஒன்றே பொழுதுபோக்காகக் கொண்ட அவள் இல்லாமல் ஆசுவாசமாய் இருந்தது."

"சாரி... நான் இப்படி ஒரு திருப்பத்தை எதிர்பார்க்கலை."

"நானே எதிர்பார்க்கலையே? எனக்கு அது ஒரு இனிய அதிர்ச்சி. சதா என்னையே செலவழிக்க வைக்கும் அவளோடு உன்னை ஒப்பிட நேர்ந்தது. பற்றில்லாத ஒரு கலை யோகி போலிருந்த உன்மேல் ஒரு பிரமிப்பு வந்தது.

நீ பெரியப்பாவை கவனிச்சவிதம், ஏன் எனக்கும்கூட பசி அறிஞ்சு உணவு பரிமாறிய பெண்மை, பதிலுக்கு எதுவும் எதிர்பாராத உன் கம்பீரம், ஏற்றுக்கொண்ட வேலையில் உன் பக்தி, சிரத்தை, இப்ப உன் திறமை எல்லாமே என்னை மடக்கிடுச்சு. ஆனா பெரியப்பாகிட்ட போய் ஏன் பணம்

கேட்டேன்னுதான்..."

"ஏன் கேட்டேனா? வீட்டு வாடகை கொடுக்க முடியவில்லை. வீட்டுக்காரர் வந்து கத்த, அவமானப்பட்டோம்... எங்க நிலைமையைச் சொன்னேன்... அது தப்பா?"

"இத்தனைப் பெரிய தொகையைக் கேட்டால் பெரியப்பா எங்கே போவார்?"

"உடனடியாய் ரெண்டாயிரம் தந்தாலும்கூட போதும்னு நினைச்சேன். நடன வகுப்புக்கே பத்தாயிரம்... ஆக மாமாதான் இருபதாயிரமாய்த் தந்தார்..."

காரின் வேகம் 'மளுக்'கென குறைந்தது.

இவளை வியப்புடன் திரும்பிப் பார்த்தான்.

"அவ்வளவுதானா? நீ கேட்டது இருபது இலட்சம் இல்லையா?"

"இலட்சமா?" இவள் கண்களோடு வாயும் சற்று விரிந்தது!

அது நடிப்பல்ல என்பது புரிந்தது... பாசாங்கு இல்லாத அவளது பளிங்கு முகம், சாலையோர விளக்குகளின் ஒளியில் மின்னியது.

"அப்படீன்னா பெரியப்பா ஏன் அந்த மோதிரத்தை விற்க நினைச்சார்?" அவன் தனக்குள்ளாகவே கேட்டது போலிருந்தது.

"எது? ரேணுகாதேவி மேடத்துக்கு மாமா தந்ததா?"

"ஆமா... அதுபற்றி உனக்கு தெரியுமில்லையா?"

"சற்றுமுன்... அதாவது இன்றுதான் தன்மதி சொன்னாங்க..."

"இதென்ன குழப்பம்?" என்றபடி காரை ஓரங்கட்டி நிறுத்தினான்.

"அந்த மோதிரத்தை விற்று 20 இலட்சம் நீ உனக்குத் தரச் சொன்னதாய்... யமுனா நேரடியாய் சொல்லலை... அனுமானித்ததாய்ச் சொன்னாள்."

"நீங்க நம்பிட்டீங்க..." மிக மெள்ளத்தான் சொன்னாள்.

காரின் கண்ணாடிகளை இறக்கிவிட அதுவரைக் காத்திருந்த



ஆவேசத்துடன் கடல்காற்று உள்ளே புகுந்து அவர்களைத் தடவியது.

"பெரியப்பா, ரேணுகாதேவிக்குக் கொடுத்த மாணிக்க மோதிரம், அது. நவாப் சொத்து. ரஷிய மன்னர் ஒருவர் பரிசளித்ததாம். அத்தனை தொன்மையானதுக்கு ரேணுகாம்மா ஆசைப்பட்டதால் ஒரு இலட்ச ரூபாய்க்கு பெரியப்பா அதை வாங்கினாராம்."

"கேள்விப்பட்டேன்."

இயல்பாகச் சொன்னாலும் தொலைதூரத்தில் கட்டிய சிங்கமாய்க் குமுறிச் சிறிய அலைகளைப் போலவே இவள் மனதுள்ளும் தத்தளிப்பு.

ரவி என்ன சொல்ல வருகிறான்... என்னதான் சொல்லப் போகிறான் என்ற குழப்ப குமுறல்...!

"அதை விரல்ல போட்ட அன்றுதான் விபத்து நேர்ந்து, ரேணுகாம்மா இறந்தது..."

"ஓ...?"

"அவங்க சாவுக்கு அந்த மோதிரம்தான் காரணம்ங்கிற மூடநம்பிக்கையில் அந்தம்மாவின் சொந்தக்காரங்க அதைப் பறிக்கலை... ஆக, அது பெரியப்பாவுக்கு மிஞ்சியது... இப்போது அதன் மதிப்பு பலமடங்காகி 20 இலட்சத்துக்கு சுலபமாய்ப் போகும்."

இவள் அவனையே பார்த்தபடி இருந்தாள்.

"உன்னை முதன்முறையாய் சிம்லாவில் பார்த்த அன்றுகூட அந்த மோதிரத்தை சொற்ப விலைக்குத் தட்டிப் போகப் பார்த்த ஒருத்தனை அடிக்காதக் குறையாய்த் துரத்தினேன். எல்லோரும் பெரியப்பாவை ஏமாற்ற நினைக்கிறாங்க என்கிற எண்ணம்—அதில்தான் உன்னிடம்கூட சிடுசிடுப்பாய் பேசிவிட்டேன்."

"அந்த மோதிரத்தை விற்கக்கூடாதுன்னு ஏன் நினைக்கிறீங்க?"

ஒரு நகைக்காகவா இத்தனை ஆர்வம் என்ற தொனியில் வினவினாள். "ஏன்னா, பெரியப்பாவின் ஆன்மாவே அதில்

இருக்கிறதாய் நினைக்கிறேன். காரணம்— அவர் அதில் ரேணுகாம்மாவின் ஆன்மா இருப்பதாய் நினைக்கிறார்."

"என்ன சொல்லுறீங்க?"

"தன் நிலாப் பெண் ஆசைப்பட்டதைத் தன்னால் வாங்கிக் கொடுக்க முடிந்த பெருமிதம், அவருக்கு. அந்தத் திருப்தியோடு அவங்க உயிர் பிரிந்ததுங்கிற மனநிறைவு. சின்ன ஒளியையும்கூட பிரமாதமாய்ப் பிரதிபலிக்கும் அந்த மோதிரம். அந்த ஜொலிப்பின் அசைவு ரேணுகாம்மாவின் உதடு பேசுவது போலவே அவருக்குத் தோன்றும். 'இது இருக்கும்வரை எனக்குத் தனிமை உணர் வில்லை' என்பார்."

இவளுக்கு யோகினின் உணர்வு புரிந்தது.

"முதலில் ரேணுகாதேவி பற்றி புத்தகம் எழுதுவதாய் இருந்தார். வழவழ தாளில் புகைப்படங்களுடனான உயர்தர புத்தகம்... உன்னைப் பார்த்ததும் சினிமாவாய் எடுக்கும் ஆசை அதிகரித்தது. அதுக்குள் பவர் அந்த மோதிரத்தை அற்ப விலைக்குத் தட்டிப் போக முயல... எனக்கு யார் மீதும் நம்பிக்கை இல்லை. கடைசியில்..."

"நானும் மாமாவிடம் பணம் கறக்கிறேன்னு நினைச்சீங்க."

"உன் மீதான என் நம்பிக்கையும் தகர்ந்தபோது ரொம்ப நொறுங்கிட்டேன். எல்லோருக்கும் வேண்டியது பணம்தான்னு புரிய, அதைத் தேடத்தான் ஓடினேன்."

"எங்கள் தேவை என்ன என்பதைக் கேட்காமல்..."

"உன்னிடம் கேட்கமுடியாதபடி கசப்பு... பெரியப்பாகிட்ட கேட்டால் மழுப்பினார். நீ முடிஞ்சதை அனுப்பு. மற்றதை சமாளிக்கிறேன்னார். 'தேனுகாவுக்கு எவ்வளவு பணம் தந்தீங்கன்னு?' கேட்டால் 'அதெல்லாம் உன் பிரச்சினை இல்லை'ங்கிறார்!"

"ஆயிரக்கணக்கான மைல்கள் தள்ளி இருக்கும் உங்களை வருத்தப்படவிடக்கூடாதுங்கிற எண்ணம்தான் அதுக்குக் காரணம்."

"தேனுகா, உன்னைப் பற்றி அடிக்கடி விசாரிக்கிறாள்ன்னு





பெரியப்பா சொன்னதுதான் ஒரே ஆறுதல்!"

இவளது முகம் 'ஜிவ்'வென சூடானது. பாதி வெட்கம்! மீதி கோபம்!!

"ஆனால், நீங்க என்னுடன் பேசவேயில்லை?"

"போனில் பேசியிருந்தால் இப்ப உன் முகத்தில் பார்த்த அந்த பாவனையை நான் ரசிச்சிருக்க முடியாதே?"

காற்றில் கலைந்த கேசத்தை ஒதுக்கும் சாக்கில் முகம் திருப்பினாள்.

"நீ 'இலட்சமா?' என்று திகைக்கவும்தான் யமுனா சொன்னது முழுக்கப் பொய்ங்கிறது புரியுது தேனுகா."

"ஆக, முதலில் அந்த நம்பிக்கை இல்லை."

"நிறைய ஏமாற்றுக்காரங்களைக் கண்டு மழுங்கிய புத்தி என்னுது. தேனுகா அழுதபடி உங்களிடம் வந்தாளாமேன்னு பெரியப்பாவிடம் விசாரிக்க, அவர் 'யாருப்பா இதெல்லாம் உன்னிடம் சொன்னா?'ன்னாரே தவிர மறுக்கலை.

ஆக அந்த அழுகை, இலட்சங்களுக்குதான்னு தப்புக்கணக்கு போட்டுட்டேன். மோதிரத்தை விற்க பெரியப்பா முயலுகிறார்ன்னு தகவல் வர, எல்லாம் உனக்காகங்கிற வருத்தம். இரண்டு பேரும் என்னிடம் மூச்சுவிடலையேங்கிற எரிச்சல்! ஆனால், இப்போ உண்மை புரிஞ்சிடுச்சு."

என்ன என்பதாய் திரும்பி அவனையே பார்த்தாள். இருவரும் மூச்சு விடவில்லை.

அவர்கள் பதுமைகள் அல்ல என்பதற்கு அவர்களது பலத்த நெஞ்சத் துடிப்பு மட்டுமே சாட்சி!

"நீயும் எல்லோரையும் போல பணமே குறின்னு இருந்தாலும் கூட எனக்கு நீ வேண்டும்!"

அதுவரை அனுபவித்த மகிழ்வெல்லாம் ஒன்றுமேயில்லை என்பது போல உள்ளே ஒரு இராட்சத ஆனந்த அலை பொங்கி எழும்பியது. அந்த அலையின் சிதறல்களில் கண்கள் துளர்த்தன.

"இன்று மட்டுமே நீ என்னைப் பற்றி நாலைந்து முறை



பெரியப்பாவிடம் கேட்டுவிட்டாயாம். ஆக, உனக்கும்..."

அவனையே விழுங்குவது போலக் காத்திருந்த தனது கண்களைத் தாழ்த்திக்கொண்டாள்.

"ஆக, என்னைப் பற்றி முழுக்கத் தெரியாமல், சந்தேகத்தோடு தான் வந்திருக்கீங்க."

"தப்புதான்" அவனது கைகள், பறந்த அவளது கேசத்தை ஒதுக்கிவிட்டு, மெள்ள அவளது குளிர்ந்த விரல்களைப் பற்றின.

"ஆனால், என்னையும் நீ புரிஞ்சுக்கணும், தேனுகா. கல்யாணங்கள் எல்லாம் முழுதும் புரிஞ்ச தம்பதிகளிடையேவா நடக்குது?"

இவளுக்கு நிமிரத் திராணியில்லை.

குனிந்த அவள் தலையை, தன் மார்போடு சேர்த்து அணைத்தான். அந்த வெம்மை... காதலின் இதம் அவளை சுகப்படுத்தியது.

"உன்னை நடிகையாய் பார்க்கவும் நான் பிரியப்படலை... ஆனால், பெரியப்பாவிடமிருந்து கற்றது– 'உன் திறமைகளை உலகுக்குக் காட்டு' என்பதாயிற்றே. ஏதோ சரித்திரப்பட நாயகியாய் அடுத்து நடிக்கப்போவதாய்?"

"கேட்டாங்க... அதற்கு வேறு நடிகை இல்லையா? ஆனா, எனக்கு இப்படி ஒரு 'ஹீரோ' இனி கிடைக்கமாட்டாரே?" கிசுகிசுத்தவளை இறுக்கி உச்சந்தலையில் முத்தமிட்டான்.

உச்சியில் மகிழ்ச்சி பொறிகள் கிளம்பி, அவளுக்கு உடலெங்கும் பூமழையாய்ச் சொரிந்தது.

"உன் வசனகர்த்தா வேலை போகலை... நீ நடிப்பதோடு, எழுதவும் வேணும்ங்கிறது என் விருப்பம். நம் கல்யாணத்துக்குப் பிறகும்..."

அவன் மார்பில் உதடுகளைக் குவித்து அவள் அழுத்தினாள்... மனதில் தாங்கொண்ணா மகிழ்வை வெளிப்படுத்த வேண்டியது இருந்ததே!

"தேனுகா, கொடுக்கிறதை முதல்ல கன்னத்தில் இல்லை என்

நெற்றியிலிருந்தாவது ஆரம்பிச்சிருக்கலாம்..." கேலி செய்தான்.

"இதெல்லாம் சரியாய்த் தெரியுது... நான் இருபது இலட்சம் கேட்டேன்ங்கிறதை மட்டும் நம்பிவிடுவதா?" 'இருபது போதுமா?'ன்னு என்னிடம் மாமா கேட்டாங்க. யமுனா பணக்காரப் பெண் என்பதால் அதை இலட்சம்னு நினைச்சுட்டாங்களோ?"

"அப்படியே வைத்தாலும் பெரியப்பா, மோதிரத்தை விற்க ஏன் ஆர்வப்படணும்?"

"நீங்க பணத்துக்காக அலையுறது தாளாமல் மாமா அப்படியொரு முயற்சியில் இறங்கி இருக்கக்கூடும். அவருக்கு உறவுன்னு இருப்பது நீங்கள் மட்டும்தானே?"

"எனக்கும் இதுவரை அவர் மட்டும்தான் தேனு... சிறுவயதிலேயே என் மேல் பாசம் காட்டியவர். அதனால் அவர் மனம் வாடக்கூடாதுன்னு..."

"மாமா இதைப்பற்றி என்ன நினைப்பார்?"

"ஆனந்தப்படுவார். ஆனா, இனி யாருக்காக என்றாலும், எந்நிலையிலும் நான் உன்னை விடமாட்டேன், தேனுகா. உன்னை சந்தேகித்ததுக்கு நான் தனியே இத்தனை மாதங்கள் மறுகியதே போதும்... ஒரு வாரத்தில் கல்யாணத்தை வச்சிடலாமா?"

"இன்னும் ஏழு நாளா?" சின்ன பெருமூச்சுடன் மறுபடி தன்னவனின் மார்பில் ஒய்யாரமாய் ஒண்டிக்கொண்டாள், தேனுகா.

இவனுக்கு, இனி இவள்தான் "நீங்காத நிலா."

**(முடிந்தது)** R. Elakkiya R. Sriram

---

*ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: ர. பாஸ்கரன், சிண்டிகேட் ஆர்ட் பிரஸ், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.*